# ஒன்றாம் தலாக்

எம்.பி.எம். நிஸ்வான்

# மூன்றாம் தலாக்

சிறுகதைத் தொகுதி

## எம். பி. எம். நிஸ்வான்

முஸ்லிம் சமுதாய மறுமலர்ச்சி இயக்கம்
பாணந்துறை.

| | |
|---|---|
| நூற்பெயர் | : மூன்றாம் தலாக் |
| ஆசிரியர் | : எம்.பி.எம். நிஸ்வான் |
| விடயம் | : சிறுகதைத்தொகுதி |
| மொழி | : தமிழ் |
| நூற்படிகள் | : 1000 |
| பதிப்பு | : முதலாம் பதிப்பு (2007.05.01.) |
| பதிப்புரிமை© | : திருமதி பௌசுல் இனாயா நிஸ்வான் |
| பக்கங்கள் | : 80 |
| நூலின் அளவு | : 147 X 215 MM |
| அட்டை வடிவமைப்பு.<br>பக்க வடிவமைப்பு | : எஸ்.எப்.எல். மொஹிடீன் ரஜா |
| ஒளியச்சுக்கோவை | : செல்வி ரம்ஸியா ஹாணீம் |
| விலை | : ரூபா 150/- . |
| அச்சிட்டோர் | : எம். ஆர். அச்சகம். |
| வெளியீடு | : முஸ்லிம் சமுதாய மறுமலர்ச்சி இயக்கம்<br>ஹேனமுல்லை.<br>பாணந்துறை. |
| நூல் கிடைக்குமிடம் | : எம்.பி.எம். நிஸ்வான்.<br>"ரஹ்மத்". 6 A. யோனக மாவத்தை.<br>வத்தல்பொளை.<br>கெசெல்வத்தை.<br>12550.<br>(பாணந்துறை.இலங்கை.) |

# மதிப்புரை

- பன்னூலாசிரியர் - கலாஜோதி - மௌலவி - காத்தான்குடி பௌஸ் (ஷர்கி)

அன்பர் எம்.பி.எம் நிஸ்வான் (ஜே.பி) அவர்களின் நூலுருப் பெறும் முதலாவது சிறுகதைத் தொகுப்பு "மூன்றாம் தலாக்" என்பதாகும். தென்னிலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பில், ஆக்கவிலக்கிய கர்த்தாவான நிஸ்வான் (ஜே.பி) மிக அமைதியாகவிருந்து எழுத்துலகத்தில் வெளிச்சம் தரும் கதைவானின் வெள்ளியாவார். அவர், காலம் காலமாக வரும் செய்தி ஏடுகளில் கதை எழுதி காலூன்றி நிற்பவர்.

ஜீலான் மத்திய கல்லூரி, பாணந்துறையில் நல்ல அனுபவசாலிகளை உருவாக்கிய பாடசாலை. பாடசாலை மாணவனாக இருக்கும்போதே 1965இல் சிறுகதை எழுதத் தொடங்கி விட்டார். இவரது முதலாவது கதை "அனுபவம் புதுமை" எனும் தலைப்பில் வெளிவந்த போது பேராசிரியர் அல்லாமா உவைஸ், இவரைத் தட்டிக்கொடுத்து எழுதுவதற்கு ஊக்கப்படுத்தியுள்ளார். நல்ல மனம் படைத்த கலைஞர், கவிஞர் கலைவாதி கலீல் இவரது கதைகளை நூல்வடிவம் பெற அடிக்கடி தூண்டி வந்துள்ளார்.

அதன் வெளிப்பாடாகவே "மூன்றாம் தலாக்" என்ற இந்த நூல் நம் கரத்துக்குக் கிடைத்துள்ளது. இந்த நூலின் பெயர், உள்ளே வரும் கதையின் ஒரு தலைப்பாகும். இக்கதைக்கு மூன்றாம் தலாக் என்று இஸ்லாமிய ஷரீஆ அமைப்பில் பெயர் வைத்துள்ளார். காரணம் இவ்வெழுத்தாளர் கனிசமான காலம் காதி நீதிபதியாகக் கடமையாற்றினார். அந்தச் சூழலில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை கதையாக வடிக்கிறார். இக்கதையில், பிரிந்து சென்ற கணவன் மீண்டும் மனைவியுடன் ஒட்ட நினைக்கின்ற போது - மார்க்கம் விதித்துள்ள கட்டளைக்கமைய இன்னுமொரு கணவனை மணமுடித்து வைக்கின்ற போது - ஒட்ட முடியாமல் தட்டுப்படுகின்றான்; தடுமாறுகின்றான்; தன்தவறை உணர்கின்றான்.

கதாசிரியர் இக்கதையை மிக லாவகமாக நகர்த்திச் செல்கின்றார். இந்திய இஸ்லாமிய எழுத்தாளர்களைப் போன்று அல்குர்ஆன் ஆயத்துக்களையும், ஹதீஸ்களையும் முன்வைக்கின்றார். இந்த அமைப்பு சிறுகதை வானில் சிறந்த மைல்கல்லாகும்.

"சலனம்" என்ற தலைப்பிலான கதை, ஒரு பெண்மணி தனது அந்தரங்க ஆதங்கங்களை - ஹாஜியார் ஒருவருக்கு தொலைபேசி மூலம் சொல்கின்றாள். அந்த ஹாஜியாரும் அவளது போன் நம்பரைப் பெறாமல், முகவரியையும் பெற முயற்சிக்காது, ஆத்மீக ரீதியாக அப்பெண்ணுக்குரிய மாற்று வைத்தியத்தை முன்வைக்கின்றார்; வெற்றியும் காணுகின்றார். பெண்ணும் ஆறுதலடைகின்றாள். இக்கதை, நவமணியில் பிரசுரமாகி நல்ல செல்வாக்கைப் பெற்றது. இக்கதை ஒரு வித்தியாசமான போக்கை உட்புகுத்தி நிற்கின்றது.

இத்தொகுதியில் அமைந்துள்ள அதிகமான கதைகள் மக்களின் மனதைத்தொடும் என எதிர்பார்க்கின்றேன். உண்மையும் அதுவே. இன்னும் கூறப்போனால்......

பழகுவதற்கு இனியவரான நிஸ்வான் ஜே.பி, கூற நினைக்கின்ற கருத்துக்களை ஒளிவு மறைவு இல்லாமல் எப்போதும் சொல்லிவிடும் ஆற்றலுடையவர். ஓய்வு பெற்ற ஆசிரியரான இவர் தனது அனுபவங்களை வைத்து நல்ல கதைகளைப் படைக்கின்றார்.

இவருடைய இளமைக்கால - புரட்சியான - சற்று வித்தியாசமான சிந்தனைப் போக்கினை இந்நூலில் அரங்கேறியுள்ள "சூன்யம்" என்ற கதை எடுத்தோதுகின்றது. இவரது இளமைக்காலக் கருத்துக்கள் எல்லாம் இவரை எழுத்தாளனாக்கவே தூண்டிக் கொண்டிருந்தன எனலாம்.

பாணந்துறை முஸ்லிம் சமுதாய மறுமலர்ச்சி இயக்கத்தின் அமைப்பாளராக இருந்து இவர் ஆற்றிய - இன்றும் ஆற்றிக்கொண்டிருக்கின்ற - கல்வி, சமூகப்பணிகள் கணக்கிலடங்காதவை.

வத்தல்பொல இஸ்லாமியப் பேரவையின் ஸக்காத் ஆலோசனை சபையின் செயலாளரான இவர், மிகவும் துன்பப்படுவோரை இனங்கண்டு மிகவும் நன்மை பயக்கும் காரியங்களைச் செய்துள்ளார்.

பாணந்துறைப் பகுதியில் நிஸ்வான் மாஸ்டர் கலந்து கொள்ளாத புனித வைபவம் கிடையாது என்றே சொல்லலாம். இத்துணை ஆற்றல் மிக்க கதாசிரியர் நிஸ்வான் ஜே.பி.யின் இந்நூலை அனைவரும் வாசிக்க வேண்டுவதுடன் அவர் மேலும் பல நூல்களைத் தரவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் அன்பன்,

தத்துவ வித்தகர்,

**மௌலவி அல்ஹாஜ் காத்தான்குடி பௌஸ்.**

# அணிந்துரை

சோசலிஸ சிந்தனை கொண்ட அபூதாலிப்.். அப்துல் லத்தீப்.். என்பவரை ஆசிரியராகக் கொண்டு "**இன்ஸான்**" ( மனிதன் ) என்றொரு வார ஏடு நான்கு தசாப்தங்களுக்கு முன் வெளிவந்து கொண்டிருந்தது. அது அரசியல் ஏடாக இருப்பினும், கலை இலக்கியத்துக்கும் முக்கியத்துவம் அளித்தது. நல்ல சிறுகதாசிரியர்கள் பலரை இலக்கிய உலகிற்கு வழங்கியது. அந்த வகையில் வை. அஹமத், ஓடையூர் எஸ்.எல்.எம் ஹனீபா, எம்.எச்.எம்.ஷம்ஸ், திக்குவல்லை கமால், மொயின் சமீன், எம்.பி.எம். நிஸ்வான், பூ வெளிக்கடை மன்ஸூர், மன்னிந்திக் கலீல், யாழ் றஹீம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இப்பட்டியலில் உள்ளோரிற் பெரும்பாலோர் இன்றில்லை. (ஒன்று எழுதுவதில்லை; அல்லது உயிருடன் இல்லை.) அந்த வகையில் பாணந்துறை எம்.பி.எம். நிஸ்வான், நீண்ட கால உறக்கத்தின் பின்னர் அண்மையில் எழுத ஆரம்பித்துள்ளார். அதுமட்டுமல்ல, ஒரு முழுமையான சிறுகதைத் தொகுதியையே வெளிக்கொணர்கிறார்.

முஸ்லிம் சிறுகதையாசிரியர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் நிஸ்வான் எனத் துணியலாம். இல்லையேல் அவரது கதைகளை "இன்ஸான்" பிரசுரித்திருக்காது.

சமூக நோக்கு, முற்போக்கு சிந்தனை, மௌட்டீக விரோதம், பெண் உரிமை, பிரபுத்துவ சார்பின்மை, சமநிலைச் சமுதாயக் கோட்பாடு, மார்க்க "வெறி" களைதல், மனித நேயம், உரிமைப் போராட்டம் போன்ற இன்னோரன்ன நற்கூறுகள் நிஸ்வானின் கதைகளில் இழையோடுவதை நான் அவதானித்திருக்கிறேன். எனது காலத்தில் - களத்தில் - எழுதியவர் என்பதனால் அவரது எழுத்தியல் வாதம் பற்றியும் நான் நன்கறிவேன்.

ஓர் ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றதன் பின்னர் காதி நீதவானாகவும் கடமை புரிந்தமையினால் மனிதச் சங்கிலியுடன் மிக நெருக்கமான உறவையும் பிணைப்பையும் கொண்டிருப்பவர் நிஸ்வான். அவரது அனைத்துக் கதைகளுமே அவரது வாழ்வியல் அநுபவங்களின் வெளிப்பாடுதான். அதில் ஐயமேதுமில்லை. ஆனால் அவ்வாழ்வியல் யதார்த்தங்களைக் கதையாகக் கூறும் பாங்கில் அழகியல் மேலோங்கி நிற்கிறது.

எடுத்துக் கொண்ட கருப்பொருளை கதையாக வடித்தெடுக்கும் போது மண்ணைப் பிசைந்து அழகிய பாண்டங்களை வடிவமைக்கின்ற, ஒரு கைவினைக் கலைஞனாகவே நிஸ்வான் மாறிவிடுகிறார். கதை நகர்த்தும் உத்தி (Presentation), பாத்திரங்களின் உரையாடல் (பேச்சு மொழி), சிறிய சிறிய பந்திகள், வெட்டொன்று துண்டு இரண்டாக சில விடயங்களுக்கு முத்தாய்ப்பு வைக்கும் பாங்கு "வளவள" வென்று நீட்டி முழக்கிக் கொண்டிருக்காமல் சுருக்கமாகவும் அதே வேளை இறுக்கமாகவும் கதை சொல்லுந்திறன், கருத்து நிலை வாதங்களைத் துணிச்சலுடன் முன்வைக்கும் "தைரியம்" ஆகியவற்றில் நிஸ்வான் சாதித்துள்ளார், அல்லது வெற்றி பெற்றுள்ளார் என்றே கூறவேண்டும்.

"**சலனம்**" என்ற கதை உளவியல் ரீதியானது. விரகதாபத்தில் தவிக்கும் திருமணமான முஸ்லிம் பெண்ணொருத்திக்கு மார்க்க ரீதியான பாதுகாப்புக் கவசம் இக்கதையில் அணிவிக்கப்பட்டுள்ளது. துணிச்சல் மிக்க கதை! "இரத்தக் கண்ணீர்" என்ற சிறுகதையைப் படித்த போது "வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இதுதானடா" என்றுதான்

பாடத் தோன்றுகிறது. கதை "விறுவிறு" வென்று நகர்கிறது; அல்ல... அல்ல... ஓடுகிறது.

"**மறுமணம்**" நிஸ்வானின் நல்ல கதைகளில் ஒன்றாகும். பலதார மணத்தின் அவசியம், உளவியல் ரீதியில் சித்திரிக்கப்படுகிறது. கதை சொல்லும் பாங்கும் சொற்செழுமையும் நன்றாயுள்ளன.

நூலின் மகுடமாய் அமையப்பெற்றுள்ள "**மூன்றாம் தலாக்**" என்ற கதை, யதார்த்தத்தைக் கூறுகிறது. "தலாக்" சொல்லும் விவகாரத்தில் ஒரு முஸ்லிம் எவ்வளவு கவனமாகவும் கண்டிப்புடனும் தீர்க்க தரிசனத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் போதிக்கிறது. கமரிய்யாவின் கணவன் இயாஸ், அவசரப்பட்டு மேற்கொண்ட முடிவு இவ்வளவு விபரீதமாக மாறியதை எண்ணி அவன் நெஞ்சுருகிப் போனான். கமரிய்யாவும் குரங்கு மனம் கொண்ட இயாஸைப் புறந்தள்ளி விட்டு தன்னுடன் பாடசாலையில் ஒன்றாகக் கல்வி கற்ற முற்போக்குச்சிந்தனையுடைய மாரிப்பைக் கரம்பிடிக்கிறாள். மனைவியின் தலையில் பேரிடியைத் தூக்கிப் போட்ட இயாஸின் தலையில் இறுதியில் பேரிடி விழுகின்றது! கதை சற்று நீளமாயினும் விறுவிறுப்புடன் நகர்கிறது. திருமணம் தொடர்பான மார்க்கச் சட்டம் தெட்டத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறே நிஸ்வானின் எல்லாக் கதைகளுமே ஏதாவதொரு பாடத்தைப் புகட்டுகின்றன; போதிக்கின்றன. நாற்பது வருடங்களுக்கு முன்னர் எழுதியிருப்பினும் (வசனநடை) சலிப்பின்றி வாசிக்கக் கூடிய வகையில் உள்ளது. பாணந்துறைப் பிரதேசம் கண்டெடுத்த மிகச்சிறந்த சிறுகதாசிரியர்களில் ஒருவர் நிஸ்வான் எனத்துணியலாம். அவர் சோர்வின்றித் தொடர்ந்து எழுதவேண்டுமென்பதே எம் வேணவா!

**கலைவாதி கலீல்,**
முன்னை நாள் உபபீடாதிபதி.
தர்ஹாநகர் கல்விக்கல்லூரி.
தர்ஹாநகர்.

# என்னுரை

அன்பும் அருளும் விழுமிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.....

இனிய உள்ளம் கொண்ட வாசக பெருமக்களே, உள்ளே புகுந்து சுவைக்க முன், என் உள்ளத்தை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

நீண்டகால அவாவொன்று இன்று நிறைவேறுவதையிட்டு முதற்கண் என்னைப் படைத்துப் பரிபாலிக்கும் இறைவனுக்கே நன்றி நவில்கின்றேன். தமிழ் பேசும் நல்லுலகத்திற்கு நாலு தசாப்த காலம் நான் எழுதிய சிறு கதைகளுள் பலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்வதையிட்டு என்னையும் உங்களில் ஒருவனாக ஏற்றுக் கொள்வீர்கள் என எண்ணுகின்றேன்.

தொன்மையான தமிழ் மொழியை பண்டைய நாள் தொட்டு அழியாத பொக்கிஷமாக வளரச் செய்வதில் இஸ்லாமியரின் பங்கு அளப்பரியது. இஸ்லாமியர் தம்மை, தனி இன சமயக் குழுவாக அடையாளம் காட்டினாலும் மொழி ரீதியாக தமிழ் மொழிக்கு தனித்துவம் கொடுக்கின்றனர். இலங்கையில் பொதுவாக வடக்கு, கிழக்கில் தமிழ் மொழி ஆட்சி புரிந்தாலும் ஏனைய பகுதிகளில் இஸ்லாமியர் சிங்கள மொழிக்கு மத்தியில் செறிந்து வாழும் பகுதிகளிலும், கிராமமாக குக்கிராமமாக வாழ்ந்தாலும் அங்கெல்லாம் வீட்டு மொழியாக தமிழை வளர்ப்பவர்கள் முஸ்லிம்கள். வீட்டு மொழி, கல்வி மொழி ஆகியவற்றுக்கிடையே தமிழ் மொழியில் வேறுபாடு இருந்த போதிலும் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு உயர் தமிழ் மொழியிலே உள்ளதை எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. எனவே இச்சிறுகதைகள் தமிழ் மொழிக்கு நான் செய்யும் சிறு தொண்டாக இருக்கும் என நம்புகிறேன்.

சிறுகதை, நாவல் என்பவை தமிழ் மொழிக்குப் புதியவை என்றாலும் தமிழில் தொன்று தொட்டு கதைகள் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. தமிழில் சிறுகதைக்கும் நாவல் எனும் நெடுங்கதைக்கும் இலக்கணம் வகுத்தோர் பல விதமாகக் கூறினாலும் நான் அறிந்த மட்டில் சமூகம் என்ற வீட்டினுள் இருந்து சாளரம் மூலம் காண்பது சிறுகதை என்றும் கதவைத் திறந்து பார்ப்பது நாவல் என்றும் குறிப்பிடலாம். இதன் அடிப்படையில் சிறுகதைகள் வாசகர்களின் சிந்தனையிலே முடிவு காண வேண்டும். இந்த வழியில் என்னால் படைக்கப்பட்ட சிறுகதைகளும் அடங்கும் என நம்புகின்றேன்.

சிறுவயதில், தினகரன் மாணவர் பகுதியில் கட்டுரை எழுத ஆரம்பித்த நான், பல பத்திரிகைகளில் கட்டுரை எழுதினேன். அவை ஒன்றும் என் கைவசம் இல்லை; ஆனால் என் முதல் சிறுகதை என் கையில் இருந்தது.

நான் எழுதிய என் முதல் சிறுகதை அன்றைய ஜனரஞ்சக பத்திரிகைகளில் ஒன்றாகிய "ராதா" இதழில் 1965ம் ஆண்டுக் காலப்பகுதியில் வெளிவந்தது. என் கதை வெளிவந்த அன்று எனக்குத் தெரியாது. நான் காலை வேளை வீட்டுத் தேவை ஒன்றுக்காக கடை வீதிக்கு செல்லும் நேரம் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை வகைப்படுத்தி தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்திய நற்றமிழ் மொழி அறிஞர் அல்லாமா ம.மு. உவைஸ் அவர்கள், அவர் வீட்டு கேட்டடி வாசலில் இருந்து கைகளைத் தட்டி முகம் மலர "அடே நிஸ்வான்..... இங்கே வா..... ஓன்ட கத பேப்பரில வந்திருச்சிய" என்றார்..... நான் அவர் அருகே சென்று "எந்த பேப்பரிலே...?" எனக் கேட்டேன்... "அது இந்த கெழம ராதா பேப்பரில வந்திருச்சிய... நல்ல கதை...." என்றார்.... (உவைஸ் ஹாஜியார் அவர்கள் எம்முடன் கதைக்கும் பொழுது எமது பிராந்திய மொழியிலேதான் கதைப்பார். அவர் கொள்கை அப்படி. சற்றும் பெருமை இல்லாதவர்; வல்ல நாயன் அவர் சேவையை ஏற்றுக் கொண்டு ஜென்னத் என்னும் சுவர்க்கத்தை அருள்வானாக!) எனக்கு

மட்டில்லா மகிழ்ச்சி... ஓடினேன் பத்திரிகைக் கடைக்கு; "ராதா" இதழை வாங்கினேன். என் பெயருடன் - சித்திரம் வரையப்பட்டு - கதை வெளிவந்திருந்தது.

அன்று எனக்கேற்பட்ட சந்தோஷத்துக்கு அளவே இல்லை... இன்றும் பசுமை நிறைந்த நினைவாக அது இருக்கின்றது. அப்பத்திரிகையில் தொடர்ந்து எழுதினேன். இஸ்லாமிய எழுத்தாளர் பலரை உருவாக்கிய "இன்ஸான்" பத்திரிகை வெளிவந்தது. நானும் அதில் தொடராக பல கதைகளை எழுதினேன். இந்நேரத்தில் - பலப்பிட்டி அரூஸ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு "ஜும்ஆ" மாதாந்த இதழ் வெளிவந்தது. அதிலும் எழுதினேன். நானும் "ரமழான் மலர்" எனும் தொகுதியை வெளியிட்டேன்... இதன் பின் நான் சிறிது காலம் எழுத்துப் பணியிலிருந்து விலகியிருந்தேன். இடையில் 1975ம் ஆண்டு குரு / கல்கமுவ பிரதேசத்தில் ஜாகம எனும் ஊரில் அல் - ஹகீம் வித்தியாலயத்தில் பதில் அதிபராகக் கடமை புரிந்த காலத்தில் விளையாட்டுப் போட்டிகளுடன் கலாசார நிகழ்வுகளையும் அறிமுகம் செய்தேன். அதில் "பணம், பொருள், பாசம்" என்ற பெயரில் நாடகமொன்றை எழுதி, அதை நெறிப்படுத்தி ஊரார் ஒத்துழைப்புடன் அரங்கேற்றினேன். அங்கே அதுவரை எவரும் அறிமுகப்படுத்தாத ஒன்று என்னால் அறிமுகப்படுத்தப்பட்டதால் நல்ல வரவேற்பைப் பெற்றது. அதன் பின் நான் படிப்பித்த பாடசாலைகளில் மாணவர்களுக்காக குறுநாடகங்கள் எழுதியும், கவிதைகள் எழுதியும் உள்ளேன்.

இப்படி இருக்கையில் சகோதரர் கலைவாதி கலீல் அவர்களை - சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. உண்மையில் நல்லதொரு மனிதனை அல்லாஹ் அறிமுகஞ் செய்து வைத்தான் என்பதையிட்டு சந்தோஷப் படுகிறேன். அவர்தான் என்னை எழுத மீண்டும் தூண்டினார். நானும் நவமணி பத்திரிகையில் சிறுகதை, கவிதைகள் வரைந்தேன். நவமணி உதவி ஆசிரியர் அல்ஹாஜ் ஏ.எல்.எம். சத்தார் (ஷபீக்) ஆதரவு தந்தார். மேலும் கலைவாதி அவர்கள், "பத்திரிகைகளில் கதைகள் வெளிவந்தாலும் அது மங்கிவிடும். புத்தக ரூபமாக வெளிவந்தால் எழுத்துலகில் மறைந்து வாழும் உங்களையும் இனம் காண்பார்கள்" எனக் கூறினார். நீண்ட காலமாக என் அடிமனதில் பதிந்திருந்த எண்ணம் ஊற்றெடுத்தது. புத்தகமாக வெளியிட ஆசைப்பட்டேன். ஆனால் நான் எழுதிய கதைகள் பல என் கைவசம் இல்லை.... நான் அறிந்த - பத்திரிகைத் தொடர்புடைய - பலரை விசாரித்தேன். காலஞ்சென்ற பிரபல எழுத்தாளரும் கவிஞருமான எம்.எச்.எம். ஷம்ஸ் அவர்களிடம் "இன்ஸான்" பத்திரிகையின் தொகுப்பு இருந்ததாக அறிந்தேன். உடனே அவர் மகன் எம்.எஸ்.எம். பாஹிம் அவர்களை தொடர்பு கொண்டேன்.... அவரிடம் இன்ஸான் தொகுப்பு இருந்தது. அவரை காண என் மனைவியுடன் வெலிகம சென்றேன். எனக்கு தேவையான - இன்ஸானில் வெளிவந்த - கதைகளைப் பெற்றுக்கொண்டேன். மர்ஹூம் ஷம்ஸ் அவர்களின் பாரியார் உட்பட அவர் குடும்பத்தார் எல்லாரையும் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

பலப்பிட்டி அரூஸ் அவர்களின் வீடு சென்று அவரைச் சந்தித்தேன். அங்கே ஜும்ஆ பத்திரிகைத் தொகுப்பு சுனாமியால் பாதிக்கப்பட்டிருந்தது. என்றாலும் என்னால் தொகுத்து வெளியிடப்பட்ட "ரமழான் மலர்" பத்திரிகை அவர் கைவசம் இருந்தது. எதிர்பாராமல் எனக்குக் கிடைத்த மலரைக் கண்டவுடன் மட்டில்லா மகிழ்ச்சியுடன் அதைப் பெற்றுக் கொண்டேன். அரூஸ் அவர்கள் செய்த உதவி மறக்க முடியாத தொன்றாக நினைவு கூர்கின்றேன்.

முஸ்லிம்களின் தரமான பத்திரிகையான "அல் ஹஸனாத்" காரியாலயம் சென்றும், அங்கே எனக்குக் கதைகளைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை.... இன்ஷா அல்லாஹ் மீண்டும் இன்னொரு தொகுதி சிறுகதை வெளியிடச் சந்தர்ப்பம் கிடைத்தால் அப்பத்திரிகையில் வெளிவந்த கதைகளை வெளியிடுவேன். அன்று எனக்காக நேரத்தை ஒதுக்கிய அல்ஹஸனாத் உதவி

ஆசிரியர் அவர்களுக்கும் முன்னால் அல் ஹஸனாத் ஆசிரியரும் இந்நாள் "பிரபோதய" சிங்கள இதழ் ஆசிரியருமான அல்ஹாஜ் எஸ்.எம். மன்சூர் அவர்களுக்கும் என் நன்றி.

தனது வாசிப்புக் கூடத்திலிருந்து நான் தேடிய "பிறைப்பூக்கள்" சிறுகதைத் தொகுதியைத் தந்துதவிய தத்துவ வித்தகர் அல்ஹாஜ் காத்தான்குடி பௌஸ் மௌலவி (ஷர்கி) அவர்களுக்கும் எனது நன்றி; எல்லாவற்றிற்கும் மேலாக முப்பத்தைந்து வருடகாலத்துக்கு மேல் என் சுகதுக்கங்களில் பங்கு கொள்ளும் என் உயிரினும் இனிய என் மனைவியின் பங்களிப்பு இல்லையெனில் இத்தொகுதியை என்னால் வெளியிட முடிந்திருக்காது.... மிகைத்துக் கூறுவதல்ல; உண்மை அதுதான்.

மேலும் இக்கதைத் தொகுதியை அழகுற அச்சிட்டுத் தந்த பிரபல எழுத்தாளரும் V4U பதிப்பகத்தின் உரிமையாளருமான 'கதைவாணன்' மொஹிடீன் ரஜா அவர்களுக்கும், வெளியீடு செய்த பாணந்துறை முஸ்லிம் சமுதாய மறுமலர்ச்சி இயக்கத்தினருக்கும், அணிந்துரை வழங்கிய பிரபல எழுத்தாளர் - கலாபூஷண் - கலைவாதி கலீல் அவர்களுக்கும், மதிப்புரை வழங்கிய பன்னூலாசிரியர் - தத்துவ வித்தகர் - அல்ஹாஜ் பௌஸ் மௌலவி அவர்களுக்கும், பின்னட்டையில் என்னைப் பற்றி உரைத்துள்ள சக கலை, இலக்கியவாதிகளான, ஏ.ஆர்.எம். ஜிப்ரி, எம்.கே.எம். அஸ்வர், ஏ.எல்.எம். சத்தார், யாழூர் ராஸீக் ஆகியோருக்கும், கணினியில் அச்சுக்கோத்துத் தந்த செல்வி றம்ஸியா ஹாணீம் அவர்களுக்கும் மற்றும் எனது இக்கதைத் தொகுதியை வாசிக்கும் எல்லா வாசகர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*இத்தொகுதியில் இடம்பெறும் எந்தவொரு கதையும்*
*இந்த பூமிப்பந்தில்*
*இருந்தோர், இருப்போர் எவரையும்*
*குறிப்பிடவில்லை;*
*அவை முற்றிலும் கற்பனை வடிவங்களே.*

- இன்ஷா அல்லாஹ் சந்திப்போம். -

சகோதரன் எம்.பி.எம். நிஸ்வான்.

"ரஹ்மத்" 2007.05.01.
6 A. யோனக மாவத்தை. தொ.பே.03822 97309.
வத்தல்பொளை.
கெசெல்வத்தை. 12550.
(பாணந்துறை.
இலங்கை.)

# பொருளடக்கம்

01.மறுமணம் 11
02.நியதி 17
03.சூனியம் 22
04.மூன்றாம் தலாக் 27
05.சலனம் 35
06.அனுபவம் புதுமை 38
07.மௌன ராகம் 42
08.புதுயுகம் 47
09.புனித ரமழானிலே.... 50
10.தியாகத் திருநாள் 52
11.சோதனை...வேதனை...சாதனை.... 55
12.துன்ப ராகங்கள் 58
13.இதுதான் நாகரிகம் 61
14.பேரம் 64
15.கொடை 68
16.முறையீடு 71
17.இரத்தக்கண்ணீர் 74
18.பணம் பந்தியிலே.... 77

## இவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்....

காலஞ்சென்ற

எனது அன்புப் பெற்றோர்களான முஹம்மது லெப்பே பிச்சைபாவா (இஸ்மாயில் மரிக்கார்), அலியா மரிக்கார் முத்துநாச்சியா ஆகியோருக்கும்

எனது மனைவியின் அன்புத் தகப்பனாரும் எனது மாமனாருமான மர்ஹூம் சுல்தான் மரிக்கார் அப்துல் காலித் அவர்களுக்கும்

எனது அன்புச் சகோதரன் மர்ஹூம் அல்ஹாஜ் காரி அப்பான் அன்வர் அவர்களுக்கும்

எனது மைத்துனர், பன்னூல் ஆசிரியர் மர்ஹூம் அல்ஹாஜ் ஏ.எம். ஷாஹுல் ஹமீத் அவர்களுக்கும்

மற்றும்

என் மனைவியின் அன்புத் தாயாரும் எனது மாமியாருமான ஆவில மரிக்கார் சித்தி ரெலினா அவர்களுக்கும்

எனக்கு ஆரம்பக் கல்வி முதல் அறிவூட்டிய ஆசான்களுக்கும்

திருக்குர்ஆன் ஓதக் கற்றுத் தந்த உலமாக்களுக்கும்

இச்சிறுநூலைச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

– நூலாக்கியோன். –

மறுமணம் என்ற கதை பலதார மணத்தின் அவசியத்தை உடலியல் உளவியல் ரீதியில் சித்தரித்து, இஸ்லாமிய சோலையுள் நம்மை அழைத்துச் சென்று, கோட்பாடுகள் என்னும் நறுமலர்களை நாம் நுகரும்படி செய்கின்றன - அ.ஸ. அப்துஸ்ஸமது - B.A (Hons)

# மறுமணம்

சுபஹ் பாங்கு ஒலிக்கிறது. நான் அதுவரை ஓதிய குர்-ஆனை மூடிவிட்டு, பாங்கிற்குப் பதில் கூறினேன். அவரும் படுக்கையிலிருந்து எழுந்துவிட்டார்.

சுபஹ் பர்ளை முடித்துக்கொண்ட நான், காலைக் கோப்பிக்காக தண்ணீரைக் கொதிக்கவிட்டேன். பள்ளிக்குச் சென்ற அவர், திரும்பி வந்துவிட்டார். நான் கோப்பியை ஊற்றி அவருக்காக எடுத்துச் சென்றேன். ஸ்பிரிங் கட்டிலில் வசதியாக உட்கார்ந்து திருக்குர்-ஆனை ஓதிக் கொண்டிருந்த அவர், என்னை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார்.

இவ்வளவு நாளும் வேலைக்காரியால் நடைபெற்றவை வழக்கத்துக்கு மாறாக இயங்குவதைப் பார்க்கும்பொழுது அவருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் அது எனக்கு மனநிறைவையும், பரவசத்தையும் தந்து கொண்டிருக்கின்றது. கோப்பியைக் குடித்த அவர், விழிகளை மூடிக்கொண்டு மௌனமாகப் படுத்திருந்தார். அவர் தூங்கவில்லை; எதையோ சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்பது அவரது மாறும் முகபாவத்திலிருந்து தெரிந்தது.

சிறிது நேரம் அவரைப் பார்த்துக் கொண்டிருந்த நான் வெளியே வந்தேன். ஊமைப்படம்போல என் கடந்தகால நினைவலைகள் என் உள் மனதில் உணர்ச்சிகளை வாரிக்கொண்டிருந்தன. நான் பளீரென்று சுடர்விடும் அழகியல்ல; மாநிறத்தவள்தான். என்றாலும் தங்கமும், வைரமும் வெளிநாட்டு உயர் ரக சாரிகளும் அணிந்துகொள்ளும் செல்வச் செழிப்பிலே பிறந்தேன். படிப்பு வாசனை இல்லாத குடும்பத்தில், படிப்பதை இலட்சியமாகக் கொண்டு படித்துப் பட்டமும் பெற்றேன். தொழில் பார்க்கும் அவசியம் இல்லாததால் பட்டாம் பூச்சி போல் பறந்தேன். என்றாலும் இயற்கை சும்மா இருக்கவில்லை. அது என் பருவத்துக்குரிய பரிசை குறைவின்றித் தந்து கொண்டிருந்தது. இதன் காரணமாக பெற்றார் விருப்பப்படி எனது திருமணமும் ஊர் வியக்க பெரிதாக நடந்தேறியது.

நாட்கள் ஓடின... என் உள்மனதில் நீண்ட காலமாகச் சுடர்விட்ட இலட்சியத்தாகம் நிறைவேறும் நாள் என் தோழிகள் மூலம் எனக்கேற்பட்டது.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என கலாசாலையில் படிக்கும்பொழுது மார்தட்டிக் கூக்குரலிட்டோம். கலாசாலை வாழ்வின் பின் அவை புதைந்துவிட்டன. புதைந்துவிட்ட நெருப்பு சுடர்விடவேண்டும் என நான் எண்ணியிருந்தேன். என் எண்ணங்கள் நண்பிகள் மூலம் நிறைவேறின. சந்தோஷத்துடன் அவர்கள் கூட்டிய மாதர் மன்றத்தில் நானும் அங்கத்தவளானேன்.

ஊரிலே எமக்குப் பூரண ஆதரவு கிடைத்தது. பல முற்போக்கான திட்டங்கள் எம்மால் செயலாக்கப்பட்டன. என் கணவர் உட்பட பல

பணக்காரர்கள், படித்தவர்கள் பல வழிகளிலும் இயக்கம் வெற்றி பெற உழைத்தனர்.

காலங்கள் கடந்தன; நான் மாதர் மன்றத் தலைவியானேன். பெரிய இடத்துப் பெண்கள் பலர் எமது இயக்கத்தில் சேர்ந்தனர். நாகரிகம் என்ற பெயரில் மேலைத்தேய கண்மூடிக் கொள்கைகள் எமது இலட்சியங்களாக மாறின. அந்த இலட்சியங்கள் எம்மிடையே வெறியாக மாறும்பொழுது நான் தீவிரவாதியானேன்.

இரண்டு வருடங்கள் எப்படியோ ஓடிவிட்டன. எந்த ஒரு பிரச்சினையும் இல்லாதிருந்த எனது இல்லற வாழ்வில் பூகம்பங்கள் வெடிக்கத் தொடங்கின. அவரின் நல்ல மனதை நான் பலவீனமாகப் புரிந்துகொண்டேன். தவித்தோடி வந்தவரின் மன நிலையைப் புரிந்து கொள்ளாமல் இரு கைகளினால் தடைச்சுவர் எடுக்க எண்ணினேன். இலட்சிய வெறிகொண்ட எனக்கும் அவருக்கும் இடையே வாக்குவாதம் முற்றியது.

"பெண்களுக்கு மாதர் மன்றம் முக்கியம். நல்ல முற்போக்கான செயல் திட்டங்கள் எமது சமூகப் பெண்மணிகளிடம் இருக்க வேண்டும். இதனாலேதான் நானும் உங்கள் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு தந்தேன். என்றாலும் இலட்சியம் என்ற பெயரில் அருட்கொடைகளை ஒழிக்கத் துணியக்கூடாது. தமக்கென ஒரு தனித்தன்மை இல்லாது போய்விடும் என்ற பயத்தின் காரணமாக இன்றைய பெண்மணிகள் ஏதேனும் ஒரு தனிச்சிறப்பைத் தேடிக்கொள்ள விளையும் அவசரத்தில் தமது பண்பாடு கலாசாரங்களை மறந்துவிடத் துணிகின்றனர். நீயும் இதற்கு விதிவிலக்கல்ல... என்ன செய்ய...? ம்... எல்லாம் அவன் செயல்... காலம் பதில் கூறட்டும்." என பலவாறாகக் கூறிய அவர், அதன் பிறகு ஒன்றுமே பேசவில்லை.

மௌனமாகச் செல்கிறார்... 'என்னை விலக்கிவிடுவாரோ...? டேகிட்... ஈஸி... போனால் போகட்டும்' என நினைத்திருந்த எனக்கு ஒன்றுமே புரியவில்லை... அவர் என் வழிக்கே வரவில்லை... ஒதுங்கியே இருந்தார்.

மலரை அரிக்கத் தொடங்கும் வண்டுபோல எமக்கு ஆதரவு தந்தோர் எம்மை எதிர்க்கத் துணிந்தனர். எமது இலட்சியங்களைப் புகழ்ந்தோர் எதிர்ப்பு முன்னணி அமைத்துச் செயல்பட்டனர்.

பல பகுதிகளிலும் எதிர்ப்புகள் கிளம்ப, மாதர் இயக்கம் ஆட்டங்கண்டது. சிலர் கணவர்களை ஒதுக்கினர். பலர் எமது இயக்கத்திலிருந்து ஒதுங்கினர். ஒதுக்கினவர்களை வீராங்கனைகள் எனப் புகழ்ந்தோம். ஒதுங்கியோர்களை கோழைகள் என இகழ்ந்தோம். "திமிர் பிடித்த கழுதைகள்" என்ற அடைமொழி எமக்கு ஊரிலே கட்டப்பட்டது. எங்கும் எமக்கு அதே பெயர். எமது சட்டங்களே எம்மை சுழன்று சுழன்று தாக்கின. என்றாலும் வைராக்கியத்துடன் செயல்பட்டோம்.

எமது வைராக்கியங்கள் ஒவ்வொரு வீட்டிலும் எரிமலைகள் வெடிக்கச் செய்தன. எங்கு எது நடந்தபோதிலும் எங்கள் வீட்டில் எதுவும் நடைபெறவில்லை. அவர் என்னை விவாகரத்துச் செய்யவுமில்லை; எதுவிதக் குறைவுகளும் வைக்கவுமில்லை. இருந்தும்...? நான் அவரை மதிக்கவில்லை; கையாலாகாதவர் என எண்ணியிருந்தேன்.

அது தவறு என்பதை அன்றுதான் உணர்ந்தேன். எமது மாதர் மன்ற சட்டங்களினால் நாம் வழிகேட்டில் சென்றுகொண்டிருக்கிறோம் என்பதை அந்தச் சம்பவமே எனக்குக் கூறியது.

அன்று ஞாயிற்றுக்கிழமை... நான் எனது அறையில் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தேன். நான் அன்று வீட்டிலிருப்பது அவருக்குத் தெரியாது. அவர் தன் பால்ய நண்பர் மிஸ்டர் பொன்சேகாவுடன் பேசிக்கொண்டிருந்தார்.

சிறிய வயது முதல் மிஸ்டர் பொன்சேகாவும் அவரும் இணைபிரியாத் தோழர்கள். நீண்ட காலமாக வெளிநாட்டில் வியாபாரஞ் செய்த பொன்சேகா அன்று எங்கள் வீட்டுக்கு வந்தது அவருக்கு பெரிய சந்தோஷத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. பலவித விஷயங்களை காது வெடிக்க கதைத்துக்கொண்டிருந்த அவர்கள் அமைதியாக அதுவும் ஸீரியஸாக கதைப்பது என் காதில் விழுந்தது.

ஒற்றுக் கேட்பது என் வழக்கமல்ல; என்றாலும் என் பெயர் அடிபட்டதால் காது கொடுத்துக் கேட்டேன்.

"உங்க மனைவியின் போக்கைப்பற்றி ஊரே கதை சொல்லுது. ஆண்கள் யாரையும் மதிப்பதில்லையாம். ஏன் உங்களைக்கூட மதிப்பதில்லையாம். எதற்காக அர்த்தமில்லாத இந்த வாழ்வு வாழவேண்டும்? பேசாம "டைவர்ஸ்" பண்ணிவிடுங்கள். இல்லையேல் மறுமணம் செய்துகொள்ளுங்கள். உங்கள் மதம் மறுமணத்தை ஆதரிக்கிறதே... ஏன் கவலைப்பட வேண்டும்?" என்றார் பொன்சேக்கா.

"சே... என்ன கதை சொல்கிறீர்கள்...? என்னைப்பற்றி இவ்வளவு தெரிந்த நீங்கள் இப்படியா பேசவேண்டும்? 'டைவர்'... 'விவாகரத்து'... இந்த வார்த்தைகளை வெறுப்பவன் நான். இந்த வார்த்தைகள் என் காதுகளில் விழும்போது, பழுக்கக் காய்ச்சிய இரும்பை ஊற்றுவதுபோல இருக்கிறதே!" என்றார் அவர்.

"நான் தவறுதலாகச் சொல்லவில்லை. உங்கள் எதிர்காலத்தை மனதில் கொண்டே கூறுகிறேன். நாம் சாப்பிடும் சாப்பாட்டை ருசியான முறையில் சாப்பிடுவது ருசித்த உணவாகும். அதை தாறுமாறாகச் சாப்பிட்டால் ருசித்த உணவாகுமா? நீங்கள் உங்கள் சொத்துக்களைப் பாதுகாப்பதுபோல் மனைவியை அனுபவிக்கிறீர்கள். ஆனால் உங்களை மனைவி அனுபவிக்கிறாளில்லையே. படித்த உங்களுக்கு இது புரியாமல் இருக்கிறதே...."

"புரியாமல் என்ன? எனக்கு எல்லாம் புரிகிறது. என்னிடம் பல பேர்கள் விவகாரத்துச் செய்துவிடுங்கள் என மறைமுகமாகவும், சாடையாகவும் கூறுகின்றனர். என்றாலும் நான் அதை விரும்பவில்லை. மனிதத்தன்மை இல்லாத சுயநலம் என்றே கருதுகிறேன். என்னிடம் பணமிருக்கிறது. ஏன்? அவளிடமும் பணமிருக்கிறது. ஆனால் அவளுக்கு என்னைத் தவிர தாய், தகப்பன், சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர் யாருமில்லை. இந்த வேளையில் அவளை நான் கைவிட்டால் அவள் வாழ்வு திசைமாறிவிடும். அது அவளை கொலை செய்வதற்கே ஒப்பாகிவிடும்.

"இன்னும் பாருங்க... அவள் இலட்சிய வெறியால் அலைகிறாளே தவிர கெட்டலைந்து அலையவில்லை. அப்படி அலையக் கூடியவளுமல்ல: அவளைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். ஒரு நாள் திருந்துவாள் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு. சரி, நான் விவகாரத்துச் செய்து கொண்டேன் என வைத்துக்கொள்ளுங்கள். அதன் பிறகு அவள் உண்மையை உணர்ந்தால்.... அவள் நிலைமை என்ன? சற்று சிந்தித்துப் பாருங்கள்!"

"உண்மைதான்... ம்... உங்கள் நல்ல மனதிற்கு செருப்பால்தான் அடிக்கவேண்டும். அப்போ... நீங்கள் கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரிதான்... போங்க..."

"அப்படியும் எண்ணிவிடாதீர்கள்... விவகாரத்துத்தான் செய்ய மாட்டேன். என் மனம் இப்படியே இருக்க மறுத்தால் மறுமணம் செய்து கொள்வேன்."

"என்னப்பா புதிர் போடுகிறீர்கள். மறுமணம் தேவையில்லை என்கிறீர்கள்; தேவை என்கிறீர்கள்; என்ன இது... அது சரி... நீங்கள் மறுமணம் செய்து வேறொரு பெண்ணை இங்கு கொண்டுவர உங்கள் மனைவி உடன்பாடுவாளா?"

"அவள் உடன்படுவது ஒரு புறமிருக்கட்டும். அவளை சட்டப்படி உடன்படுத்த என்னால் முடியும். அப்படி நான் செய்யவில்லை. இனி செய்யவும் இஷ்டமில்லை."

"நீங்க... என்ன கதைக்கிறீங்க...? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!" என பொன்சேகா பெரிய வியப்புக்குள்ளானார். எனக்கும் வியப்பாகத்தான் இருந்தது. அத்துடன் என் மனதில் பாறாங்கல்லைப் போட்டு அமிழ்த்தும் உணர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. கதவுப் பக்கத்தில் மறைந்து நின்றுகொண்டு தெளிவாகக் கேட்டேன்.

"நான் சொல்வது உண்மை. இதுவரை எவருக்கும் தெரியாத ஒரு விஷயத்தை நான் உங்களிடம் கூறுகிறேன். ஆனால் இதை வேறு யாரிடமும் கூறக்கூடாது. எமக்கு கலியாணம் நடந்து ஒரு வருடம் முடியவில்லை. அவளுக்கு கடுமையாகக் காய்ச்சல் ஏற்பட்டது. அது ஒருவித மாயக்காய்ச்சல். ஒபரேஷனுக்குப் பிறகுதான் குணங்கண்டது. இது அவளுக்கும் தெரியும். ஆனால் இந்தக் காய்ச்சலால் அவள் கர்ப்பந்தரிப்பதை இழந்தாள். "உங்கள் மனைவி இனி தன் வாழ்நாள் முழுதும் கர்ப்பந்தரிக்கமாட்டாள்" என டாக்டர் கூறிய வார்த்தைகள் இன்றும் என் காதுகளில் கேட்டுக்கொண்டே இருக்கிறது. இந்த வார்த்தைகள் அன்று எனக்குப் பெரிய அதிர்ச்சியைத் தந்தது. என்றாலும் தாங்கிக்கொண்டேன். இந்தச் செய்தி என் மனைவிக்குக்கூட தெரியாது. இன்றுதான் முதன்முதலாக உங்களிடம் கூறுகிறேன்."

வானமே இடிந்து என் தலையில் வீழ்ந்தாற்போல் உணர்வு எனக்கு! அதன் பின் அவர்கள் என்ன பேசினார்களோ நான் அறியேன். தூக்கத்தில் நடப்பவள்போல் நடந்து கட்டிலில் சாய்ந்தேன். கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

அவர் வார்த்தை ஒவ்வொன்றும் சாட்டையால் அடிப்பது போலிருந்தது. நாகரிகம் என்ற இரும்பு அந்த சூழ்நிலையில் ஒரு நிமிஷவேக்காடு தாளாமல் இளகிவிட்டது.

மன உணர்வை ஆராய்ந்து வர்ழ்க்கையை விளக்கமாக எடுத்துச் செல்லும் ஒரு மனிதனை... இல்லை - இல்லை... ஒரு மனிதப் புனிதரை என் கணவன் ரூபமாகக் காண்கிறேன். உடல் நிலை கொள்ளாமல் தவிக்கிறது. ஒரே படபடப்பு. என் உள்ளத்தின் இன்னோர் பகுதியில் இன்னும் ஏதோ அரிக்கத் தொடங்கியது. அது... என் கைகளில் ஒரு குழந்தை... இல்லை பிரமை. எனக்கு குழந்தை கிடையாது... நான் மலடி. தலையணையை கட்டிக்கொண்டு விடியுமட்டும் அழுதேன்.

எத்தனை மணிநேரம்.... எத்தனை நாள் அழுதேன்? எனக்கே தெரியாது. துயரம் என்று ஒன்று உண்டு என்ற நினைப்பே இன்றி இறுமாப்புடன் வாழ்ந்தேன். இப்பொழுது முன்னே நிற்பவை எல்லாம் துன்பப்படிகள். அவற்றைத் தாண்டி, நேர்வழி நடக்கவேண்டும்.

"நீ உன் சுதந்திரத்தை அனுபவிக்கிறாயா...?" என் கட்டிலின் பக்கத்திலுள்ள வெறுமை என்னைப்பார்த்துக் கேட்பது போலிருந்தது. சுதந்திரம்... அப்படி என்றால் என்ன...? நானே என்னைக் கேட்டுக்கொண்டேன். கணவனை மையமாகக் கொண்டு எழுந்த சமூக தர்மத்தை வெறும் சட்டத்தின்மூலம் சீர்திருத்தம் செய்ய முயன்றேன். மானிட இயல் போதிக்கும் இந்த உண்மையை அறிய எனக்கு இத்தனை நாட்கள் எடுத்தன. ஆம், துணிந்துவிட்டேன். கட்டிலிலிருந்து அப்புறப்படுத்தும் அழுக்குப் படுக்கையைப்போல என் குண இயல்புகளை ஓர் அழுக்கு மூட்டையாகச் சுற்றி மூலையில் எறிந்துவிட்டேன்.

அன்று மாதர் மன்றம். அவசிய, அவசர தேவையாதலால் என் அழைப்பை ஏற்ற எல்லோரும் சமுகந் தந்திருந்தனர். தலைமையை ஏற்ற நான், "இதுவரை காலமும் எமது சங்கத்தில் இயங்கி வந்த சட்டங்களை நீக்க வேண்டும். மற்றும் எமது இயக்கத்தை புனரமைப்புச் செய்ய வேண்டும்" என்பதைச் சுருக்கமாகக் கூறினேன். சபையிலே சலசலப்பு... பலரின் முணுமுணுப்புகள் என் காதிலும் விழுகின்றன.

"முதுகெலும்பில்லாத தலைமையினால்தான் பல சாம்ராஜ்யங்கள் இன்று வீழ்ச்சி பெற்றுள்ளன. நீங்கள் மட்டும் விதிவிலக்காக முடியாதே. நேரத்துக்கொரு சட்டம். பச்சோந்தித் தலைமை எமக்கு வேண்டாம்" என ஏளனப் புன்னகையுடன் எழுந்த விஜிதா முகத்தில் அறைந்தாற்போல் கூறிமுடித்தாள்.

"வாஸ்தவம்தான்... உங்கள் எல்லாரையும் வழிதவறி நடத்திய என் தலைமையை நானே விரும்பவில்லை. என்றாலும் உங்கள் முன்னிலையில் பல உண்மைகளை எடுத்துக்கூற விரும்புகிறேன். சகோதரிகளே, ஆணை மையமாக வைத்துத்தான் இந்த சமூகம்... ஏன் இந்த உலகமும் இயங்குகிறது என்பதை நாம் மறக்கக்கூடாது. இதை உணரும்போது தான் ஒரு பெண் பாதுகாப்பு தேடுறது ஆச்சரியமாகப் படுவதில்லை.

"நமது நாட்டுப் பெண்களுக்கு கணவன் என்கிற இடந்தான் முக்கியம். திருமணம் என்பது பரஸ்பர தியாகம். இத்தியாகத்தை கேலியாக்கக்கூடாது. எனவேதான் நான் ஒரு முடிவுக்கு வந்துள்ளேன். என்னால் முடியாததை என் கணவர் பெறவேண்டும். அதாவது என் கணவர் இரண்டாந்தாரம் முடிக்க வேண்டும்" எனக்கூறி என் நிலைமையை விளக்கினேன். என் முடிவைக் கண்ட பல சகோதரிகள் திடுக்கிட்டு விழிப்பதை என்னால் உணர முடிகிறது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். துடுக்கும் நாகரிகப் பூச்சுமுள்ள நாதிரா எழுந்தாள்.

"உங்களுக்கு ஏன் இந்தத் தாழ்வு மனப்பான்மை? உங்களுக்கு தாழ்வு என்றால் நாங்கள் அனைவரும் தாழ்வுமா? சே...! பலதார மணம் பெண்களை அடிமைப்படுத்தி, வெறும் காமக்கிழத்தியாக, பிள்ளை பெறும் இயந்திரமாக ஆக்குகிறது. ஆண்கள் மட்டும் பல பெண்களைக் கட்டிக்கொள்ளலாம். ஏன் ஒரு பெண் பல புருஷர்களைக் கட்டிக் கொள்ளக்கூடாது?" என காரமாகவே கேட்டாள்.

"தர்க்க ரீதியாக உங்கள் வாதம் சரியாகப்படுகிறது. ஆனால் எதையும் தர்க்க ரீதியாகப் பார்க்கக் கூடாது. மனித இயல்புகளையும், ஆண் பெண் தேகக் கூறுகளையும் சோதனை செய்து பார்க்கவேண்டும். சரி... நான்

கேட்கிறேன். உங்களில் எத்தனை பேர் இரண்டு ஆடவர்களை மணக்க விரும்பியுள்ளீர்கள்...? விழிக்கவேண்டாம். இந்த உலகில் எந்தப் பெண்ணும் ஒரே நேரத்தில் இரண்டு ஆடவர்களை மணக்க விரும்பமாட்டாள். இது வரை காலமும் ஒரு பெண் பல ஆடவரை மணந்த வரலாறுகள் உண்டா? ஏதோ தாயின் வாக்குறுதிக்காக பஞ்சபாண்டவர்கள் பாஞ்சாலியை மணந்த கதையொன்றைத் தவிர வேறு ஆதாரங்கள் ஏதேனுமுண்டா? சொல்லுங்கள் பார்ப்போம். ஒரு ஆணுக்கு ஒரே நேரம் பல பெண்களைப் பராமரித்து வாழ முடியும். ஆனால் ஒரு பெண்ணுக்கு ஒரே நேரம் இரண்டு ஆண்களைப் பராமரித்து வாழ முடியுமா? திருப்திப்படுத்த இயலுமா?" கேள்விக் குறிகளுடன் சபையை விழித்து நோக்குகிறேன்.

எங்கும் நிசப்தம்... தொடர்ந்தேன்.

"தோழியர்களே! மானிட இயல் கூறும் இயற்கை சாத்திரங்களை நாம் மாற்ற முனைவது மடமைதான். இன்னும் சற்று சிந்தியுங்கள். பலதாரமணம் வெறுக்க வேண்டியதல்ல. ஒரு பெண் மாதமொருமுறை குறைந்தது ஏழு நாட்கள் தீண்டத்தகாதவள். அத்துடன் இரண்டு மூன்று குழந்தைகள் கிடைத்ததும் பெரும்பான்மைப் பெண்களால் தம் கணவரை பூரணமாக திருப்தி செய்ய முடியாது. இப்படியான நிலைகளில் கூடுதலான ஆண்கள் விபசாரத்தில் ஈடுபடுவதைத் தடுக்க முடியுமா? எமது இனத்தாலே கெடும் ஆண்கள் நோயாளியாகி, எம்மையும் நோயாளியாக்காமல் இருக்க வேண்டுமானால் பலதார மணத்தை எப்படி நாம் வெறுக்கமுடியும்? இப்படி நான் கூறுவது, பணத்தை வைத்துக்கொண்டு உடலின்பத்தை நாடி பலதாரம் புரியும் ஆண்களையோ, அன்றி காம எண்ணங்கொண்டு பெண்களை சீரழிக்கும் ஆண்களையோ அல்ல. என் பிரச்சினையை எடுத்துக் கொள்ளுங்கள். பெண்களுக்கே உரிய தாயாகும் பாக்கியம் என்னிடமில்லை. என் கணவருக்கு, சட்டப்படி எல்லாம் செய்யமுடியும். ஆனால் அவர் செய்யவில்லை. ஏன்? உண்மையிலே அவரொரு தியாகி. தியாகம் என்று கூறி அவர் வாழ்வை பாழ்படுத்த நான் விரும்பவில்லை" எனக் கூறிய நான் மேசையின் மேல் இருந்த சோடாவை ஊற்றி மடமடவெனக் குடித்துவிட்டு இருக்கையில் இருந்தேன்.

சபையில் கொஞ்ச நேரம் அமைதி நிலவியது. சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டெழுந்த நதிரா, "உங்கள் இஷ்டம் அவர் பாக்கியம். என்ன செய்ய..? கோழைத்தலைமை இன்றோடொழியட்டும். எங்கள் நேரத்தை வீணாக்க வேண்டாம்" என துடுக்காகக் கூறி சபையோரின் கைதட்டலைப் பெறுகிறாள். நான் எழுந்து கூறினேன்:-

"மன்னிக்க வேண்டுகிறேன். உங்கள் பொன்னான நேரத்தை நான் மண்ணாக்கமாட்டேன். என்றாலும் உங்களை கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இயற்கையை வெற்றிகொள்ள எங்களால் முடியாது. இயற்கையோடு இணைந்த முற்போக்கான திட்டங்களைச் செய்யுங்கள். கடைசியாக ஒரு வார்த்தை, அதுவும் உறுதியாகக் கூறுகிறேன்... என்னால் இயலாததை என் கணவர் பெறவேண்டும்; அதற்கு நானே என் கணவருக்கு பெண் தேடப்போகிறேன்."

**'பிறைப் பூக்கள்' - 1979**
**(நான்காவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு)**

# நியதி

அப்துல்லாஹ் ஹாஜி

என்ன வெயில்! என்ன வெயில்! ழுஹர் தொழுதுவிட்டு வீடு வந்து, மேலே உள்ள விசிறியைச் சுழலவிட்டு சாய்வுநாற்காலியில் சாய்ந்தேன்... அன்று சாப்பிடப் பசியில்லை... மேசையில் இருந்த தினசரி ஒன்றை எடுத்து வாசித்த என் மனம் செய்தியில் ஓடவில்லை, மனதில் ஆழப்பதிந்த செய்தியை வட்டமிட்டது.

குடும்பம் என்று ஒன்று இருந்தால் அதற்கு குழந்தை ஒன்று தேவை... ஓடி விளையாட ஒரு வாரிசு அமையாவிட்டால் அக்குடும்பத்துக்கு என்ன பெருமை...? என் மகனுக்குக் குழந்தையில்லை, எனக்கொரு வாரிசு... பரம்பரை இல்லை... நாளை சொத்து சுகங்களை அனுபவிப்பது யார்...?

நான் மௌத்தானால் என் மகன் இருக்கிறான்... என் ஒரே வாரிசு என் மகன். அவனுக்குப் பிறகு இந்தச் சொத்துக்களை அனுபவிக்கப் போவது யார்...? கஷ்டப்பட்டு உழைத்ததால் இன்று கௌரவமாக ஹாஜியார் என்ற அடைமொழி பெற்று வாழ்கிறேன்... பலருக்குப் பெருமையாகக் கொடுத்ததால் கொடை வள்ளல் என்ற நாமமும் எனக்குண்டு. யாரும் என்னைக் கண்டால் ஹாஜியார் என கேள்விக்குறி போல் வளைகின்றனர்.

ஊர் பெரியபள்ளிவாசலில் நான் பிரதம டிரஷ்டி. இவைகளெல்லாம் என்னைத் தேடிவரக் காரணம் நான் தேடிய சொத்து செல்வங்கள்தான். ஏழு தலைமுறைகளுக்கு என் சொத்துக்களினால் சுகம் பெறலாம். ஆனால் ஒரு தலைமுறையுடன் என் செல்வங்கள் அழிய வேண்டுமா...? என் மகனுக்குப் பின்னால் என் சொத்துக்களை அலங்கரிக்க ஒரு வாரிசு தேவை... வாரிசு இல்லாத என் மகனுக்குப் பிறகு என் உடைமைகள் யார் கைகளில் சேருமோ...? அல்லாஹ்! என்ன சோதனை! எத்தனை நிய்யத்துக் கொடுத்தேன்... பல இலட்சங்களுக்கு ஊர் முழுதும் பலமுறை குர்பான் கொடுத்தேன்... கண்பார்வை அற்றோர்க்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கினேன். இப்படியாக .... வாரிக் கொடுத்தும் என்ன பயன்! பரிகாரம் இல்லையா?

'ஏன் இல்லை...?' என் அடி மனம் அலறியது... 'ஒரே .. ஒரு பரிகாரந்தான் உண்டு... நீ உன் மகனுக்கு மறுமணம் செய்து வை...!'

'மறுமணம்... அதாவது இரண்டாந்தரம் திருமணம் செய்வதென்றால் என் மருமகளை தலாக் சொல்ல வைக்க வேண்டும். தலாக் சொன்னால் வேறு பிரச்சினையே இல்லை... முஸ்தபா ஹாஜியாரைப் பகைத்துக் கொள்ள வேண்டும். அவரைப் பகைத்துக் கொண்டால் நாளெல்லாம் பகைதான். தன் மகளை வாழாவெட்டியாகக் காண எந்தத் தகப்பன் விரும்புவான்? இதற்கொரு வழிதான் உண்டு... இந்தப் பெண்ணும் இருக்கட்டும்...

இன்னொரு பெண்ணை மறுமணம் செய்து கொடுப்போம்... என்மகன் விரும்புவானா...? அவன் பெஞ்சாதியின் மேல் உயிரையே வைத்துள்ளான்... சரி பார்ப்போம்... அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்... யாரையும் பகைக்கத் தேவையில்லை. என் பேச்சை இதுவரை என் மகன் மீறியதில்லை... மறுமணத்துக்கு மருமகள் இணங்காவிட்டால் தலாக்கைத் தவிர வேறு வழியுமில்லை... அதன் பிறகு... பகை...? அதையும் ஒரு கை பார்ப்போம்...' என சிந்தித்தவாறு நின்றேன். அந்நேரம் சாப்பாட்டுக்கு அழைக்க என் மனைவி வந்தாள்... "கொஞ்சம் நில்லு..." எனக் கூறிவிட்டு, அவளை அழைத்துக் கொண்டு என் அறைக்குச் சென்றேன். நெஞ்சினிலே அலையும் வேதனையைக் கொட்டினேன்.

**சபீதா உம்மா:**

என் கணவர் என்னிடம் கூறியது எனக்கு அதிர்ச்சியைத்தான் தந்தது. என்றாலும் அவர் கூறியதில் உண்மை இல்லாமலுமில்லை. எங்களுக்கு ஒரு வாரிசு தேவை. அதற்கொரு வழி அவர் சொல்வதுதான்... என் மருமகளை நினைத்துப் பார்த்தேன். இதுவரை என்னைப் பார்த்து சிறிதும் அலட்சியம் காட்டாத தங்கமான பெண். யாருக்கும் கிடைக்காத மருமகள். எமக்கிடையே எந்த விரிசலும் இல்லாமல என் மனம் கோணாமல் நடப்பவள். நானும் அப்படித்தான். என்றாலும்... தங்கக் கத்தி என்று குத்திக்கொள்ள முடியுமா...? அதற்கு ஒரே வழி அவர் சொன்னபடி என் மகன் இரண்டாந் தரம் முடிக்க வேண்டும். ஒரு பெண் தன் கணவனை பங்கு கொள்ள விரும்புவாளா...? என் மனம் என்னை உறுத்தியது. என் கௌரவம் என்னைப் பார்த்துச் சிரிப்பது போல உணர்ந்தேன். என்ன செய்ய...? தனக்கு இயலாவிட்டால் கணவனை பங்குபோடத்தான் வேண்டும். அப்படி என்றால் என் மகனுக்கு இன்னொரு பெண் தேவை... பெண் வீட்டார் விருப்பம் இல்லாவிட்டால் "தலாக்" கேட்கத்தான் வேண்டும். அலை பாயும் மனதுடன் மகன் வரும் வரை காத்திருந்தேன்.

**சல்மான்:**

உம்மா சொன்ன விஷயத்தைக் கேட்டதும்... விஷம் குடித்தவன் போலானேன்! என் தலை சுற்றியது. சிறிது நேரம் கட்டிலில் சாய்ந்தேன். என் மனைவி வீட்டில் இல்லை... அவள் இருந்தால் என்ன நடக்கும்...? நல்ல நேரம் இரண்டு நாள் தங்குவதற்காக அவள் உம்மா வீடு சென்றுள்ளாள். நாளை மறுநாள் வருவாள்... நான் அவள் முகத்தில் எப்படி விழிப்பது...? கலியாணம் முடித்து ஐந்து வருடம்... பிள்ளை இல்லாதது உண்மைதான். நாங்கள் பார்க்காத டொக்டர்மார் இல்லை. அவர்கள் எல்லாரும் எங்கள் இருவரிடமும் எந்தக் குறைபாடுகளும் இல்லை என்றே கூறினார்கள். உம்மாவின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் மந்திரவாதிகளையும், ஓதிப்பார்ப்பவர்களையும் அணுகினோம். எதிலும் ஒன்றும் நடைபெறவில்லை. அல்லாஹ் நாடியது நடக்கும்... இருவரும் பொறுமையுடன் இருந்தோம்... எமது இல்லறம் சந்தோஷமாக இருந்தது. எமது பெற்றோருக்கு எங்கள் பொறுமையை சீரணிக்க முடியவில்லை... என்ன செய்வேன்...?

அல்லாஹ் எனக்குத் தந்த நல்ல துணை என் மனைவி... சிரித்த முகம்... பால் மனம் மாறாத பேச்சு... கவரிமானின் நடை.... எதையும் தாங்கும் இதயம் கொண்டவள்... யாரையும் பகைக்க மாட்டாள்...

எவர் வந்தாலும் இல்லை என்னாது வாரி வழங்கி எல்லோரினதும் அன்பைப் பெற்றவள். அப்படியான ஒரு பெண்ணுக்கு இப்படியான இடியை நான் போட வேண்டுமா...? என் கண்களில் கண்ணீர் ஆறாக ஓடியது... உம்மாவின் நச்சரிப்பையும் வாப்பாவின் கண்டிப்பையும் தாங்க முடியாத நான் கோழையாக ஊர்த் தலைவரைச் சந்திக்க அவர் காரியாலயம் நோக்கிச் சென்றேன்.

**தலைவர்:**

குறைவின்றி எல்லாவித வசதிகளும் நிரம்பிய அழகான ஓர் ஆண் மகன் தேம்பித் தேம்பி அழுவதை அன்றுதான் நான் கண்டேன். உயிருக்கும் மேலாகத் தன் மனைவியை நேசிக்கும் ஒருவன் பெற்றோரின் கரைச்சல் காரணமாக என்னை நாடி வந்துள்ளான். வந்தவனுக்கு ஆறுதல் கூறும் நிலை எனக்கு. விடயத்தைக் கேட்டேன். அழுகையின் மத்தியில் நடந்த விபரங்களைக் கூறினான். சிறிது நேர மௌனத்துக்குப் பின் நான் அவனை விசாரித்தேன்.

"எங்கே தொழில் செய்கிறீர்கள்?" என்றேன்.

"நான் சொந்தமாகத் தொழில் செய்கிறேன்" என்றான்.

"அப்படியா? எப்படியான தொழில்...?"

"சேர்... நான் பி.எஸ்.ஸி பட்டதாரி... கெமிகல் பாத் வேலைகளிலும், நிக்கல்பாத் வேலைகளிலும் நான் டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளேன்.. அதையே தொழிலாகவும் செய்கிறேன். இன்றைய காலகட்டத்தில் இது இலகுவாகச் சம்பாதிக்கக் கூடிய தொழில்... எனக்கு இந்தத் தொழிலை செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை; படித்துவிட்டு அதற்கேற்ற தொழிலை பிறருக்கு உதவியாக செய்ய வேண்டும் என்பது தான் என் இலட்சியம்... அதனால் பல பேருக்கு தொழில் கொடுத்து... நிறையப் பேருக்கு தொழில் பயிற்றுவிப்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது... அதனால் இதை தொழிலாக செய்கிறேன்" என்றான்...

"அப்படியா...?"

என் மனதில் நான் படித்த செய்தி ஒன்று நினைவுக்கு வந்தது. ஒருவனுக்கு குழந்தைகள் இல்லை... அவன் பார்க்காத வைத்தியம் இல்லை... ஒரு டொக்டர் அவனை நன்றாகப் பரிசோதித்தார்... அவன் உயிரணுக்கள் பாதிப்படைவதைக் கண்டு பிடித்தார்... அவன் செய்யும் தொழில்தான் அவனுக்கு வினையாக இருந்தது. அவன் அஸிட்பாத்தில் நாளெல்லாம் வேலை செய்தான்... பலதரப்பட்ட அஸிட் வாயுக்களை சுவாசிக்க வேண்டியிருந்தது. இதனால் அவனது உயிரணுக்கள் பாதிப்படைய அவன் குழந்தைப் பேற்றை இழப்பதை அறிந்தார்.உடனே அவனை வேலைத்தளத்திலிருந்து சில நாட்களுக்கு ஓய்வு எடுக்கச் செய்தார்... வீட்டினிலே இயற்கைச் சூழலிலே உலாவி வரும்படி பணித்தார். சில விட்டமின் குளிசைகளை குடிக்கக் கொடுத்தார். கொஞ்ச நாளில் அவன் மனைவி கருத்தரித்தாள்... இது செய்தி... இதை அடிப்படையாகக் கொண்டு நானும் பரீட்சையில் ஈடுபடத் துணிந்தேன்...

"சல்மான் துரை... நான் கூறுவதை நீங்கள் கேட்பீர்களா...?"

"நீங்கள் கூறுவதை கேட்கத்தானே நான் இங்கு வந்தேன் ஸேர்"

"சரி... நீங்கள் கெமிக்கல்... அஸிட் இவைகளுடன் தானே புலங்குகிறீர்கள்...? ஆறுமாத காலத்துக்கு இத்தொழிலை விட்டு கொஞ்சம்

ஓய்வு எடுங்கள்...அத்துடன் உங்களுக்கு நுவரெலியாவில் ஒரு பங்களா இருக்கிறதுதானே?"

"ஆமாம்."

அப்படியானால் நீங்கள் உங்கள் மனைவியுடன் அங்கு போய் சிறிது ஓய்வு எடுங்கள். தவறாமல் தஹஜ்ஜத் தொழுது துஆ கேளுங்கள்... உடற்பயிற்சி செய்யுங்கள்... இன்ஷாஅல்லாஹ்... அல்லாஹ்வின் உதவி உங்களுக்கு இருக்கும்." என்றேன்.

"சரி ஸேர்" என்றான்.

"இன்னொன்று... உங்கட உம்மா... வாப்பாவிடம் பொறுமையாக இருக்கச் சொல்லுங்கள்... அவசரப்பட வேண்டாம். குடும்ப ஒற்றுமை முக்கியம்..." எனக் கூறினேன்.

**மும்தாஜ் பேகம்:**

எனக்கு நம்ப முடியாத ஓர் ஆச்சரியம்... இவ்வளவு காலமும் கலியாண வீடுகளுக்கும், உறவினர் வீடுகளுக்கும் அழைத்துச் செல்வதைத் தவிர வேறெங்கும் இரண்டு நாள், மூன்றுநாள் தங்கி வருவோம் என எப்பொழுதும் சொல்லாதவர்; நானும் கேட்டதில்லை. ஒரே அடியாக நுவரெலியாவுக்கு சில நாட்கள் ஓய்வு எடுக்கப் போவோம் என்ற செய்தி எனக்கு சந்தோஷத்தை தந்தது. கலியாணம் முடித்த புதிதில் குடும்ப சகிதம் ஹஜ்ஜுக்குச் சென்றோம்... அதன் பிறகு அவரும் அவர் பெக்டரியும் தான்... நான் எங்கள் குடும்பத்தாருடன் பல இடங்களுக்குச் செல்வேன்... அவர் தடை சொல்வதுமில்லை. அப்படியானவர் உடன் மாறியது ஆச்சரியமாக இருந்தது. சந்தோஷமாக நுவரெலியா சென்றோம்.

ஒரு நாள் எனக்கு மயக்கமாக வந்தது... வாந்தி எடுத்தேன்... உடல் அசதியாக இருந்தது. கட்டிலில் சாய்ந்தேன்... என் நிலைமையைக் கண்ட என் கணவருக்கு தூக்கிவாரிப் போட்டிருக்க வேண்டும். உடன் பக்கத்திலிருந்த க்ளினிக்குக்குக் கூட்டிச் சென்றார். என்னைப் பரிசோதித்த டொக்டர்கள் என் கணவரிடம் ஏதோ சொல்வதைக் கண்டேன்... என்ன சொன்னார்களோ... தெரியாது... அவர் சிறுபிள்ளை மாதிரி சிரித்துக்கொண்டே ஓடி வந்தார்... என் கைகளைப் பிடித்து கண்ணீர் விட்டார்... எனக்கு ஒரே குழப்பம்... "என்ன நடந்தது... ஏன் இப்படி பதறுகிறீர்கள்?" என்றேன்.

"நான்... நான் வாப்பாவாகப் போகிறேன்" என்றார்...

என் உடலில் இருந்த அசதி எங்கு போனதோ தெரியாது... சந்தோஷ மிகுதியால் என் கண்களிலும் கண்ணீர் ஆறாக ஓடியது. அவருடன் சேர்ந்து ஆகாயத்தில் பறப்பது போல் ஓர் உணர்வு!

அவர் தன் கையிலிருந்த செல்போனை எடுத்து டயல் பண்ணுவதும் கதைப்பதுமாக இருந்தார். மறுநாள் என்னைச் சுற்றி என் குடும்பத்தவர்களும், அவர் குடும்பத்தவர்களும் நிறைந்திருந்தனர்... எல்லாருடைய முகத்திலும் மகிழ்ச்சி! நான் மகாராணி மாதிரி நடுவிலே வீற்றிருந்தேன்...

சல்மான்:

நாங்கள் எல்லாரும் சந்தோஷமாக மேலும் ஒரு மாதகாலம் நுவரெலியாவில் இருந்து வீடு வந்தோம். வீட்டுக்கு வந்ததும் உறவினர்கள் படையெடுத்த வண்ணம் இருந்தனர். நான் உடனடியாக தலைவரைக் காணச் சென்றேன்.

"அஸ்ஸலாமு அலைக்கும் ஸேர்... வரலாமா?"

"வஅலைக்குமுஸ்ஸலாம்... அட சல்மான் ஹாஜி... வாங்க துரை வாங்க... என்ன இந்தப் பக்கம்...?"

"ஸேர்... நான் உங்களுக்கு நன்றி சொல்ல வந்தேன்"

"ஏனாம்..."

"ஸேர்... நான் வாப்பாவாகப் போறேன்..."

"மாஷா அல்லாஹ்... ரொம்ப சந்தோஷம்..."

"இப்படி பெரிய உதவி செய்த உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்வேன்...? டொக்டர்மார் செய்யாத உதவிய நீங்கள் செய்துள்ளீர்கள்..." என்றேன்.

"அப்படிச் சொல்ல வேண்டாம். அல்லாவின் நியதி. அதன்படிதான் உலகம் இயங்கும்... இதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்... நான் படித்த மனோதத்துவ ரீதியான ஒரு செய்தி உங்களுக்கு உதவி உள்ளது... அவ்வளவுதான்..."

"ஸேர்... இது எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்வுக்கும் தான் தெரியும். நான் யாரிடமும் சொல்லவில்லை. எங்கள் குடும்பப் பிரிவை காப்பாற்றி உள்ளீர்கள்... உங்களுக்கு என்ன தேவையோ சொல்லுங்கள்" என்றேன்.

"சல்மான் துரை... நான் கைமாறோ... நன்கொடையோ எதிர்பார்த்து எதையும் செய்ய மாட்டேன். ஒருவனின் தகுதியும் திறமையும் அல்லாஹ்வின் அருளால் வருவது. அதுதான் மூலதனம். உதவிகளும் அப்படித்தான். அல்லாஹ் விரும்பிய வழியில் செய்ய வேண்டும். கைமாறாகச் செய்வது உதவியல்ல. தயவு செய்து கோபிக்க வேண்டாம். அந்த எண்ணத்தை கைவிடுங்கள்." என்றார். நான் விடவில்லை... அவரை நச்சரித்தேன்...

"சல்மான் உங்கள் மனநிலை எனக்குப் புரிகிறது... உங்கள் நிலையில் நான் இருந்தால் இதைத்தான் சிந்திப்பேன். திரும்பத் திரும்ப இதையே நீங்கள் கூறுகிறீர்கள்... அதனால் நான் சொல்கிறேன்... எங்கள் பகுதி பாடசாலைக்கு இடநெருக்கடி இருக்கிறது. போதிய மலசலகூட வசதியில்லை... எழுதப்படிக்க கொப்பி புத்தகங்கள் இல்லாமல் நிறைய பிள்ளைகள் உள்ளனர்... பள்ளிக்கூடம் போகமுடியாமல் வீடுகளில் வேலை பார்க்கும் சிறார்கள் இருக்கிறார்கள். இவர்களைப் போன்றோருக்கு உதவுங்கள்.... இது நிரந்தர தருமமாகும். எங்கள் பகுதி இஸ்லாமிய மறுமலர்ச்சி பேரவைகளுடன் இணைந்து உதவுங்கள்..."

"இன்ஷா அல்லாஹ்... உங்கள் விருப்பப்படியே செய்வோம்." - நான் அமைதியாக விடைபெற்றேன்.

நவமணி - **2002.09.29.**

# சூனியம்

மந்திரத்தினால் ஒருவனை நீண்டகால நோயாளியாக்கலாம்; சிந்தனையை மாற்றலாம்; இழந்த சிந்தனையைப் பெறவைக்கலாம்; பெரிய அற்புதங்களைச் செய்யலாம் என வாதிடப்படுகிறது.....

நான், ஒரே இறைவன் என்ற மேலான ஏகத்துவக் கொள்கையில் பூரண விசுவாசி. ஆவதும் அவனாலே; அழிவதும் அவனாலே என்ற தத்துவம் எனக்குத் தெரியும்.

நான் கூறப்போகும் இச்சம்பவத்தை இப்பொழுது நினைத்தால் ஒரு பக்கம் சிரிப்பும், ஒரு பக்கம் வேதனையும் தான் வருகிறது.

....அன்று அடுத்த வீட்டில் ஒரே அமர்க்களம். பொழுது போக்குக்காக நாவலொன்றை வாசித்துக் கொண்டிருந்த நான், அடுத்த வீட்டில் என்ன நடக்கிறதென்பதை அறிய நாவலை வைத்து விட்டு வாசலில் வந்து அமர்ந்து கொண்டேன்.

அடுத்த வீடு. அதுதான் கைறுதாத்தா வீடு. அவர் மகள் பௌசியாவிற்கு வயிற்று வலியாம். எவ்வளவோ கைமருந்து செய்தும் நிற்கவில்லையாம். ஓதிப்பார்க்க லெப்பையைக் கூட்டிக் கொண்டு வரச் சென்றிருக்கிறார்களாம்.

பக்கத்து வீடுகள் அல்லவா? அடுத்த வீட்டில் நடைபெறுகிற யாவும் எங்கள் வீட்டு வாசலில் நின்று பார்த்தால் தெரியும்.

எனினும், நான் வந்து ஒரு மாத காலத்தில் அப்பெண்ணை ஒரு முறைதான் கண்டுள்ளேன். கட்டுக் குலையாத உடற்கட்டு - மட்டு மட்டான உயரம் - உருண்ட முகம் - திரண்ட சதைப் பிடிப்பான கழுத்து - விரிந்த அறிவு நிரம்பிய பார்வை. இப்படி அழகு நிரம்பிய அடுத்த வீட்டுப் பெண் போடும் கூச்சல்.... ஐயோ பாவம் போய்ப் பார்ப்போம் என ஆவல் உந்தியது.

எங்கள் வீட்டில் யாரும் இல்லை. எல்லோரும் வெளியூர் போய்விட்டனர். புதியவன் நான் எப்படிப் போவேன்? சங்கோஜப் பட்டுக் கொண்டு வாசலில் நின்றேன்.

பௌசியாவின் வாப்பா சம்சுதீன் நானா அப்பொழுதுதான் லெப்பையை கூட்டிக் கொண்டு வந்தார். லெப்பை தண்ணீர்க் கோப்பை ஒன்றை வைத்துக் கொண்டு ஓதினார். பின், இஸ்ம் இரண்டு தட்டு எழுதிக் கொடுத்து விட்டு சம்சுதீன் நானாவை வெளியே கூட்டிக் கொண்டு வந்தார்.

"பாருங்கோ சம்சுதீன், நான் எனக்குத் தெரிந்ததைச் செய்தேன். அது சும்மா வந்த வலியல்ல. ஒரு செய்வினை. செய்வினைக்கு வேலை செய்யுங்கோ..... நான் வாரன்."

'வயிற்று வலிக்கு ஓதிப்பார்த்து, இசுமைக் கொடுத்து விட்டு செய்வினை என்கிறாரே?... என்ன மடமை?' என நான் எண்ணிக்கொண்டிருக்கும் போது ஜௌபர் நானா வந்தார்.

ஜௌபர், சம்சுதீன் நானாவின் மச்சான். கைறு தாத்தாவின் தம்பி. ஜௌபர் நானா வந்ததும் மூவருக்குமிடையே குசுகுசுப் பேச்சு. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

சிறிது நேரத்தில் மூவரும் அவசர அவசரமாக கிளம்பிச் சென்றனர்.

'இவர்கள் எங்கே செல்கின்றனர்?' என்பதை எனக்கு ஊகிக்க முடிந்தது. ஜௌபர் நானாவுடன் அல்லவா செல்கின்றனர். மண்டை நோவுக்கும் மந்திரம் போடும் மனுஷன் அல்லவா? மந்திரக்காரனை நாடிச் செல்கின்றனர் என்பதனை ஊகித்துக் கொண்டேன்.

என் ஊகம் பிழையாகவில்லை. சில மணி நேரங்களின் பின் கைறுதாத்தா யாரையோ திட்டுவதை உணர முடிந்தது.

காது கொடுத்துக் கேட்டேன். என்ன வசை மொழி? எப்படி எழுதுவேன் அந்த அலங்கார வார்த்தைகளை?

எனினும் அவர் பேச்சின் சாராம்சத்தை நான் கூறுகின்றேன். பௌசியாவுக்கு ஒரு கலியாணம் பேசியுள்ளனர். இதைப் பொறுக்க முடியாத யாரோ அவர் குடும்பத்தாரின் உதவியுடன் சூனியம் செய்து உண்ணக் கொடுத்துள்ளார்களாம். அது இப்பொழுது பௌசியாவின் வயிற்றிலிருந்து கொண்டு வலியைக் கொடுக்கிறதாம். இதை அவர்கள் போய்க் கேட்ட மந்திரவாதி சொன்னானாம்.

வெளியே சம்சுதீன் நானா நின்று கொண்டிருந்தார். நான் அவர் அருகில் நின்றேன்.

"சம்சுதீன் நானா... " என்றேன்.

சம்சுதீன் நானாவின் கற்பனை கலைந்தது. அப்பொழுதுதான் நான் வந்திருப்பதை உணர்ந்தார்.

நானும் அவரும் வெளிவராந்தாவில் வந்து அமர்ந்தோம். அங்கு அவர் மைத்துனன் நௌபர் இருந்தார். யாருடனும் பேசாத கட்டுப் பெட்டி மனுஷன் அல்லவா!.... அதற்கேற்றாப் போல ஒரு சின்ன முறுவல். அவ்வளவுதான்.

"பாருங்க துரை"... (இப்படித்தான் என்னை இப்பகுதி மக்கள் அழைப்பார்கள்.) "எங்கள் குடும்பமே எங்களுக்கு பகை... இந்த சின்னப் பிள்ளைக்குப் போய் சூனியம் செய்திருக்கிறார்களே.... நாங்கள் இப்பொழுது சின்னறால கட்டடியனிடம் சென்று பார்த்தோம். அவன் மைப்போட்டுப் பார்த்தான். என் மகளுக்கு சூனியம் செய்து வயிற்றுக்குள் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் இங்கிருந்து குடியெழும்பிப் போக வீட்டுக்கும் சூனியம் செய்திருக்கிறார்கள். இவர்கள் தலையில் இடி விழ. திருப்பி வெட்டுவோம். பெரிய தொவில் ஒன்று வைக்கப்போறன். இன்று இரவு சின்னறால கட்டடியன் வருவான். அதற்கு முன் அவசரமாக கொஞ்சம் சாமான்கள் தேட வேண்டும்."

சம்சுதீன் நானா படபடவெனக் கதைத்துக் கொண்டு போனார். ஏனெனில் மைபோட்டுப் பார்த்து உண்மை கூறுகிறார்களாம். என்ன மடமை! மை போட்டுப்பார்த்து மறைந்த செய்திகளைக் கூறுவதாய் இருந்தால் இன்று எத்தனையோ விஷயங்களைக் கண்டு பிடிக்க முடியும்! சி.ஐ.டி. அதிகாரிகள் தேவையில்லை. நீதிமன்றம் தேவையில்லை.

"மை"க்கு இவ்வளவு சக்தி இருக்கிறதா? நீதிமன்றத்தில் சிக்கலான வழக்குகள் பல இருக்கின்றன. மை பார்த்தால் சுமுகமான முடிவு காணலாம். அரசாங்கத்துக்கு தெரியாதா? ஏன் வீணாக செலவுகள் செய்ய வேண்டும்? அட..... பாவமே! இப்படியும் எம் மனிதர் ஈமானைப் பறிகொடுக்கிறார்களே?

என் அபிப்பிராயத்தைக் கூறியிருப்பேன். பயமாக இருந்தது.

சம்சுதீன் நானா ஏதோ பழைய கதைகளைக் கூறி தன் ஆத்திரங்களைக் கொட்டியிருந்தார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஷைத்தான் தனக்கு சாதகமான சமயத்தில் வேதத்திலிருந்து உபதேசம் செய்யக் கிளம்புவது போல இருந்தது அவர் பேச்சு.

அன்று இரவு எட்டு மணி இருக்கலாம். இஷா தொழுகைக்குப் பின் இரவு ஆகாரத்தை முடித்துக்கொண்ட நான் வெளிவராந்தைக்கு வந்தேன். சம்சுதீன் நானா வீட்டில் ஒரே பரபரப்பு. சின்னறால மந்திரவாதி சூனியப் பேயை ஓட்டப் போகிறான். அதற்காக தடபுடலாக வேலைகள் நடந்துகொண்டிருந்தன.

தென்னம் பாளை, குலையோடு கூடிய வாழை மரம். மாவிலைத் தோரணம், ஓலைகளால் வேயப்பட்ட அழகிய சிறிய கூடாரம். இவைகள் வீட்டு முன்றிலில் அழகாக வைக்கப்பட்டுள்ளன. வெசாக் காலங்களில் காணும் அபூர்வக் காட்சிகள் அங்கு காணக் கிடைக்கின்றன.

வீட்டு வராந்தையில் வாழை மரத்தினால் செய்யப்பட்ட அழகிய கூடாரம். அதனுள் அழகாக மாவினால் செய்யப்பட்ட ஒரு பொம்மை. அது தான் சூனிய தெய்வம்!

வெள்ளைப் புருவம். கிருதா மீசை. கோரைப் பற்கள். கையிலே வாள். இது தான் சூனியக் கடவுளின் தோற்றம். 'அல்லாஹ்... முஸ்லிம்கள் இப்படி ஈமானை அடவு வைக்கிறார்களே! இவர்களுக்கு நன்னம்பிக்கை அளிப்பாயாக!' என மனதுக்குள் பிரார்த்தித்துக் கொண்டேன்.

இரவு ஒன்பது மணி.... தொவில் ஆரம்பம்.

அடடே! தொவில் என்ன எனக் கூறவில்லையே... அது தான் காஃபிர்கள் பேயோட்டும் முறை. அத்துடன் வணக்கத்துக்குரிய விழாவில் அதை அவர்கள் மதிக்கின்றனர். "கடவுளின் அனுக்கிரகமும் அதற்கு உண்டாம்.

இறந்த மிருகத் தோலின் ஓலம்... ( ஆச்சரியப்பட வேண்டாம்.... அது தான் 'டும்...டும்') மேளம் முழங்குகிறது. மந்திரவாதி ஏதோ பாடுகிறான்.

அப்பொழுது நோயாளியைக் கூட்டி வந்து வாழைமர கூடாரத்தினுள் அமர்த்துகின்றனர். வயிற்றைப் பிடித்தபடி பௌசியா அமர்ந்திருக்கிறாள்.

பௌசியாவைச் சுற்றி பலவித மலர்கள். வீட்டைச் சுற்றி ஒரே கூட்டம்.

பேயோட்டம் ஆரம்பமாகிறது. டும்.... டும்.... மேளம் முழங்குகிறது. காட்டு மிராண்டித்தனமான நடனமொன்று ஆரம்பமாகிறது. பக்கவாத்தியமாக சில பேர் ஆமாம் போடுகின்றனர்.

காட்டு மிராண்டித்தனம் உச்ச நிலையை அடைகிறது. எதிரே பேய் ஓட போடப்பட்டிருந்த சாம்புராணிப்புகை சுற்றியிருந்தவர்களைக் கூட பேயாட வைக்கிறது.

சுளீர்...... சுளீர்....

படுபாவி மந்திரவாதி, ஈரமற்ற கருணையற்ற, அந்த மந்திரவாதி கடின நெஞ்சுடன் பௌசியாவை கைப்பிரம்பால் விளாசுகிறான். கிறீச் எனக் கதறி ஓலமிடுகிறாள்.

என் கண்களில் நீர் மல்கியது.

"அஹ்... ஹஹ...ஹா... எங்கிட்ட பலிக்காதுடா. இப்பொழுதே போய்விடு. உனக்கு ஒரு கோழி பலியிடுகிறேன். சூனிய தெய்வமே நீ கருணை செய்வாய்" என மந்திரவாதி ஏதோ உளறினான்.

தொடர்ந்தும் ஆட்டம் ....... டும்.... டும்.... டும்....

கர்ணகடூரமான பொய் முகமொன்றை அணிந்து கொண்டும், இலைகுலைகளால் தன்னை அலங்கரித்துக் கொண்டும் கையில் நெருப்புப் பந்தத்துடன் ஒருவன் ஆடுகிறான். ஆடிக்கொண்டே தாயத்தொன்றை பௌசியாவுக்குக் கொடுக்கிறான்.

எப்படியோ இரவு பன்னிரண்டு மணியளவில் களைப்பும், பயமும், வேதனையும் ஒன்று சேர பௌசியா தூங்குகிறாள். எல்லோரும் சேர்ந்து அவளை உள்ளே அழைத்துச் செல்கின்றனர்.

"சூனியப் பேய் விடைபெற்று விட்டான். இனிப் பயமில்லை" மந்திரவாதி கூறுகிறான்.

விடிய விடிய ஒப்பாரியும், டும், டும், டும் மேளமும்.... நான் எத்தனை மணிக்குத் தூங்கினேன் என்று எனக்கே தெரியாது.

அடுத்த நாள் காலை ஒன்பது மணியிருக்கலாம். பௌசியாவின் அலறல் எனக்குக் கேட்டது. இரவு தானே சூனிய தெய்வத்துக்கு லஞ்சம் கொடுத்து - இல்லை நேர்ச்சை கொடுத்து - அனுப்பி விட்டார்கள். இப்பொழுது எந்த தெய்வம் வந்து பிடித்திருக்கிறது? இப்படி நான் எண்ணிக்கொண்டிருக்கும் போது கார் ஒன்று வந்து நிற்கிறது.

வராந்தாவுக்கு வந்து பார்த்தேன். அன்வர்தீன் காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் செல்கிறான். சிறிது நேரத்தில் பௌசியாவை அழைத்துக்கொண்டு வந்து காரில் அமர்த்துகிறான். கைறுதாத்தாவும் காரில் ஏறிக்கொள்கிறார். கார் போய் விடுகிறது. அன்வர்தீன் பௌசியாவின் சகோதரன். தப்லீகில் ஈடுபட்டு இஸ்லாத்துக்கு விரோதமான அறிவற்ற விஷயங்களை ஆணித்தரமாக எதிர்ப்பவன். வியாபார நோக்கமாக வெளியூர் சென்றிருந்தவன் எப்பொழுது வந்தான் எனத் தெரியாது.

இப்பொழுது தங்கையை அழைத்துக்கொண்டு டொக்டரிடம் செல்கிறான். இப்பொழுதான் என் மனத்துக்கு நிம்மதி.

பிற்பகல் ஒரு மணி இருக்கும். கார் வருகிறது. அன்வர்தீன் மட்டும் காரிலிருந்து இறங்கி வருகிறான். நான் அன்வர்தீனை அணுகி விஷயத்தை அறிந்து கொண்டேன். தங்கை ஆஸ்பத்திரியில். துணைக்கு உம்மா நிற்கிறாராம். பின்னேரம் சென்று பார்க்கலாம் என்றான்.

பின்னேரம் நானும் அன்வர்தீனும் ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். அங்கே பௌசியா கட்டிலில் மயங்கிக் கிடந்தாள். வயிற்றில் ஆபரேஷன் செய்யப்பட்டிருந்தது. பக்கத்தில் கைறுதாத்தா இருந்தார். சுயநினைவு வர சில நேரம் செல்லும் என்பதை அறிந்து கொண்டேன்.

அன்வர்தீனும், அவன் உம்மாவும் அழுது அழுது பேசிக் கொண்டிருந்தனர். நான் அதில் பங்கு பற்றாமல் ஒவ்வொரு கட்டிலையும் நோட்டமிட்டேன்.

ஒவ்வொரு கட்டிலிலும் எக்ஸ்ரே நெகடிவ் படமொன்றும், நோயின் விபரங்களும் தொங்கிக் கொண்டிருந்தன.

நான் பௌசியாவின் கட்டிலில் இருக்கும் நோயின் விபரங்களை வாசித்துப் பார்த்தேன்.

அவசரமாக ஒபரேஷன் செய்யப்பட வேண்டிய குடல் வளரி நோய் என எழுதப்பட்டிருப்பதை மட்டும் வாசித்தேன். மேலும் விபரங்கள் புரியவில்லை.

யா அல்லாஹ்.... என்ன அறிவு கெட்ட சமூகம்! கண்ணிருந்தும் குருடர்களாக..... இன்னும் சிறிது தாமதித்தால் அநியாயமாக ஒரு உயிர் பலி போய் இருக்குமே. நோய்க்கு மருந்து இருக்கும் போது எல்லாம் மந்திரம் என எண்ணுகிறார்களே. என்ன மௌட்டீகம்! நம் சமூகம் இந்த அவல நிலையை எப்பொழுது கைவிடும்?

"நம்பிக்கையுடன் விசுவாசம் கொண்டு நேர்மையாக வாழ்ந்து வருபவர்களுக்கு எங்கு திரும்பினும் அன்பே ஆலிங்கனம் செய்யுமாறு அல்லாஹ் ஆக்கிவிடுகிறான் (19-26) என்ற திருக்குர்ஆன் திருவசனம் அலையும் என் மனதுக்கு அமைதியைத் தந்தது.

**இன்ஸான் - 1967.10.20.**

# மூன்றாம் தலாக்

"ஸேர்.... போஸ்ட்..."

வீட்டினுள்ளே அன்றைய தினசரிகளை படித்துக் கொண்டிருந்த ஆக்கில் ஹாஜியார்... வெளியே வந்து கையொப்பமிட்டு நீண்ட கடித உறையொன்றைப் பெற்றுக் கொள்கிறார்...

அது வெளிநாட்டுக் கடிதம்... தன் மகள் கமரிய்யாவின் பெயரில் அவள் கணவன் இயாஸ் அனுப்பியுள்ள பதிவுத் தபால்...

"கமரிய்யா... மகள் கமரிய்யா..."

"ஓம் வாப்பா, இதோ வந்திட்டன்."

குசினியினுள் வேலையாயிருந்த கமரிய்யா, கைகளைத் துடைத்துக் கொண்டு வருகிறாள்.

"இந்தா புள்ள... உன் மாப்பிள்ளை கடிதம் அனுப்பியுள்ளார்..." அவளுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை; உள்ளம் பூரிக்க கடிதத்தைப் பெற்றுக் கொண்ட கமரிய்யா, அப்பொழுதே அதை உடைத்துப் பார்க்கிறாள்...

அவளுக்குத் தூக்கிவாரிப் போடுகிறது... பல இடிகள் ஒன்றாய் இணைந்து அவள் தலையில் விழுவது போன்ற உணர்வு! அப்படியே பக்கத்திலிருந்த சாய்வு நாற்காலியில் சாய்கிறாள்... கண்களில் கண்ணீர் ஆறாக ஓடுகிறது. கையிலிருந்த கடிதம் கீழே விழுகிறது...

ஆக்கில் ஹாஜியாருக்கு எதுவும் புரியவில்லை; அமைதியாக வந்து கடிதத்தை எடுத்துப் பிரித்து படிக்கிறார். அவருக்கும் அதிர்ச்சியாக இருந்தது... அமைதியாக மகளின் முகத்தைப் பார்க்கிறார். மீண்டும் கடிதத்தை வாசிக்கிறார்...

'அன்புள்ள கமரிய்யா அறிவது...

இக்கடிதத்தை வாசித்தவுடன் உனக்கு கவலை வரலாம்... அதற்காக என் முடிவை என்னால் மாற்றிக் கொள்ள முடியாது. நான் உன்னை இங்கே ஒருவர் சாகிதாக தலாக் கூறிவிட்டேன்... உன்னை விட அழகான... ஒரு பணக்காரப் பெண்ணை விரும்புகிறேன். உன்னைப் போல் ஹிஜாப் போட்டு உடம்பை மறைக்கும் பெண்ணல்ல. நவ நாகரிகமான அழகான பெண். எனக்கேற்றவள்!... உன்னை விவகாரத்து செய்தால் என்னை கலியாணம் முடிப்பாள் ... ஆகவே உன்னை நான் விவகாரத்து செய்து கொள்கிறேன். என்னை நாடவேண்டாம். உனக்கு வர வேண்டிய

இத்தாப்பணம், உனக்குரிய செலவுப் பணம், அத்துடன் உனது வாப்பாவிடம் வெளிநாடு போக நான் பெற்ற கடன் பணம் எல்லாவற்றையும் அனுப்பி வைக்க தயாராகி உள்ளேன். காழியார் வசம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்... காழியாருக்கும் ஒரு கடிதம் அனுப்பியுள்ளேன்... நான் மூன்று தலாக்கையும் கூறியுள்ளதாக அறிவித்துள்ளேன்.'

**இப்படிக்கு,**
**உன் மாஜி கணவன்,**
**இயாஸ்.**

கடிதத்தைப் படித்து முடித்த ஆக்கில் ஹாஜி... மீண்டும் மகள் முகத்தைப் பார்க்கிறார்.... கமரிய்யா முகத்தைத் துடைத்துக் கொண்டு எழுந்து நிற்கிறாள்...

"வாப்பா... வாங்க... காழியார் வீடு போவோம்..." என்றாள்.

"கொஞ்சம் பொறு மகளே! இதன் உண்மை நிலை அறிய வேண்டும்" என்கிறார்...

"எது வாப்பா உண்மை நிலை? செய்வதெல்லாம் செய்பவர்கள் இன்னும் என்ன செய்வார்கள் என்பதை அறிய வேண்டும்; எதற்கும் ஒரு முடிவு உண்டு வாப்பா" என கமரிய்யா பொரிந்து தள்ளுகிறாள்.

"உண்மை... நீ சொல்வதெல்லாம் உண்மை... என்றாலும் தீர விசாரித்து முடிவு காணவேண்டும்... கொஞ்சம் பொறு... நான் சாலிம் ஹாஜிக்கு போன் செய்து தகவல் அறிந்து அதன் பின் போவோம்" எனக் கூறியபடியே தொலைபேசியின் பக்கத்தில் சென்று இலக்கங்களை சுழற்றுகிறார் ஆக்கில் ஹாஜி...

சிறிது நேரத்துக்குப் பிறகு தொடர்பு கிடைக்கிறது...

"அஸ்ஸலாமு அலைக்கும்... சாலிம் ஹாஜி தானே கதைகிறது? நான் ஆக்கில் பேசுகிறேன்... எப்படி சுகம்...?"

"வஅலைக்கு முஸ்ஸலாம் வரஹ்மத்துல்லாஹ் நானும் இங்கே நல்ல சுகமாக உள்ளேன்... ஏதும் அலுவல் இல்லாமல் கதைக்க மாட்டீர்களே! ம்... சொல்லுங்க... எனக்கு ஃப்ரீ டைம் தான்...."

"மாஷா அல்லாஹ் சந்தோஷம்... நான் என் மருமகனின் செய்திகளை அறிந்து கொள்ளத்தான் உங்களுக்கு கோல் பண்ணினேன்..."

"ஹாஜி... நானும் உங்கள் மருமகனின் செய்திகளை உங்களுக்கு ஃபெக்ஸ் மூலம் அனுப்ப எண்ணிய நேரந்தான் இந்த கோல் கிடைத்தது... நான் இரண்டு கிழமையாய் இங்கிருந்து கொன்பிரன்ஸ் ஒன்றுக்கு வேறொரு ஊருக்கு சென்று நேற்றுதான் வந்தேன்... இன்று பள்ளிவாசலுக்கு தொழச் சென்ற போதுதான் பள்ளிவாசலில் கதீப் விபரங்களைக் கூறினார். நான் உடனே இயாஸைப் பார்க்கச் சென்றேன்... சந்தித்தேன். அவர் என்னிடம் இப்படி கூறினார்... நீங்கள் இதை என் மாமருக்கு அறிவிக்கவும்... என் மாமனாரிடம் எவ்வளவு பணம் இருந்தாலும் எனக்கு வேண்டியதில்லை; நான் அதை விட பெரிய இடத்துப் பெண் ஒருத்தியை கைபிடிக்கப் போகிறேன்...

அவளும் என்னை விரும்புகிறாள். நாகரிகமாக நடக்கிறாள்... உடலை மூடிக்கொண்டு... வெட்கப்பட்டுக்கொண்டு.... சே... எவ்வளவு நாளைக்கு நாகரிக வாசமே இல்லாதவர்களோடு வாழமுடியும்... நான் இங்கே மௌலவியின் முன் "தலாக்" கூறிவிட்டேன்... அவர்கள் கேட்பதை விட இருமடங்கு பணம் அனுப்புவேன்... என இறுமாப்புடன் கூறிமுடித்தார். நான் எவ்வளவோ கூறினேன்; கேட்கவில்லை. "கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே" எனக் கூறுவார்கள். இதுதான் உங்கள் மருமகனுக்கு ஏற்பட்டுள்ளது. ஒன்று சொல்கிறேன்... இங்கு வரும் எல்லாரும் உங்கள் மருமகன் போலில்லை. மன வருதப்பட வேண்டாம் ஹாஜி" என சாலிம் ஹாஜி சொல்லி முடித்தார்...

"சரி ஹாஜி... அஸ்ஸலாமு அலைக்கும்..." ..போனை கீழே வைக்கும் அவர் மகள் காணாமல் கண்களைத் துடைத்துக் கொள்கிறார்.

"வாப்பா என்ன செய்தி?" என கமரிய்யா வினவுகிறாள்...

"காழியார் வீடு போவோம். போகும் வழியில் சொல்கிறேன்"

இருவரும் காழி நீதிமன்ற காரியாலயம் நோக்கி செல்கின்றனர்... காழி நீதிவானை சந்தித்த அவர்கள்... இயாஸிடம் இருந்து வந்த கடிதத்தை கொடுக்கின்றனர்... காழியார் அதைப் படித்துவிட்டு...

"இப்பொழுதுதான் உங்க மருமகன் குடும்பத்தார் வந்து எனக்கு இயாஸ் எழுதிய கடிதம் ஒன்றை தந்து விட்டு செல்கின்றனர்..." என்றார்.

"அவர் குடும்பத்தார் இங்கு வந்தார்களா...?" இருவரும் ஒரே வேளையில் ஆச்சரியத்துடன் கேட்டனர்...

"ஏன் அப்படி கேட்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை.... குடும்ப விவகாரம்... எங்கள் வீட்டுக்கு அவர்கள் வந்திருக்க வேண்டும்... அதைப்பற்றி ஒன்றுமில்லை... நாங்கள் உங்களுக்கு அவர் கடிதம் எழுதியிருப்பதைக் குறிப்பிட்டுள்ளதால் உங்களிடம் அபிப்பிராயம் கேட்டு வந்தோம்" என்றாள் கமரிய்யா.

"எவ்வளவு அபிப்பிராயம் கேட்டு யார்வந்தாலும் வழக்கொன்றை தாக்கல் செய்யும் பொழுது வழக்காளி வந்து விண்ணப்பிக்க வேண்டும்... இல்லை என்றால் வழக்கு தாக்கல் செய்ய மாட்டேன்... இதை வந்தவர்களிடம் கூறி அனுப்பியுள்ளேன்." என்றார் காழி நீதிவான்.

சிறிது நேரம் சிந்தனையில் இருந்த கமரிய்யா..."ஹாஜியார்... நான் சொல்வதை கவனமாகக் கேட்டு எழுதிக் கொள்ளுங்கள். இதை அதிகப் பிரசங்கிதனம் என்றோ... விதண்டா வாதம் என்றோ எண்ண வேண்டாம்... எனது கணவர் - ஒருவர் சாட்சியாக அங்குள்ள பள்ளி ஹஸ்ரத் முன்னிலையில் தலாக் என உறுதியாகக் கூறியுள்ளார். அதுவும் மூன்று தடவைகள் கூறியுள்ளார் எனவும் எழுதியுள்ளார். அத்துடன் எங்கள் வாப்பாவின் கூட்டாளியிடம் கூறியுள்ளார்... எனவே மூன்று தடவைகள் ஒரே முறையில் அல்ல பல தடவை கூறியுள்ளது நிச்சயமாகிறது. இதனால் ஷரீஆ சட்டப்படி அவர் என்னை தலாக் கூறிவிட்டார். நான் இத்தா இருக்க வேண்டும். இது கடமை என்பதால் சட்டப்படி அவர் உங்கள் முன் வந்து தலாக் வழக்கு பதிவு செய்தால் என் சம்பூர்ண விருப்பத்தை சத்தியத்துடன்

குறித்துக் கொள்ளுங்கள். இத்தா இருக்கும் என்னால் வர முடியாது. மேலும் அவர் தருவதாகக் கூறியுள்ள செலவினங்களை நான் பெற்றுக்கொள்ள என் வாப்பாவை நியமித்துக் கொள்ள விருப்புகிறேன். அத்துடன் அப்பணத்தை இந்த ஊர் பாடசாலைக்கோ அல்லது ஏதும் தர்ம காரியங்களுக்கோ செலவு செய்யுங்கள் என ஹாஜியாரை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்..."

"கொஞ்சம் பொறுங்கள். இதுவரை கூறியது சரிதான். ஆனால் பணவிடயத்தை என்னிடம் பொறுப்பு சொல்ல வேண்டாம்... நான் உங்கள் வாப்பாவிடம் கொடுக்க பணிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்..." என்றார் காழி.

"அப்படியே ஆகட்டும்... நான் ஒப்பமிடுகிறேன்... சரிதானே ஹாஜி" என்கிறாள்...

காழியார் எல்லா விபரங்களையும் ஒரு தாளில் எழுதி கமரிய்யா விடமிருந்து சத்தியத்தை உறுதிப்படுத்தி கையொப்பம் பெற்றுக் கொண்டார்.

ஒரு மாதகாலத்துக் கிடையில் இயாஸ் வருகை தந்து காழி நீதவான் மூலம் வழக்கு தாக்கல் செய்து தலாக்கை சட்டப்படி பெற்றுக் கொண்டான்.

சிறிது காலஞ் செல்கிறது. ஒரு நாள் அதிகாலை கமரிய்யா வீட்டு கோலிங்பெல் அடிக்கப்படுகிறது. குர்ஆனை ஓதிக் கொண்டிருந்த கமரிய்யா மேல் மாடியிலிருந்து கீழே நோக்குகிறாள்... வாசலில் இயாஸ் இருப்பதை காண்கிறாள்...

உடன் கீழே வந்த கமரிய்யா... வாப்பாவை அழைத்து இயாஸ் வந்திருப்பதை அறியச் செய்து... காரணத்தை விளக்கும்படியும் கூறி நிற்கிறாள்...

ஆக்கில் ஹாஜி சென்று வாசல் கதவை திறக்கிறார்.

"அஸ்ஸலாமு அலைக்கும் மாமா...."

"வஅலைக்குமுஸ்ஸலாம். உள்ளே வாருங்கள் இயாஸ்..."

"இப்படி உட்காருங்கள்...". வந்தவரை வரவேற்று உள்ளே அமரச் செய்து "வந்த விபரத்தை அறியலாமா?" என வினவுகிறார் ஆக்கில் ஹாஜி...

"மாமா... நா... நா... நான் வந்து..." என திக்கு வாய் வந்தவன் போல ராகத்துடன் பேச்சை மென்று விழுங்குகிறான்.

"சொல்லுங்கள் இயாஸ்... ஏதோ ஒரு செய்தி சொல்ல வந்திருப்பீர்கள்..... இனி.... சொல்லுங்கள்..."

"இல்லை மாமா.... நான் கமரிய்யாவுடன் கதைக்க வேண்டும்..." என்கிறான்...

"அதெப்படி...? தலாக் சொல்லப்பட்ட பெண்ணுடன் கதைக்க முடியாதே...."

"இல்லை மாமா.... நான் தலாக்கை வாபஸ் பெற்றுவிட்டேன். நான் இனிமேல் கமரிய்யாவுடன் கடைசிவரை சேர்ந்து வாழ்வேன்.. என்னை மன்னித்து விடுங்கள்..." அழுதபடி ஆக்கில் ஹாஜியின் காலை தொட்டு மண்டியிடுகிறான் இயாஸ்...

"எழுந்திருங்கள் இயாஸ்.... என்னால் ஒரு முடிவும் சொல்ல முடியாது. கமரிய்யாதான் முடிவெடுக்க வேணும்"

"அதனால் தான் நான் இங்கு வந்தேன்... அவளை அழைக்க முடியுமா?"

"சரி... கொஞ்சம் பொறுங்கள்...." எனக் கூறிய ஆக்கில் ஹாஜி நேராக வீட்டினுள் செல்கிறார்... சிறிது நேரம் கழித்து வெளியே வருகிறார்...

"இதோ பாருங்க இயாஸ், எனக்கிருப்பதோ ஒரே மகள். இந்த சொத்து எல்லாவற்றிற்கும் அவள் தான் என் வாரிசு... அவளால் எங்கள் குடும்பம் தழைக்க வேண்டும். இதனால் தான் ஊரிலே நல்லதொரு மாப்பிள்ளை தேடினேன். எல்லாரும் உங்களை சிபாரிசு செய்தனர். எனக்கும் நல்லதாகப்பட்டது. உங்களை மருமகன் ஆக்கினேன்... ஆனால் என் எண்ணத்தில் நீங்கள் மண்ணைத் தூவி விட்டீர்கள்... ஒரு மனிதனுக்கு இரண்டு பக்கம் இருக்கிறது என்பது பொய்யாகவில்லை... உங்களை வெளிநாடு அனுப்பியது உங்களில் மறைந்திருக்கும் பொறுப்புகளை உணர்த்தவே அன்றி பணம் சம்பாதிக்க அல்ல. ஆனால் நீங்கள் உங்களிடம் மறைந்திருக்கும் ஆசைகளை - வெளிநாட்டு நவநாகரிகங்களை - கற்றுக் கொண்டீர்கள். புடைவையை மாற்றுவது போல காலையில் ஒன்றும் மாலையில் ஒன்றும் என மாப்பிள்ளைகளை மாற்றும் நாகரிகத்துக்கு அடிமையாகி கடைசியில் எல்லாம் இழந்து, இப்பொழுது பொறுப்புடன் வந்திருக்கிறீர்கள். என் வம்சம் தழைக்க என் மகளுக்கு ஒரு துணை தேவை... எப்படி அவளிடம் இதைக் கதைப்பேன் என எண்ணிய நேரம் நீங்கள் வந்திருக்கிறீர்கள்; ஆனால் என் மகள் உங்களிடம் ஒரு கோரிக்கை விடுகிறாள்... அதன்படி நடந்தால் ஒரு வேளை உங்கள் விருப்பம் நிறைவேறுமாம்..." என்றார்...

"என்ன... என்ன... சொல்லுங்கோ மாமா" ஒரு வித நப்பாசையுடன் தடுமாறிக்கொண்டே இயாஸ் கேட்டான்.

"பாருங்க இயாஸ், என்மகள் அந்தக் காலத்திலிருந்து குர்ஆன் ஹதீஸ் இவைகளை ஓதி வருபவள்... அவள் இப்பொழுது சொன்னது ஒரு வார்த்தைதான்... அது.... சூறத்துல் பகறாவின் இருநூற்றி முப்பதாவது வசனத்தை தெளிவாக விளங்கி அதன்படி நடக்கும்படி கூறினாள்.... நானும் அதையே விரும்புகிறேன்" என்றார் ஆக்கில் ஹாஜி.

"சரி மாமா, நான் பள்ளிவாசலில் இமாமிடம் கேட்டு... அதன்படி நடக்கின்றேன்"

"அதுசரி... நானும் விளங்கிக் கொள்ள வேண்டும்; வாங்க போவோம்"

இருவரும் பள்ளிவாசல் இமாமிடம் சென்றனர். அவர் விபரங்களை அறிந்து கொண்டார். குர்ஆனை எடுத்து நேரடி மொழி பெயர்ப்பை வாசித்தார்....

'(இரண்டு தடவை தலாக் சொன்ன) பின்னர் ( மூன்றாம் தடவை மீண்டும் ) அவளை அவன் சொல்லி விட்டால் பிறகு அவனுக்கு அனுமதிக்கப்பட்டவள் ( ஹலால் ) அல்ல; வேறு ஓர் ஆணை அவள் மணந்து அவனும் தலாக் சொல்லும் வரை' என குறிப்பிடப்பட்டிருந்தது.

ஹஸ்ரத், இந்த வசனத்தையும் அதன் பின்னுள்ள வசனத்தையும் வாசித்துவிட்டு இருவரையும் பார்த்து கண்டிப்பாகக் கூறினார்:-

"ஹாஜியார்... உங்கள் மகள் தெளிவான பதிலை நல்லவிதமாகக் கூறியுள்ளார்... மூன்றாம் தலாக் தொடர்பான கட்டளைகள் மிகவும் கண்டிப்பானவை. இதனை அரபி மொழி வழக்கில் தலாக் முகல்லழா பயினா என்பார்கள்... இந்த மூன்றாவது தலாக் ஆனது திரும்பி பெறவோ... அல்லது ரத்து செய்யவோ முடியாது. இயாஸ் மூன்று தடவைக்கு மேல் தலாக் சொல்லியுள்ளளார்... இறைகட்டளை; சொன்னது சொன்னதுதான். மாற்றவோ.... மீறவோ.... எவராலும் முடியாது. உங்கள் மகள் இன்னொருவரை கலியாணம் முடிக்க வேண்டும். இரண்டாவது கணவரோடு சர்வசாதாரணமாக வாழ்வை ஆரம்பித்து அவன் அவளை ஒரு வேளை விவாகரத்து செய்ய நேர்ந்தாலோ, அல்லது அவள் அவனை விவாகரத்து செய்தாலோ, அல்லது அவன் மரணித்து விட்டாலோ குறிப்பிட்ட காலம் இத்தா இருந்துவிட்டு அதன் பின்னர் அந்தப் பெண் தன் முன்னால் கணவனிடம் திரும்பி செல்ல விரும்பினால் அவளை திருமணம் செய்து கொள்ளலாம். இதை நன்கு கவனத்தில் கொள்ள வேண்டும்" என நீண்ட பிரசங்கமொன்றையே நிகழ்த்தினார் ஹஸ்ரத்.

இயாஸ் இதைக் கேட்டு திடுக்கிட்டான். நேரத்துக்கு நேரம் கணவனையோ, அல்லது மனைவியையோ மாற்றும் மேலைதேச நாகரிகத்தை போல இஸ்லாத்திலும் இடம் இருக்கும் என்ற தப்பெண்ணம் மாறிவிட்டது. என்ன செய்வான்? காலம் கடந்துவிட்டது... சிலை போல ஆடாது அசையாது நின்றான்.

"ஹஸ்ரத் அவர்களே... நான் சொல்வதை தவறாக நினைக்க வேண்டாம்... என் மருமகன் திருந்தி வந்துள்ளார்... சாதாரண ஒருவரை என் மகளுக்கு நிக்காஹ் செய்து கொடுத்து அடுத்த நாள் அவரை தலாக் சொல்ல வைத்து அதன் பின் இவரை மறுமணம் செய்து கொள்ளலாம் அல்லவா...?" என ஆக்கில் ஹாஜி இமாமைப் பார்த்துக் கேட்டார்...

"தாராளமாக... ஆனால் உங்கள் பெண் விருப்பப்பட வேண்டும். உங்கள் பெண் அவனுடன் வாழவும் வேண்டும்."

"சரி ஹஸ்ரத்..." இருவரும் எழுந்து நின்றனர்... "அஸ்ஸலாமு அலைக்கும். நாங்கள் வருகிறோம்...."

"வஅலைக்குமுஸ்ஸலாம்" என இமாம் விடை கொடுத்தார்.

இருவரும் நீண்ட நேரம் கதைத்து விட்டு பிரிந்து சென்றனர். ஆக்கில் ஹாஜி நேராக தன் மகளிடம் சென்று விபரங்களைக் கூறினார். இப்படியான முடிவுடன்தான் வாப்பா வருவார் என்பதை முன்பே அறிந்திருந்த கமரிய்யா "வாப்பா, வருபவர் தலாக் கூற மறுத்தால்...?" என வினவினாள்.

"ம்...அப்படி ஒன்றும் நடக்காது!" என்றார் ஆக்கில் ஹாஜி.

"சரி வாப்பா... ஆனால் ஒன்று.... நீங்கள் யாரை திருமணம் செய்து வைக்கப் போகிறீர்களோ... அவரை நான் பார்க்க வேண்டும்.... கதைக்க வேண்டும்..." என்றாள்...

"ஒழுங்கு படுத்துகிறேன்"

அடுத்த நாள்.... மறைவிலிருந்து பார்த்தாள்... தூக்கி வாரிப் போடுகிறது! அவளுடன் கல்லூரியில் படித்த மாரிப் நின்று கொண்டிருந்தான்! வாப்பாவை அழைத்த அவள் மாரிபை உள்ளே அனுப்பும் படி கூறினாள்.

உள்ளே வந்த மாரிபைப் பார்த்து... "ஒரு நாள் மாப்பிள்ளையாக வர ஏன் சம்மதித்தீர்கள்?" என அவள் கேட்டாள்....

அவன் கண்கள் கலங்குகின்றன... "என்னைத் தவறாக எண்ண வேண்டாம்... நான் பணத்தாசை பிடித்தவனும் அல்ல; பணத்திற்காக எதையும் செய்கிறவனும் அல்ல; என் நிலைமை இப்படியாகிவிட்டது. என் தங்கச்சியை திருமணம் செய்து வைக்க வழியில்லை. எனவே இப்படி செய்ய வேண்டிய நிலை எனக்கேற்பட்டது..."

"அப்படி என்றால்... உங்கள் வாப்பா... உம்மா...?"- ஆச்சரியத்துடன் கேட்டாள்...

"என் பாடசாலை வாழ்க்கை மட்டுந்தான் உங்களுக்குத் தெரியும். என் மறுபக்க வாழ்க்கை உங்களுக்கு தெரிய நியாயமில்லை..... கமரிய்யா... எங்கள் வாப்பா இருக்கும் பொழுது நாங்கள் நன்றாக இருந்தோம். நான் ஐந்தாம் ஆண்டு ஸ்கொலஷிப் பரீட்சையில் திறமையான சித்தி பெற்றும் எங்கள் வாப்பாவுக்கு வருமானம் கூட என்பதால் அரசாங்க புலமைப் பணம் கிடைக்கவில்லை; ஆனால்... வசதியான பிள்ளைகள் படிக்கும் பாடசாலையில் படிக்க இடம் கிடைத்தது. எங்கட வாப்பா எதிர்பாராமல் ஏற்பட்ட நோயினால் மௌத்தானார். அவர் நோய் நீங்க பெரிதாக பணம் செலவழிக்க நேரிட்டது. வாப்பாவின் மௌத்துக்குப் பின் உம்மாவின் அதிர்ச்சி அவரையும் நோயாளியாக்கி விட்டது. வாப்பாவின் "புரவிடன் பண்ட்" கிடைத்தும் பிரயோசனப்படவில்லை; உம்மாவும் மௌத்தாகிவிட்டார்கள்... நானும் தங்கச்சியும் தனிமரமானோம். நிழல் கொடுக்கவும் எவரும் இல்லை... வீடு சொந்தமாக இல்லை; தாய் பிள்ளைகள், அசல்வாசிகள் அனுதாபத்தை இலவசமாக கொட்டினார்களே தவிர உதவிக்கு வரவில்லை. நான் ஒன்பதாவது படிக்கும் போதே இளம் தொழிலாளியாக மாறவேண்டிய நிலை ஏற்பட்டது.... பெக்டரியில் வேலைக்கு சேர்ந்தேன்... தங்கச்சியை நன்றாக கவனித்தேன். உம்மாவின் காணித் துண்டொன்று கிடைத்தது. பலகையால் வீடுகட்டி நானும் தங்கச்சியும் இருக்கிறோம். தங்கச்சி இப்பொழுது ஒரு டீச்சர். அவளுக்கேற்ற ஒரு கணவனை என்னால் தேட முடியவில்லை. எவ்வளவு படித்திருந்தாலும் ஏன் ஒரு டொக்டராக இருந்தாலும் பெண் என்பவளுக்கு சீதனம், வீடு இப்படி கொடுத்தால்தான் மாப்பிள்ளை கிடைப்பான்.... இன்று எத்தனையோ பட்டதாரிப் பெண்களுக்கு மாப்பிள்ளை தேடி அலைகிறார்கள்... பீ.ஏ, எம்.ஏ படித்த பெண்கள், டீச்சர்மார்கள், சேல்ஸ்மேன்களையும், டிரைவர் மார்களையும், ஆட்டோ ஓட்டுபவர்களையும், பேமண்ட் வியாபாரிகளையும் கலியாணம் செய்துள்ளனர்.... ஏன் இந்த அவலம்...?

"பள்ளிவாசல்களில் பயானுக்கு குறைவில்லை; நீண்ட ஜுப்பா,முகம் நிறைய தாடி..... இவர்களில் எத்தனை பேர் சீதனம் இல்லாமல் கலியாணம் முடித்துள்ளனர்...? வசதிபடைத்தவர்களில் எத்தனை பேர் ஏழைக் குமரிகளை கலியாணம் முடித்துள்ளனர்...? நான் இன்று முஸ்லிம்களை காண்கிறேன்.... ஆனால் உண்மையான முத்தகீங்களை காணவில்லை.... ஏதோ எம் சமூகத்தில் ஒரு சில நல்ல மணம் படைத்தவர்கள் இருப்பதால் நாங்களும் வாழ்கின்றோம்..." என தன் உள்ளத்து ஆதங்கங்களை கொட்டித் தீர்த்தான் மாரிப்.

கமரிய்யா மௌனமாக இருந்தாள்.

நிக்காஹ் மஜ்லிஸ் நடைபெற்றது... புதுமணத் தம்பதிகள் அன்று சுபஹுக்கு முன் எழுந்து குளித்து விட்டு சுபஹுக்குப் பின், முன் வராந்தாவில் அமர்ந்து கதைத்துக் கொண்டிருந்தனர்.

இந்நேரம் இயாஸும் ஆக்கில் ஹாஜியாரும் வருவதைக் கண்டு இருவரும் உள்ளே சென்றனர்....

"மகள் கமரிய்யா, இங்கே வாங்க..." வாப்பாவின் அழைப்பைக் கேட்டு கமரிய்யா வருகிறாள்...

"என்ன வாப்பா....?"

"மாப்பிள்ளையை கொஞ்சம் கூப்பிடுங்க!"

"சரி வாப்பா.... ஆனால் ஒன்று... வாப்பா, இதுவரைக்கும் நான் உங்கள் பேச்சை மீறியதில்லை; இன்று என் பேச்சை நீங்கள் கேட்க வேண்டும்.... இது வெறும் பேச்சல்ல; ஒருவனின் ஏழ்மையை விலைபேசி இந்நிகாஹை எனக்கு முடித்து வைத்துள்ளீர்கள்... அவர் பணத்தில் ஏழையே தவிர, பண்பிலும், நடத்தையிலும் நல்லவர்... எனக்கு முன்பே அவரைத் தெரியும்...' எனக்கு அவரை முடித்துத் தந்து நீங்கள் எனக்கு நல்லதையே செய்துள்ளீர்கள்... என் கணவரின் மானத்தை விலைபேச என்னால் முடியாது. இனி மௌத்து வரைக்கும் அவர்தான் என் கணவர்... மேற்கொண்டு அவருடன் நீங்கள் பேச என்னால் அனுமதிக்க முடியாது. உங்கள் மாஜி மருமகனை வந்த வழியே.... வழி அனுப்பி விட்டு வாருங்கள்..." என பெண் வேங்கையாக நின்றாள்.

இதுவரைக்கு தன் மகள் இப்படி கதைத்ததில்லை; திகைத்து நிற்கிறார் ஆக்கில் ஹாஜி..... மறுபேச்சின்றி வெளியேறினான் இயாஸ்.

காலங் கடந்தது.....

மாரிபும், கமரியாவும் கைக்குழந்தையுடன் காரில் செல்வதை ஜவுளிக் கடையில் சேல்ஸ்மேன் வேலை பார்க்கும் இரு கண்கள் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தன.

□ □ □ □

# சலனம்

"டிரிங்க்.... ட்ரிங்க்.... ட்ரிங்க்... "

டெலிபோன் மணி ஒலிக்கிறது. ரிஸிவரை கையில் எடுத்தேன்... "ஹலோ....."

"ஹாஜியாரா கதைப்பது?" பெண் குரலொன்று கேட்கிறது....

"ஆமாம்.... சொல்லுங்கோ..."

"நான் இப்பொழுது கூறுவது பரம இரகசியமானது... என்னால இதற்கு விடைகாண முடியாது.... பல முறை சிந்தித்தேன்... யாரிடம் கூறி இதை நிவர்த்தி செய்வேன்...? நேரில் கேட்கவும் முடியாது... வெட்கம்! சொந்த போனிலும் கதைக்க முடியாது... என் பெயரையோ.... ஊரையோ கூற முடியாது... எத்தனையோ உலமாக்கள்... படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் நாட முடியாது.... உங்களை நாடுவதென்றால் அதற்கும் காரணம் இருக்கிறது.... உங்களைப் பற்றி பலர் கதைப்பதை நான் கேட்டுள்ளேன்..... ஆழமான கடலில் அலை மோதுவதில்லை. எனக்கு விடை கூற நீங்கள்தான் சரியான ஆள்.... தயவு செய்து அல்லாஹ்வுக்காக உதவி செய்யுங்கள்...."

"பீடிகை வேண்டாம்.... நேராக விஷயத்துக்கு வாருங்கள்"

"ஹாஜியார்.... நான் ஒரு பெண்..."

"தெரியும்.... குரல் சொல்லுகிறது...."

"அதுவல்ல நான் கூறப்போவது.... உடல், உள சம்பந்தமானது..."

"சங்கோஜப்படவேண்டாம்.... சொல்வதை விளங்க சொல்லுங்க...."

"ஹாஜியார் நான் கலியாணம் முடித்து இரண்டு பிள்ளைகளின் தாய்; என் கணவர் நல்லவர்... உடலில் எதுவித கோளாறும் இல்லை. ஆணழகர். என்னை உயிராக நேசிக்கிறார்... ஆனால்... அதாவது என் கணவர் என்னை மகிழ்ச்சிப்படுத்துகிறார். அதில் எந்தக் குறையும் இல்லை; எல்லாம் முடிந்த பின் நிம்மதியாக தூங்கி விடுவார்; என்னால் தூங்க முடிவதில்லை! தூக்கம் வருவதில்லை..... 'பாத்ரூம்' சென்று முகத்தை கழுவி தண்ணீர் குடிக்கிறேன்..... விடியும் வேளையிலும் எனக்கு அவர் தேவைப்படுகிறார்..... என்ன செய்வேன்....? நான் எல்லா வசதிகளும் நிரம்பிய பெரிய இடத்துப் பெண்.... சொந்த கார், வேன் வசதிகள் என்னிடம் உண்டு. பெரிய அரண்மனை போன்ற வீடு.... கணவரும் என்னை விட பெரிய இடத்தைச் சேர்ந்தவர்... சொத்திலும் என்னை விட குறைந்தவரல்லர்; ஆனால் எனக்கேற்பட்டுள்ள விரகதாபம்... என்னைக் கொல்கிறது... எனக்கு பயமாக இருக்கிறது.... அழகிய வாலிபர்களை, வாட்டசாட்டமான ஆண்களைக் கண்டால்.... எப்படிச்சொல்வேன்....?" அவள் நா தழுதழுப்பதை அறிய முடிகிறது.....

"அழ வேண்டாம்.... மேற்கொண்டு கூறுங்கள்...." என்றேன்....

"ஹாஜியார், ஆண்களுக்கென்றால் ஒருவரல்ல இருவர் மூவர் என முடித்துக் கொள்ள இஸ்லாம் அனுமதிக்கிறது..... பெண்ணான நான் என் செய்வேன்...? பயமாக இருக்கிறது..... நரகத்து விறகுக் கொள்ளி ஆவேனோ! எனக்கு இந்த விரகதாபத்திலிருந்து விடுதலை கிடைக்க வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு பெரிய நன்மைகள் செய்வான்.... என்னை யார் என அறிய முயற்சிக்க வேண்டாம். நாளை அஸருக்கு பின் உங்களிடம் பேசுகிறேன்..." ரிஸீவரை வைக்கும் சப்தம் கேட்கிறது....

ஆனால் என் கையில், ரிஸீவர் கனக்கிறது...

"என்ன வாப்பா... ரிஸீவரை கையில் வைத்துக்கொண்டு யோசிக்கிறீர்கள்" என் மகன் என்னைத் தொட்டு கேட்கும்வரை நான் மரமாக நிற்பதை உணர்கின்றேன்.... "இல்லை.... ஒன்றுமில்லை..." - டெலிபோனில் ரிஸீவரை சரியாக வைக்கிறேன்.

என் நினைவலைகள் முகமறியாத அப்பெண்மணி கூறிய வார்த்தைகளில் சுழல்கிறது.... வெட்கத்தை விட்டுக் கேட்கிறாள் என்றால்... அப்பெண் எவ்வளவு வேதனைப்படுகிறாளோ.... இஸ்லாம் எல்லா அம்சங்களிலும் சம்பூர்ணமான மார்க்கம்... இதற்கும் விடையில்லாமல் இருக்காது... யா அல்லாஹ் உன் திருவிளையாடலில் இதுவும் ஒன்றா... உலகில் ஆயிரத்தில் ஒரு பெண் இப்படி இருப்பாள் என்பதை அறிவேன்..

"அல்லாஹு அக்பர்.... அல்லாஹு அக்பர்......"

மஃரிபுடைய பாங்கொலி கேட்கிறது.... வுளு செய்து கொண்டு பள்ளிவாசல் சென்றேன்.... மஃரிபுடைய ஜமாஅத் முடிய சுன்னத் ஸலாத்தையும் நிறைவேற்றிய நான் 'யா அல்லாஹ்..... முகமறியா அப்பெண்ணுடைய குறையை நிவர்த்தி செய்.... இதற்குரிய விடையை எனக்குதா...' என இறைஞ்சினேன்... இஷாவுக்குப் பின்பும் அல்லாஹ்விடம் முறையிட்டேன்..... படுக்கையிலும் சாய்ந்து கொண்டு இதையே எண்ணிக் கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் எனக்கு ஞாபகம் வந்தது... அண்ணல் எம் பெருமான் முகம்மது நபி (ஸல்) அவர்கள், உரிய வயது வந்தால் ஆணோ.... பெண்ணோ திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனக் கூறி, மேலும் திருமணம் செய்துகொள்ள வசதியற்றோர் நோன்பு பிடிக்கும் படியும் கூறியுள்ளவை நினைவுக்கு வந்தன. அந்த நினைவுடன் தூங்கிய நான் சுபஹுக்கு விழித்தேன்....

சுபஹ் தொழுதுவிட்டு வழமையாக ஒரு சில அத்தியாயங்களை மொழிபெயர்ப்புடன் விளக்கமாக ஓதுவேன்... அன்று சூரத்துன் நூர் அத்தியாயத்தை ஓதி பொருளை அவதானித்தேன்.... அதில் முப்பத்து மூன்றாம் ஆயத்தின் தொடரில்...

"திருமணம் செய்ய சக்தியற்றோர் அல்லாஹ் தன் அருளைக் கொண்டு பொருளைக் கொடுக்கும் வரைக்கும் அவர்கள் (நோன்பு நோற்று) தங்களுடைய கற்பை காத்துக்கொள்ளவும் என அல்லாஹ் குறிப்பிடு கின்றான்...." இந்த ஆயத்தின் தொடரை ஓதிய நான் அவைகளை குறித்துக் கொண்டேன்.

"ட்ரிங்.... ட்ரிங்..." டெலிபோன் மணி அலறியது.

"ஹலோ...."

"ஹாஜியார், நான்தான் பேசுகிறேன்...." பெண் குரல் கேட்கிறது....

"சொன்ன நேரத்தில் கதைக்கிறீர்கள்....." என்றேன்.

"தேவை எனக்கு.... நான் சொன்னவற்றை நினைவு கூர்ந்தீர்களா?"

"பயப்படாதீர்கள்.... பயபக்தி உள்ளோருக்கு படைத்தவன் உதவி புரிவான்.... நான் சொல்வது போல் நீங்கள் நடப்பீர்கள் தானே....?"

"இன்ஷா அல்லாஹ்..... அல்லாஹ் சத்தியமாக நடப்பேன்..."

"சரி கேளுங்கள்.... முதலில் நீங்கள் உங்கள் உள்ளத்தை ஒருமைப்படுத்திக் கொள்ளுங்கள்.... அல்லாஹ்வை 'திக்ர்' செய்யுங்கள்.... தஹஜ்ஜுத் நேரத்தில் எழும்பி தொழுது அல்லாஹ்விடம் முறையிடுங்கள்.... தொடர்ந்து நோன்பு வையுங்கள்... அத்துடன் கொழுப்பு சத்து நிறைந்த உணவுகளை தவிருங்கள்... சூடான உணவு வகைகளை நாடாதீர்கள்.... விசேடமாக முருங்கை, பலயாமீன், இறைச்சி வகைகளை சிறிது காலம் வரை நாடாதீர்கள்...... உப்பை குறைத்து சாப்பிடுங்கள்.... புளியாணம் செய்து உண்ணுங்கள்.... மனதை சலனமடைய விடாமல் குர்ஆனை ஓதுங்கள்.... ஹதீஸ் கிதாபுகளை வாசியுங்கள்...... தொடர்ந்து நான் சொன்னது போல் செய்து வாருங்கள்...."

பின்பு, நான் காலையில் ஓதிய குர்ஆன் வசனங்களை எடுத்துக் கூறினேன்... சூரத்துன்னிஸா..... சூரத்துல் பகறா போன்ற அத்தியாயங்களை பொருள் உணர்ந்து ஓதச் சொன்னேன்... "இன்ஷா அல்லாஹ் பலன் கிடைக்கும்" என்றேன்.

"இன்ஷா அல்லாஹ் அப்படியே செய்கிறேன்" என்றாள்.

சில வாரங்களுக்குப் பிறகு... டெலிபோன் மணி அடித்தது;எடுத்தேன்.

"ஹாஜியார், நீங்கள் தானே கதைப்பது...?"

"ஆமாம்.... சொல்லுங்க..."

"முகமறியா உங்கள் சகோதரி கதைக்கிறேன்..."

"அடடா நீங்களா...? எப்படி சுகம்....?"

"நான் நல்ல சுகமாயுள்ளேன். என் பிரச்சினைகள் அல்லாஹ்வின் அருளால் தீர்ந்து விட்டன. உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் இம்மையிலும், மறுமையிலும் நல்ல சுகத்தையும் நல்லருளையும் அல்லாஹுத்தஆலா கொடுக்கட்டும்...."

"மாஷா அல்லாஹ்..... வேறு விஷயங்கள்...."

"ஒன்றுமில்லை ஹாஜியார்.... முன்பை விட பாரம் குறைந்தவளாகி விட்டேன். என் வேலைகளுடன் என் கணவர், பிள்ளைகளின் வேலைகளையும் நானே செய்கின்றேன்.... மனதில் நிம்மதி.... எவ்வித சலனமும் இல்லை...." என்றாள்.

"அதிகமாக உடல் பருமனை குறைத்துக் கொள்ளாதீர்கள்.... ஒரு செய்தி கூறுகிறேன், விளங்கிக் கொள்ளுங்கள்.... நாற்பது நாளைக்கு தொடர்ந்து மாட்டிறைச்சி சாப்பிட்டால் மாட்டுப்புத்தி வரும்... அதேபோல நாற்பது நாளைக்கு மாட்டிறைச்சி உண்ணாமல் இருந்தால் பலவீனம் வரும் என்று ஒரு கதை சொல்வார்கள்... அதனால் அளவோடு உண்ணுங்கள்.... அல்லாஹ் உங்களுக்கு கிருபை செய்வான்...."

"சரிதான் ஹாஜியார்..... ஜஸாக்கல்லாஹு ஹைரா"

"நன்றி..." ரிஸீவரை வைக்கிறேன். உடம்பெல்லாம் பொங்கிக் கொண்டிருந்த தணல், குளிர்வதை உணர்கின்றேன். "அல்ஹம்துலில்லாஹ்.." நிம்மதிப் பெருமூச்சு என் உள்ளத்திலிருந்து வெளியே வருகின்றது.

**நவமணி - 2007.03.25.**

# அனுபவம் புதுமை

அந்தி சாயும் நேரம். எங்கும் ஜனத்திரள். அங்காடி வியாபாரிகளின் தொல்லை; பிச்சைக்காரர்களின் சோம்பல், அழுகை; கூலிகளின் வீரமொழி; இவைகள் அங்கு காதைப் பிளந்தன. அமோக ஆரவார நெருக்கடியில், பாதையில் கவனமாக நடக்க வேண்டும் என்ற பாதசாரிகளின் விரைவு தூசிப் படலத்தைப் பறக்கச் செய்கிறது. கார், பஸ் வண்டிகளின் ஓசை 'இதுதான் கொழும்பு' எனக் காட்டிக் கொண்டிருந்தது. இந்த வேளையில்....

"ராமு..... என்னப்பா அமைதியாக வருகிறாய். சம்பளம் கிடைத்தவுடன் மௌன விரதமோ...?"

"ம்.... இல்லை கேசன், நாளைக்கு ஊருக்கு போய் வர வேண்டும்" என நினைத்தேன்.

"இப்போது ஊர் நினைவு ஒன்று வந்தால்.... போடா..... உனக்கு எல்லாம்.... சரி... சரி"

"மறுத்துப் பேசாதே! இரண்டு நாள் லீவு.... நீயும் வரவேண்டும்."

"என்னடா... ஒரே அடியாக... என்னையும்...."

"ஆமாம். கட்டாயம் நீ வரவேண்டும். நாளை போயா தினம். காலை எட்டுமணிக்கு வா... கட்டாயம்.... இல்லை, நான் உன் வீட்டுக்கு வருவேன்."

"ம்... சரி... வருகிறேன். ஆட்சேபனை இல்லை. ஆனால் இன்று ஒரு ஷோ பார்க்க வேண்டும் என நினைத்தேன். நீயும் வருகிறாயா? "பூமாலை"... திறமையான கதையமைப்புக் கொண்ட படமப்பா."

"வேண்டாமடா.... நான் இருக்கும் வீட்டார் யாவரும் கதிர்காம உற்சவத்துக்கு போய் இருக்கிறார்கள். நான்தான் இப்பொழுது வீட்டுக்குக் காவல். நாளை அவர்கள் வருவார்கள். அடுத்த வாரம் படத்தைப் பார்ப்போம்... ம்... இடம் வந்து விட்டது. வரட்டுமா...? நாளை காலை மறந்து விடாதே...."

"சரி."

அமைதியான இரவு நேரம். மழை சிறிது பெய்கிறது. டங்... டங்... டங்... எட்டு மணி அறிவிக்கும் ஓசை எங்கிருந்தோ காற்றிலே பறந்து வந்தது. அதே நேரம்... "அம்மா..." - ஒரு பெண் குரல்.

புத்தகமொன்றில் தன்னை மறந்திருந்த ராமு.... ஜன்னலைத் திறந்து சத்தம் வந்த திசையைப் பார்க்கிறான். மங்கிய மின் ஒளியில் மங்கை ஒருத்தியைக் காண்கிறான். அவனைக் கண்ட அவள் "ஐயா..." என்கிறாள். இதைச் சொல்லும் போது அவள் வேல் போன்ற விழிக் கூட்டில் முத்தென

கண்ணீர் அரும்பிற்று. அரும்பிய கண்ணீர் ஆறாக ஓட, "ஐயா.... என்னைக் காப்பாற்றுங்கள் ஐயா...." என்கிறாள். அவனுக்குப் பகீர் என்றது. ஊரடங்கிக் கொண்டு வரும் நேரம் தன்னந்தனியே ஒரு பெண்.... அதுவும் அடாத மழையில்... தனிமையாக இருக்கும் ஓர் ஆணிடம் வேண்டுகிறாள். பிரமிப்பு அடைந்த ராமு சிறிது தைரியத்தைக் கூட்டி, "ஊரடங்கிக் கொண்டு வரும் நேரமம்மா.... பொலிஸ்காரர்கள் உலா வர ஆரம்பித்து விட்டார்கள். உள்ளே வாருங்கள்!" என்றான் மனம் குழம்பி நின்ற படியே.

அமைதியாக வந்து அவன் காட்டிய ஆசனத்தில் அமர்கிறாள். பௌடர் அப்பி, குளிர் லெக்டோ பூசி, ரோல்கோல்ட் சிலையெழில் மேனியாக அவள் இருந்தாள். பாதாதி கேசம் வரை பார்க்கிறான் அவன். பீறிட்டுக் கிளம்பும் அழுகுரலைச் சேலைத் தலைப்பால் வாய்பொத்தி அடக்க முயல்கிறாள் அவள். கண்களில் தாரைதாரையாக நீர் வழிந்து கொண்டே இருந்தது. அவளைக் கண்டு அவன் இதயம் கண்ணீர் வடிக்கிறது. தொண்டை அடைக்க, "என்னம்மா.... தன்னதந்தனியாக இரவில்... அதுவும் அடாத மழையில் இப்படிக் கண்ணீர் ததும்ப நிற்கிறீர்களே?" என்றான்.

சிறிது மௌனத்துக்கிடையே.... "இல்லை... ஐயா... இல்லை... நீங்கள் நல்லவராக இருக்கின்றீர்கள். நான் உங்கள் சகோதரி போல, எனக்குக் கை கொடுத்து உதவும் தெய்வம் நீங்கள்" என்று அவன் காலைப் பிடிக்கிறாள் அவள்.

தர்ம சங்கடமாகி விட்டது அவனுக்கு. "என்னம்மா சொல்கிறீர்கள்?"

"ஆம்... ஐயா. நான் இந்த ஊரைச் சேர்ந்தவளல்ல. எனது ஊர் பண்டாரவளை. நண்பர்களுடன் கதிர்காம உற்சவத்துக்குப் போய், வீடு திரும்பிக் கொண்டிருந்தோம். இரவுச் சாப்பாட்டை இங்கே ஒரு மைதானத்தில் இறங்கி சாப்பிட்டோம். சாப்பிட்ட பின் எல்லோரும் வந்து விட்டார்கள் என நினைத்து என்னை மட்டும் விட்டு விட்டுச் சென்று விட்டனர்." எனக் கூறி ஒப்பாரி வைத்தாள்.

என்ன சொல்வதென்று தோன்றவில்லை.... அச்சத்துடன் தொடர்ந்தும் அவள்... ஒப்பாரிக்கிடையே, "நான் அப்படி அவர்கள் திரும்பி வருவார்களா எனப் பார்த்துக் கொண்டிருந்தேன். யாரும் வரவில்லை. நீண்ட நேரம் அங்கே நின்றுவிட்டேன். பலர் என்னைப் பார்த்து "விசில்" அடிப்பதும், நெருங்கி வந்து மேலே மோதிச் செல்லுவதுமாக இருந்தனர். நான் பயந்து விட்டேன். கடவுளே... பயந்துகொண்டே ஓட்டமும் நடையுமாக வந்தேன். வந்த இடத்தில் மழை பிடித்துக் கொண்டது." எனக் கூறி சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்தாள்.

அவனுக்கு உச்சி முதல் நடுங்க ஆரம்பித்து விடுகிறது. வெளியே அனுப்புவோமா என்றால் இளகிய மனம் இடங்கொடுக்கவில்லை. "அம்மா.... தவறாக நினைக்க வேண்டாம். இந்த வீட்டில் யாரும் இல்லை.... இந்த அறையில்தான் நான் இருக்கிறேன். காலையில் நான் உங்கள் ஊருக்கு வண்டி ஏற்றி விடுகிறேன். பயப்படாமல் இக்கட்டிலில் படுத்துத் தூங்குங்கள்."

அவனை ஆச்சரியத்துடன் பார்க்கிறாள் அவள்.... என்ன கூறுவதென்று தோன்றவில்லை அவளுக்கு. வெளியே படுப்பதென்றால் அடாத மழை.

"நான்... வந்து... தவறாக நினைக்க வேண்டாம். கீழே பாயை விரித்துப் படுக்கிறேன். நீங்கள் பயப்படாமல் தூங்குங்கள். ஏதாவது பேச வேண்டுமென்றால் காலையில் பேசுவோம்" என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. கட்டிலருகே வந்து தலையணையில் முகத்தை வைத்து அழுகிறாள். நிலைமை தர்மசங்கடமாய் இருக்கிறது. அவன் வேறு பாய் ஒன்றை விரித்துக் கீழே படுத்து விடுகிறான். மனம் திக்... திக்... என அடிக்கிறது. அவளைப் பார்க்கிறான். அவள்... எரிந்து கொண்டிருக்கும் விளக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். மனம் படபடக்க "குப்பி விளக்கை அணைக்கட்டுமா?" என்கிறான் அவன். தலையசைக்கிறாள்.

விளக்கு அணைகிறது. அங்கே இருள். வெளியே "சோ" என்ற மழை. அவன் முகத்துக்கு நேரே சூடான காற்று. கையொன்று அவனைத் தழுவுகின்றது. இளங்காளையல்லவா அவன்! உணர்ச்சி வசப்படுகிறான்.

வெளியே "சோ" எனப் பொழியும் மழையை பூமாதேவி தழுவிக் கொள்கிறாள். உள்ளே... ஈருடல் ஓருடல் ஆகின்றது.

டாங்... டாங்... டாங்...

ஏழு மணி. படுக்கையில் இருந்து திடுக்கிட்டு எழுந்தான் ராமு. அவன் செவிப்பறையைக் கிழித்துக்கொண்டு அவ்வொலி அதிர்ந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்க்கிறான். பக்கத்திலே அவள் இல்லை. அறையை நோட்டம் விடுகிறான். தூக்கி வாரிப் போடுகிறது அவனுக்கு. அங்கே... தன் சூட் கேஸ், சம்பளப் பணம், ஆசையாகத் தங்கைக்கு என வாங்கிய வைர நெக்லஸ், மேசையில் இருந்த தன் அழகிய ரிஸ்லட், பார்க்கர் பேனா.... ஒன்றுமே அங்கு இல்லை; அவன் நெஞ்சத்தில் நினைவலைகள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. துடித்தான்... துவண்டான், கோ... எனக் கதறி அழவேண்டும் போலிருந்தது. தலையைக் கரங்களால் மோதிக் கொண்டான். அதே நேரம் வாசலில்...

"ராமு...." எனும் குரல்.

பதறுகிறது உடல். அவமான உணர்ச்சி கண்ணீரைச் சொரிகின்றது. சேகரன் வருகிறான். ராமு நிலை கண்டு திடுக்கிட்ட அவன், "என்னப்பா, என்ன?" என்கிறான். இரத்தமேறி விடுகின்றன அவன் கண்கள். மான உணர்ச்சி வாய்க்குப் பூட்டுப் போடுகிறது. சிந்தனைச் சாளரம் மூடி மூடித் திறந்து கொண்டிருக்கிறது. "சேககா...." எனக் கட்டி அணைக்கிறான். பதறுகிறான் கேசகன்.

"அன்று... நயவஞ்சகத்தையும் நம்பிக்கைத் துரோகத்தையும் கை முதலாகக் கொண்டு செயல்படும் ஒரு கூட்டம் உண்டு என்றாயே; இன்று அக்கூட்டத்துக்குப் பலியாகிவிட்டேனப்பா."

"என்ன உளறுகிறாய்....?"

நேற்று இரவு நடந்தவைகளைக் கூறுகிறான் அவன். கேசகன் உடல் பதறுகிறது. "இதே தொழிலாகக் கொண்ட பல கூட்டங்கள் நகரத்தில் பல பகுதிகளிலும் இருக்கிறார்கள். இவர்களுக்குத் தெரியாத ரகசியம் யாருக்கும் தெரியாது. உன் வீட்டில் யாரும் இல்லை. சந்தர்ப்பத்தை உணர்ந்து செயல்பட்டார்கள். வெற்றியும் பெற்றார்கள்... நீ முதலில் கொழும்புக்கு வந்த போது எச்சரித்தேன். அது நடந்து விட்டது. நீ மட்டுமல்ல, பெரிய பெரிய இலட்சிய வாதிகள், இந்தச் சாக்கடையில் வீழ்ந்து தத்தளித்துள்ளனர். உன்னைப் போன்ற கௌரவமான வாலிபர்கள் பஸ்களிலும், ரயில்களிலும் இவர்கள் வலையில் சிக்கி அடி, உதை படுகின்றனர். இக்கூட்டங்களுக்குப் பெரும்பான்மை டாக்ஸி டிரைவர்கள் தான் கூட்டாளிகள். என்ன செய்ய... பெண்மை, கற்பு நூல்களிலே தான் காணக்கிடைக்கிறது."

"ஐயோ.... கேசகா... உன் அனுபவ வார்த்தை அன்று கேட்டேன். இன்றும் கேட்கிறேன். இது எனக்குப் பேரிடி. என் உடை, ஆசையாய்த் தங்கைக்கு வாங்கி வைத்த வைர நெக்லஸ், கடிகாரம்.... ஐயோ.... எல்லாம் அந்தக் கள்ளி எடுத்து விட்டாளே. இதைப் பொலிஸில் சொல்ல வேண்டும். வா போகலாம்."

சிரிக்கிறான் கேசகன். "என்னப்பா.... அவமானத்தைப் பறை சாற்றுகிறாயா? இப்படியான கேஸ் எவ்வளவோ போலிஸுக்கு வந்து விட்டது. அவர்களும் எவ்வளவோ முயற்சி செய்கிறார்கள். ம்... போனது போகட்டும். நீ இனிமேலும் இப்படி நடக்காமல் பார்த்துக்கொள். ஏனெனில் ஒழுக்கத்தை உயிராக மதிக்கும் உன் பெற்றோருக்கும், ஊராருக்கும், இது தெரிந்தால் என்ன நடக்கும் ராமு..?"

கேசகன் சிறிது நிறுத்திவிட்டுக் கூறுகிறான்:-

"ஒன்று சொல்ல விரும்புகிறேன். எக்காலமும் மனதில் வைத்துக்கொள். கற்பு பெண்களுக்கு மட்டுமல்ல; ஆண்களுக்கும் உண்டு. இதை உணராது செயல்பட்டாயே.... அதற்கு இது நல்ல பலன். படித்துவிட்டால் மட்டும் போதாது. அனுபவமும் வேண்டும்."

ராதா - 1965.

# மௌன ராகம்

"ட்ரிங்.... ட்ரிங்... ட்ரிங்..."

அமைதியை உடைத்துக் கொண்டு அலறியது டெலிபோன்.

படுக்கையில் சாய்ந்திருந்த அவள்... எழுந்தாள்.....

"ஹலோ...."

"ஹலோ.... பரீதா... நான் தான் சுலைஹா கதைக்கிறன்."

"ஏது இந்த நேரத்தில.... ஏதும் அவசரமோ....?"

"உனக்கு ஓய்வான நேரம் இந்த நேரம் தானே? அதனால் தான் இந்த நேரம் கதைக்கிறேன்..."

"சரி... சரி... விஷயத்துக்கு வா...."

"போடி.... உன்னை நினைத்தால் எனக்கு பொறாமையாக இருக்கிறது.... அதனால் தான்..."

"சரி... சரி... அறுக்காதே... என்ன விசயம்..?"

"ஆமான்டி... அன்று நாங்க உங்க வீட்டுக்கு வந்த நேரம் நீயும்.... உன் ஹஸ்பண்டும் எங்களை எப்படி கவனித்தீர்கள்... தாங்ஸ் டி.... உன் இலட்சியம் போலவே இலட்சத்தில் ஒரு புருஷன் அமைந்து விட்டான்.... என் கணவர் உங்களிருவரையும் புகழ்ந்து தள்ளுகிறார். உன் அமைதிக்கும் அறிவுக்கும் அல்லாஹ் உனக்கு நல்லதொரு வாழ்வு தந்திருக்கிறான். படித்து பட்டம் பெற்ற நீ... முன் உதாரணமாக செயல்படுகிறாய்... எனக்கு எவ்வளவு சந்தோஷம்... நான், சுபைதா.... நஸ்ரீன்.... இவர்களை ஸ்கூல்ல சந்தித்து உன்னைப் பற்றி கூறினேன்.."

"நன்றி.... நன்றி...."

"நன்றி சொல்ல வேண்டியது நான். அவர்களும் ஒரு நாள் உன் வீட்டுக்கு வருவார்களாம்... ஏழ்மை விளிம்பில் எங்களுடன் ஒரே அறையில் இருந்த நீ.... இப்படி சொகுசாக வாழ்வதை எண்ணி... நான் அல்லாஹ்வை புகழ்கிறேன். அத்துடன் நீ எனக்குச் செய்த உதவியையும் என் வாழ்நாளில் மறக்க மாட்டேன்."

"சரி... சரி... புகழ்ந்தது போதும்... டெலிபோன் பில் ஏறும்..."

"பரவாயில்ல... நான் ஸ்கூல் அறையிலிருந்து கதைக்கிறன்... இன்ஷா அல்லாஹ் மீண்டும் சந்திப்போம்...."

நீண்ட பெருமூச்சொன்று அவள் இதயத்திலிருந்து வெளியே கனலாக வந்தது. கண்களிலிருந்து வடிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

சுலைஹா..... நீ வஞ்சகமில்லாதவள்... சாதாரணமாகப் பேசி விட்டாய்... ஆனால் என் நிலைமை உனக்குப் புரியாது.... ஒரு மனிதனுக்கு இரண்டு பக்கங்கள். நீ.... என் ஒரு பக்கத்தைத்தான் பார்த்தாய்... மறுபக்கத்தை பார்த்தாயானால் அனுதாபப்படுவாய். இல்லை, இல்லை, இரத்தக் கண்ணீர் வடிப்பாய்... - தனக்குள்ளே கூறியவளாக கண்களிலே ஆறு பெருக்கெடுத்தோட அறைக்கதவை மூடினாள்.... கட்டிலில் அமர்ந்து மீண்டும் மனதோடு உரையாட ஆரம்பித்தாள்.

சுலைஹா....நான் பெரிய வாழ்வு வாழ்கிறேன். சந்தோஷமாக காலத்தை கழிக்கிறேன் என்று உன் நினைவு. உண்மைதான்டி... உண்மைதான்.' கத்துகிறாள்... முடியமட்டும் அழுத அவள்... தாவணியால் முகத்தைத் துடைத்துக் கொள்கிறாள். 'சுலைஹா உனக்குத் தெரியும் சிட்டுக்குருவிகளாக நாம் கலாசாலையில் உலவினோம். எமது எதிர்கால இலட்சியங்களைப் பற்றி கற்பனையில் திளைத்தோம்... எவ்வளவு அலங்கார வாழ்வு.... சின்னச் சின்ன கனவுகள்.... பசுமை நிறைந்த நினைவுகள்; என்ன சொல்ல! பட்டாம் பூச்சிகளாக பறந்தோம். அறிவு வளர்ந்த அந்தப் பருவத்தில் மொட்டாக இருந்தோம்.... நானும் நீயும், சுபைதாவும், நஸ்ரீனும் எப்படி எல்லாம் கதைத்தோம்!

கலாசாலையை விட்டு வெளியேறினால் எங்களுக்கு எமது பெற்றோர் கல்யாணம் பேசுவார்கள்..... கல்யாண மார்க்கெட்டில் இளைஞர்களின் ரேட்... ஆளுக்கு தகுந்த மாதிரி இருக்கும். எவ்வளவு படித்தாலும் பெண்களுக்கு ரேட் இல்லை; எவனுக்கோ கழுத்தை நீட்டி பிள்ளை பெறும் இயந்திரமாக மாற வேண்டும்... இது கூடாது; எங்கள் ஸீனியர், மர்யம் - பீ.ஏ. அவங்களுக்கு டீச்சர் வேலை கிடைத்தது.... கல்யாண மார்கெட்டில் சொந்த வீடோ கூடுதலான ரேட்டோ, கொடுக்க முடியாத அவளுக்கு சாதாரண ஒரு டிரைவரை கை பிடிக்க நேர்ந்தது. இப்படி எத்தனை பேர்களைப் பற்றி நாங்கள் கதைத்தோம். இப்படி எங்களுக்கிடையே நடக்கக் கூடாது எனக் கனவு கண்டோம்.... அது நடந்தது... எமது இலட்சிய வாழ்வு மண்ணாகி விட்டது. பெண்கள் எவ்வளவு தூரம் முற்போக்கு என்றும், புரட்சி என்றும் பேசினாலும் ஆண்களைச் சுற்றியுள்ள சமூகத்தில் பெண்கள் அடிமைகள்தான்.... உனக்கென்ன.... உன் இலட்சியப்படியே வாழ்வு அமைந்து விட்டது. ஆனால் சுபைதா, நஸ்ரீன் இவர்களின் பெற்றோர் கல்யாணச் சந்தையில் மணவாளர் தேடுகிறார்கள்.

என்பெற்றோரும் இதே நிலையில் தான் இருந்தார்கள். ஆனால்.... என் மூலம் என் குடும்பத்தாருக்கு அதிர்ஷ்டம் அடித்து விட்டது. உனக்குத் தெரியும் எங்கள் வாப்பா சாதாரண ஒரு தொழிலாளி... இரண்டு ஆண்கள், மூன்று பெண்கள் உள்ள குடும்பத்தில் நான் மூத்தவள். ஜீ.சீ.ஈ. படித்து முடித்த என் தம்பி இரண்டு பேரும் பெக்டரி ஒன்றில் லேபராக வேலை செய்தனர்... தங்கைகள் வீட்டில். எனக்குப் புலமைப் பரிசிலுடனும் உள்ளூர் சமூக மன்றங்களின் உதவியுடனும் பீ.ஏ. வரை படிக்க முடிந்தது.... ஆசிரியர் தொழில் கிடைத்தால் எங்கள் வீட்டு கஷ்டம் நீங்கும் என எண்ணினேன். ஆனால் என்னை படிக்க வைக்க என் உம்மா, வாப்பா எடுத்த சிரமத்தை விட மாப்பிள்ளை தேடுவதில் அதிகக் கஷ்டப்பட்டனர். உனக்கமைந்த வாழ்வு போல எனக்கு அமையாதா.... என ஏங்கி நின்றேன்... நாள் தவறாமல் இஸ்லாமிய இலட்சியம் பேசும் சமூகம் இலட்சம் கேட்கும் பொழுது என்னைப் போன்றோர் என்ன செய்வார்கள்! சமுதாயம் இதைப் பற்றி சிந்திப்பதில்லை; ஏதாவது தவறு நடந்தால் நாக்கில் நரம்பின்றிக் கதை கட்டுவார்கள்.... இவர்களைப் போன்றோரால் எமது சமுதாயம் இங்கிருந்து எங்கே போகுமோ!'

இப்படி இருக்கும் பொழுதுதான் சுலைஹா, நாங்கள் எவரும் எதிர்பாராத கலியாணப் பேச்சு வந்தது. எமது ஊரிலே வசதியான இடத்திலிருந்து என்னை பெண் கேட்டு வந்தனர். இது எனக்கு உலக அதிசயமாக இருந்தது. எங்கள் சமூகத்தில் எல்லாரும் இலட்சம் கேட்பவர்களல்லர்; இலட்சியவாதிகளும் உள்ளனர்.... ஏழைப் பெண்ணை வசதியான ஒருவர் - கூடுதலான மஹர் கொடுத்து, இதர செலவுகளும் செய்து - கலியாணம் முடிப்பது என்றால் அது உண்மையான இஸ்லாமிய வரம்பு முறைதானே! எங்கள் வீட்டில் எல்லாருக்கும் விருப்பம்...

கலியாணத்துக்கு முன்பே அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.....

"தொழில் செய்யக் கூடாது." தொழிலை விட்டேன். "முழு பர்தா முறையில் உடை அணிய வேண்டும்." எங்கள் வீட்டில் எல்லாரும் அதைப் பின்பற்றினர்.

தம்பிமார்களுக்கு வேலைத்தளத்தில் முக்கிய பொறுப்புகள் கொடுக்கப்பட்டன. எமது வீடும் பெரிதாக எல்லா வசதிகளுடனும் கட்டப்பட்டது. எங்கள் வீட்டில் சந்தோஷம் தாண்டவமாடியது. எங்கள் நடைமுறையும் மாறியது.

எமது திருமணம் சாதாரணமாகவும், எளிமையாகவும் அடுத்தவர்களுக்கு எடுத்துக்காட்டாகவும் நடைபெற்றது.

திருமணம் நடந்து சில நாட்கள் கழிந்து விட்டன. என் கணவர் என்னுடன் அன்பாக நடந்தார். சிரித்த முகத்துடன் உபசரித்தார். ஆனால்...ஆனால்... எப்படிச்சொல்வேன்! ***அது அழகிய துப்புரவான கிணறு; நிறையத் தண்ணீர் கிணற்றில்; புதிய வாளி தொங்குகிறது. ஆயினும் கயிறு எட்டுவதில்லை; எப்படித் தண்ணீர் அள்ள முடியும்?*** இது தான் என் நிலைமையும். உனக்குப் புரிந்திருக்கும்..... இரவு நேரங்களில்...... அவரின் இயலாமை என்னைத் தவிக்க வைத்தது; இரவின் தனிமை என்னை வாட்டியது....

தலையிலே எரிமலை வெடித்தது. என்னை இப்படியா சோதிக்க வேண்டும்! நான் ஏமாற்றப்பட்டேன். எனக்கு ஆத்திரம் மேலிட்டது. அவர் சட்டையைப் பிடித்து.... "நான் என்ன குற்றம் செய்தேன்...? இப்படி இருக்கும் நீங்கள் ஏன் என்னை திருமணம் செய்தீர்கள்?" தலையை அவர் நெஞ்சிலே அடித்து ஓலமிட்டேன்.

சிறிது நேரம் என்னைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்த அவர்.... "திருமணம் என்றால் இது மட்டும் தானா? நீ படித்தவள்... இதைப் புரிந்து கொள்வாய் என்றுதான் உன்னை திருமணம் செய்தேன்...."என்றார்.

"உங்கள் பலவீனத்தை மறைக்க இப்படியும் ஒரு சமாளிப்பா? ஒரு பெண்ணின் உணர்வுகளை கட்டுப்படுத்தி வாழ்க்கையை பாழ் படுத்துவதுதானா உங்கள் பணச் செல்வாக்கின் பண்பு?"

என் கோபம் அவரை நிலைகுலையச் செய்திருக்க வேண்டும்... மேற்கொண்டு அவர் எதையும் பேசவில்லை.

"நீங்கள் பேசமாட்டீர்கள். ஆனால் என்னால் இப்படி வாழ முடியாது. உலகிலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் ஏற்படும் உணர்வு இது. நான் எப்படி விதிவிலக்காக முடியும்? நான் நாளை எங்கள் வீடு செல்வேன். குவாஸிகோர்ட்டில் எல்லாவற்றையும் முறையிடுவேன்....." என்றேன்.



திகைத்துப் போய் நின்றார்.

"பரீதா நான் குற்றவாளிதான். உனக்கு மட்டுமல்ல... இந்த சமூகத்துக்கே நான் ஒரு குற்றவாளி. என் பலவீனத்தைப் போக்க பணம் இறைத்து செலவு செய்தேன். இயற்கையை மாற்ற முடியாது... பத்து தலைமுறைக்கு வாழ என்னிடம் பணம், சொத்து உள்ளது. ஆனால் நான் இயலாதவன்... என் சொத்து, சுகத்தில் என்ன பிரயோசனம்?" தலையை சுவரில் மோதிக் கொண்டு அழுகிறார்... சற்று நேரத்தில் மௌனத்தைக் கலைத்தவராக என்னை வாஞ்சையுடன் பார்த்து.... "பரீதா, நீ என்னை டிவோஸ் பண்ணி சமூகம் என்னை இயலாதவன் என இகழ்ந்தால்..... நான் உயிருடன் இருந்து என்ன பிரயோசனம்? நான் இப்படி இருந்தால் தான் என்னால் தலை நிமிர்ந்து வாழ முடியும்....."

சிறிது அமைதிக்குப் பின் அவர் மீண்டும் தொடர்ந்தார். "பரீதா, நீ எடுக்கப் போகும் முடிவை மறுபரிசீலனை செய்... என் நிலைமையை விட உன் குடும்ப நிலமையை யோசித்துப் பார்.... அதன் பின் உன் முடிவை எடு...." என்றார்.

நான் சிந்தித்தேன்... எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் வாப்பா எவ்வளவு கஷ்டப்பட்டார். பணம் இல்லாத நேரத்தில் அவரை குடும்பத்தார் முதல் எல்லாரும் இளக்காரமாக நினைத்தனர். இன்று அவர் உதவியை நாடி எத்தனை பேர் வருகின்றனர்! ஹாஜியார்.... எனஅவரைச் சுற்றும் கூட்டம்; என் தம்பிமார் பொறுப்புடன் எந்தளவு சந்தோஷமாக வாழ்கின்றனர். சொந்தக் காரில் பயணம் போகின்றனர்... தங்கச்சிகளுக்கு பெரிய இடங்களிலிலிருந்து கலியாணப் பேச்சுவார்த்தைகள் வருகின்றன..... உம்மாவின் சந்தோஷம்... இவைகளை என் சுயநல வாழ்வுக்காக கெடுக்க வேண்டுமா...? கூடாது... கூடவே கூடாது.... சுலைஹா... இப்பொழுது புரிகிறதா? எனது அடுத்த பக்கம் எப்படி இருக்கிறது.....? யாருக்கு தெரியும்..... தெரிய வேண்டுமா...? கூடாது..... அது என்னுடன் புதையட்டும்.... இரவு நேரம் என்னை கொல்லத்தான் செய்கின்றது.... என்றாலும் நான் ஒரு மரக்கட்டை.... என்று எண்ணியவாறே நீண்ட பெருமூச்சொன்றை விட்டாள் பரீதா.

**நவமணி - 2002.மார்ச்.03.**



# புது யுகம்

சுபஹ் நேரம் முடிய கொஞ்ச நேரமே இருந்தது. திருக்குர்ஆனின் சில அத்தியாயங்களை ஓதி முடித்த நான் யோக பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். உடம்பு, பயிற்சியில் ஈடுபட்ட போதிலும் உள்ளம் நேற்றைய சம்வம் ஒன்றைச் சுற்றிச் சுழன்று கொண்டே இருந்தது.

சே.... என்ன உலகம்...? என்ன சமூகம்...? என்ன வாழ்வு...? என் நினைவலைகள் பின் நோக்கி தள்ளப்படுகின்றன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை..... விடுமுறை நாள்.... வீட்டுத் தேவைகளை நிறைவு செய்ய உணவுச் சாமான்கள் வாங்க வேண்டிய நாள்..... பக்கத்து வீட்டு நண்பர் பக்கீர் நானாவுடன் சந்தைக்குக் கிளம்பினேன்.

என்னதான் மனிதன் ஓடி ஓடித் தேடினாலும் ஒரு சாண் வயிற்றை நிரப்பும் வழிதான் முக்கியம் என்பதை சந்தையில் கூடும் ஜன நெரிசல் சொல்லாமலே சொல்கிறது. அந்த ஜனக்கூட்டத்தில் நானும் ஒருவனாக நண்பருடன் செல்கிறேன்.

“அல ருபியலய், கோவா பனஹய்... லாபய்.... எண்ட... எண்ட.... வாங்கோ... வாங்கோ..... அலுத் படு.... புதிய சாமான்” என்ற பல வித சப்தங்கள்.......

இடையில் வார்த்தைகளை எழுத்தில் வடிக்க முடியாது ஒரு குரல். திரும்பிப் பார்க்கின்றேன். இறைச்சிக் கடை முதலாளி ஒரு பையனின் தலையில் ஓங்கிக் குட்டுவதைக் கண்டேன். பாவம்.... கொஞ்சம் நெருங்கிப் பார்த்தேன்.

அட ஆண்டவனே... எனக்கு தூக்கிவாரிப் போடுகிறது. அது.... எங்கள் பாடசாலையில் நான்காம் வகுப்பில் படிக்கும் மாணவன் மன்சூர். முதலாளி குட்டிய இடத்தில் தடவிக் கொண்டிருந்தான். கண்கள் கலங்கியிருந்தன.

நான் முதலாளியை நெருங்கி என்ன செய்தி என மெதுவாகக் கேட்டேன். “பாருங்க மாஸ்டர்.... கஷ்டமென்று உதவி செஞ்சா எங்களுக்கு நஷ்டத்தைத்தான் தாராங்க..... இந்தப் பொடியன்ட வாப்பா மௌத்தாகி ஒரு வருஷம் இல்ல; உம்மாகாரி பொடியன வெச்சி சோறுபோட ஏலா; வேலையப் பழக்கி கடையில வெச்சிக் கொள்ளுங்கோ எண்டதால.... பாவம் என்று கடையில வெச்சிக் கொண்ட; ஒரு மாதத்துக்கு மேலாக கடையில நிற்கிறான். இன்னும் வெட்டிக் கொடுக்கிற இறைச்சியை இலையில சுத்த ஏலா...... சே....

அதுக்கென வேலை முடிச்ச ஒடனே சம்பளத்த ஊட்டுக்கு எடுத்துக் கொண்டு ஓட ஏலும் சனியன்...." இன்னொரு அடியை மண்டையிலே போட்டார்.

எனது உள்ளத்தில் பல முட்கள் ஒன்று சேர்ந்து குத்துவது போல இருந்தன..... திரும்பிப் பார்க்கின்றேன். மீன் கடை, மரக்கறிக் கடை, சில்லறைக் கடை... எல்லாக் கடைகளிலும் பாடசாலையில் படிக்க வேண்டிய சின்னஞ் சிறார்கள் முதல், பெரிய மாணவர்கள் வரை பல பேர்கள் வியாபாரஞ் செய்து கொண்டிருந்தனர்.

"கருமம்.... படிக்க வேண்டிய காலத்தில் வியாபாரம். தாய் தந்தையருக்கு உணர்ச்சியில்லை, இவர்களின் எதிர்காலம் இங்கிருந்து எங்கு கொண்டுபோய் முடியுமோ. யா அல்லாஹ்!" இதயக் குமுறலை உள்ளே அடக்கிக் கொண்டே அங்கலாயத்தேன்...

"உண்மைதான்.... மாஸ்டர்.... என்றாலும் இவர்களின் பிரச்சினை உங்களுக்குப் புரியவில்லை; இவர்களின் உழைப்பு அவர்கள் குடும்பத்தைக் காப்பாற்றியது. நீங்கள் சொல்வது போல இவர்கள் பாடசாலை சென்றால் அவர்கள் குடும்பம் எப்படி வாழ்வது...? அது சரி... பாடசாலை செல்வதென்றால் பொருள் இல்லாத இவர்கள் எப்படி படிப்பார்கள்...? வறுமை வறுமை.... இதை ஒழிக்க முடியாதா! வழியில்லாத போதனைகள் எதற்காக...? நண்பரின் கேள்வி என் சிந்தனையில் இன்றும் சுற்றிச் சுழன்று கொண்டேயிருக்கிறது.

பாடசாலை செல்ல நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. காலை ஆகாரத்தை முடித்துக் கொண்ட நான் பாடசாலை போக ஆயத்தமாகிறேன்....

'எமது ஊரில் பெரிய பெரிய பணக்காரர்கள் பலர் இருக்கிறார்களே.... நோன்பு காலங்களில் ஸக்காத், ஸதகா என சில்லறையாகக் கொடுக்கிறார்கள்..... குறைந்தது ஐம்பது ஏழைக் குமர்களின் திருமணத்தை வரிசையாக்கக் கூடிய பணத்தில் தன் ஒரு பிள்ளையின் கலியாணத்தை அலங்காரமாக எடுத்து பணத்தை விரயம் செய்கின்றார்கள். ஏன்? குடும்ப சகிதம் பலமுறை மக்கா யாத்திரை செல்கின்றனர்.... இவர்கள் இப்படி அளவுக்கு அதிகம் வீணாக செலவு செய்யும் தொகையில் சிறிது.... தருமத்தின் பெயரில், அழியும் எம் சமூகத்தின் அங்கமான இப்பிள்ளைகளின் எதிர்காலத்தை எண்ணி செலவு செய்தால் குறைந்தா போகும்?' என சிந்தனைக் குதிரையை தட்டிய வண்ணம் பாடசாலை செல்கிறேன்.

"சேர்....."

சிந்தனை ஓட்டம் தடைப்படுகிறது. திரும்பிப் பார்க்கிறேன். என் மாணவன் மஹ்ரூப்.... ஆளை அடையாளம் காண சிறிது நேரம் சென்றது. சென்ற வருடம் எட்டாம் வகுப்புப் படித்தவன்.... வகுப்பிலே திறமையான மாணவன்... இன்று பெரிய ஆளாக என் முன்னே நிற்கிறான்...

ரெங்ளர் சேட், கிரிலின் ப்பெல், அடி உயர்ந்த செருப்பு, புத்தம் புதிய கண்களை கவரும் சோப்பர் சைக்கிளில் நிற்கும் அவனை ஒரு முறை பார்த்த நான் என் உடைகளையும் பார்த்துக் கொள்கிறேன்.

"என்னடா அப்பா... ஆளே மாறிவிட்டாய். எப்படி உன் சுகசெய்தி?" என குசலம் விசாரித்தேன். படிப்பின் அவசியத்தையும், மாணவப் பருவத்தில் படிப்பதால் எதிர்கால நன்மைகளையும், படிப்பில் அவனுக்கு இருந்த கெட்டித்தனத்தையும் நினைவுபடுத்தி, பயிர் செய்ய

வேண்டிய காலத்தில் பயிர் செய்யாது பாழ்படுத்திக் கொள்ள வேண்டாம் என்றும் பல புத்திகளைக் கூறி அங்கலாய்த்துக் கொள்கிறேன்.....என் பிரசங்கத்தை இன்முகத்துடன் செவி சாய்த்த அவன் "போய் வருகிறேன் சேர்" என பைசிகிளில் ஏறியவன்; "சேர்" என்றான்.

திரும்பிப் பார்க்கிறேன்.....

"சேர்.... நீங்க ஒரு மாதத்திற்கு எத்தனை ரூபா சம்பளம் வாங்குகிறீர்கள்..........?" தயங்கி தயங்கி கேட்ட அவன் "ஒரு ஐநூறு; அறுநூறு ரூபா வாங்குவீர்கள் தானே..... சேர் நான் இப்பொழுது செய்யும் மாணிக்கக்கல் தொழிலால், ஒரு சில மணி நேரங்களில் இதைவிட பல மடங்கு கூடுதலாக பணம் சம்பாதிக்கிறேன்...." என சடுதியாகக் கூறிய அவன் சிட்டாகப் பைசிகிளில் பறக்கிறான்.....

அவன் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் என் நீண்ட நேர சிந்தனையைக் கலைக்கின்றன. தடுமாறுகின்றேன்..... என் சிந்தனை ஓட்டம் திசை திரும்புகிறது.... புது யுகமொன்றினைக் காண அது விரைகிறது.

மாணவமுரசு - 1979.ஜனவரி

# புனித ரமழானிலே....

விடிந்தது. நோன்பு இருபத்தேழாம் நாள். விடிய விடிய பள்ளிவாசலில் சுன்னத்தை ஹயாத்தாக்கிய நான் சுபஹுக்குப் பின்பும் தூங்கவில்லை. அலுவலகம் செல்ல ஆயத்தமாகி, பஸ் ஸ்டான்ட் நோக்கி நடக்கிறேன்.

பாதை முழுவதும் அன்று என்றுமில்லாதவாறு சனங்கள் நிறைந்திருந்தனர். முஸ்லிம் முதலாளி, ஹாஜிமார்களின் பெரிய பெரிய வீட்டு வாசல்களிலும் கேட்டடியிலும் கும்பல் கும்பலாகக் காத்திருந்தனர். அவர்கள் எல்லாரும் முஸ்லிம்கள். தொப்பி, தலைப்பாகை, சால்வை, இப்படியான கோலங்களுடன் பேக் இத்யாதி சாமான்களுடன் ஒரு கூட்டம் வேறொரு புறமிருக்கிறது.

வயது வந்தவர்கள் மட்டுந்தான் இப்படியான கோலங்களுடன் இருக்கிறார்கள் என்பதில்லை. சிறுவர், சிறுமியர் நடுத்தர வயதுடையோரும் நிறைந்திருந்தனர். இக்காட்சிகள் யாவும் அனுதாபத்திற்குப் பதிலாக எனக்கு ஆத்திரத்தையே மூட்டிக்கொண்டிருந்தன.

"குட்மோர்னிங்..."

"வெரி குட்மோர்னிங்." என்றவாறு திரும்பிப் பார்க்கிறேன். தூக்கிவாரிப்போடுகிறது! தாஸிம் மாஸ்டர் நிற்கிறார்.

"ஓ மாஸ்டர், நீங்களா! யாரோ அந்நியன் என்றல்லவா நினைத்தேன். ஸலாம் சொல்லாமல்.... இது என்ன புது சேஷ்டை...?"

"கூல் டவுன்...கூல் டவுன்...கோபம் ஆளைக் கிழவனாக்கிடும். அது சரி, என்ன பெரிய யோசனை?"

"யோசனை இல்லாமலா? இந்தக் கூட்டங்களைப் பாருங்கள். இந்த அவலங்களை எங்கள் சமூகத்தில் மட்டுந்தான் காண முடியும்." என்று அலுத்துக் கொண்டேன்."

"இந்தக் காட்சிகள் ரமழானின் தத்துவத்தையே மாற்றிவிடுகின்றன. ரமழான் மாதம் என்றால் பிச்சைக்கார மாதமா என்ற எண்ணத்தைத்தான் இவை ஏற்படுத்துகின்றன. அஸ்ஸலாமு அலைக்கும் வாப்பா.... உம்மா.... என ஏதாவது கூறியபடி வாசல்களில் நிற்பார்கள். வசதியில்லாதவர்கள் "மன்னியுங்கள்" என்றால் திட்டுகளும், வசைகளும் பாடிக்கொண்டு போவார்கள். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் நோன்பு பிடிக்க மாட்டார்கள். கேட்டால் சபராளிகளுக்கு நோன்பு வாஜிபில்லை என்பார்கள். இது பிச்சை எடுப்பதற்கு இவர்கள் கூறும் புதிய தத்துவம்."

"எங்கிருந்து வரும் கூட்டங்களோ தெரியாது. ரமழான் மாதமல்லாத ஏனைய மாதங்களில் என்ன செய்கிறார்களோ...? நோன்பு காலங்களில் பிச்சை கேட்கும் கூட்டத்தின் வருமானம் - கிம்பளம் எடுக்காத ஒரு மந்திரியின் சம்பளத்தை விடக் கூடுதலாக இருக்கும். இவர்களுடன் இன்னொரு கூட்டம் இருக்கிறது. அது ஜனாதிபதியின் சம்பளத்தைவிட அதிகம் பெறும். ரமழான் மாதத்தில் இவர்களின் பக்தி கூடுதலாக இருக்கும். இவர்கள்தான் பச்சை கஞ்சா தமக்கே என சொந்தம் பாராட்டுகிறவர்கள்.

தம்மை "பக்கீர் பாவாக்கள்" என அழைத்துக் கொள்ளும் அடுத்த பிச்சைக்காரர் கூட்டம். சஹர் காலங்களில் தஹ்ரா அடித்து மக்களை எழுப்பும் தங்களுக்கு, நோன்பு பிடிப்பது கடமையில்லை என வாதிடுவோரும் இருக்கிறார்கள்.... புதிய புதிய தத்துவ வித்தகர்கள்.... இந்த 'டெலிவிஷன்' காலத்திலும் ரபான் அடித்து சஹர் செய்து மக்களை எழுப்புகிறார்கள்."- தாஸீம் மாஸ்டர் கேலியுடன் கூறினார்.

"ஒரு விசேஷம்... ரமழான் அல்லாத காலங்களிலும் இவர்கள், கூட்டம் கூட்டமாக வருவார்கள்..... பிச்சை எடுப்பதுதான் இவர்களின் தொழில். இதுஆதாயமான ஒரு தொழில் என்பதை இவர்கள் இன்று கண்டு கொண்டுள்ளனர். இன்னும் சிறிது காலத்தில் இறைவனுக்குக் கொடுக்கும் அந்தஸ்தைப் பணத்துக்கும் கொடுப்பார்கள். விளக்கேற்றி கும்பிட்டாலும் ஆச்சரியமில்லை. இஸ்லாம் விரும்பாத இந்த நடைமுறை என்று தீருமோ...?" - இவ்வாறு கூறும்போது என்மனம் அழுது கொண்டே இருந்தது.

கால்கள் பஸ்தரிப்பிடத்தை அடைந்தன. தாஸீம் மாஸ்டர் ஸலாம் கூறியபடி பிரிந்து சென்றார்.

என்றும் போல் இன்றும் கூட்டம் இருக்கவில்லை. பஸ்ஸும் வரவில்லை. பிரைவேட் பஸ்ஸாவது வரும் என ஒதுங்கி நின்றேன். சிங்களம், தமிழ், ஆங்கிலம் கலந்த புதுவித மணிப்பிரவாள நடைப் பேச்சு என்னைக் கவர்ந்தது. எங்கள் பகுதி இளம் பொடியங்கள்.... மார்க்கட் சந்தியில் தமக்கே உரித்தான நடையில் பேசிக்கொண்டிருந்தனர்.

"மச்சான், நான் எண்டா நெனக்கவும் இல்ல, எதிர்பார்க்கவுமில்ல... நீ ரோட் லைட் பல்பை உடைத்ததும் நான் பயந்தேன்..... கடைசியில் அது தான் எங்களுக்கு சான்ஸ் ஆனது."

"டேகிட் ஈஸி. எதற்கும் பயப்படப்படாதே! நெருப்பெட்டி அடித்து பயமுறுத்தியதும் அந்தக் குட்டி எப்படிப் பயந்தாள்! அந்த பொம்பள வந்து பேசினதால எங்கட வேள சிம்பளாகிவிட்ட......"

"பத்து ரூபாவல்ல இருபத்தைந்து ரூபா கொடுத்தாலும் கிடைக்காது மச்சான்...... ஜாதி படு. சரக்கென்றால் இப்படித்தான் இருக்க வேணும்.... நாலு பேருக்கும், நாலு உருப்படிகள்...... சே..... இன்று அவங்க எங்க போகப் போகிறாங்களோ? அடடா.... அங்க பாருமடா! மூட்டை கட்டிக் கொண்டு போறாங்க.... வாங்க.... தாரும் பார்க்காம பின்னாலே ஃபலோ பண்ணுவோம்..." அவர்கள் சென்றனர்....

அங்கே.... நான்கு பெண்கள்.... ஒருத்தி கொஞ்சம் மூத்தவளாக இருந்தாள். கிழப்பருவம் எனக் கூற முடியாது. சின்னப் பிள்ளைகளையும் கைகளிலே பிடித்துக் கொண்டிருந்தாள். அந்த வீட்டு வாசல் வராண்டாவிலிருந்து அவர்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர்.

அப்படியானால்..? அப்படியானால்...? இவர்கள் இவ்வளவு நேரம் பேசிய 'சரக்குகள்' இவர்கள்தானா! பகலில் ஹதியா என்ற பெயரில் பிச்சை...... இரவினில் தங்கும் இடங்களில்...? யா அல்லாஹ்! என்ன சோதனை! எமது சமுதாயம் மானத்தையும் விலை கூறத் துணிந்து விட்டதா...? அல்லது மானம்தான் அவர்களை விலைகூற வந்துவிட்டதா...? கொடுமை..... இதயம் கனிந்த ரமழானே... உன் புனிதம் உலகெல்லாம் எடுத்தோதப்படுகிறது. உலக வழிகாட்டியாம் திருக்குர்ஆன் அருளப்பட்ட மாதமே! இஸ்லாம் வெறுப்பவைகளை, ஹலாலாக்கத் துணிகிறார்களே... புனித ரமழானே! என் இருதயம் நின்று விடும்போல் இருந்தது.... நெஞ்சைப் பிடித்தபடி... அங்கே... சாய்கிறேன்......

**ரமழான் மலர் -1981. ஜுலை.**

# தியாகத் திருநாள்

சித்தீக் மரிக்கார் - சித்தீக் முதலாளி - என எல்லாரும் பட்டம் சூட்டி அவரை அழைக்க, அவர் சாதாரண சில்லறைக்கடை சிக்கந்தர் நாநாவின் மகனாக இருந்தார். சிக்கந்தர் நேர்மை மிகுந்த வியாபாரி. ஏதோ உள்ளதைக் கொண்டு திருப்தியாக வாழ்ந்தார். சொந்த வியாபாரத்தில்தான் உண்மையான மேன்மை இருப்பதைக் கண்ட அவர், சித்தீக்கின் படிப்பை எஸ்.எஸ்.ஸியோடு நிறுத்தி, வியாபாரத்தில் ஈடுபடுத்தினார். சித்தீக், வியாபாரத்தில் நல்ல அனுபவம் பெற்றான். குறுக்கு வழியில் வியாபாரத்தில் பணம் சேர்த்தால் பெரிய செல்வந்தனாகலாம் என அவன் அடிமனம் கூறியது. ஆனால் வாப்பா இடையில் குறுக்கிடுவது அவனுக்கு தொல்லையாக இருந்தது.

சித்தீக்கின் இருபத்திரண்டு வயது பூர்த்தியாகும் பொழுது சிக்கந்தர் வபாத்தானார். வாப்பாவின் வபாத்துக்குப் பின் அவன் அடிமனம் போட்ட திட்டங்கள் செயல்படத் தொடங்கின. சாமான்களை பதுக்கி கூடுதலான விலைக்கு விற்கலானான். எதையும் கள்ள நோக்கத்துடன் செய்யத் தொடங்கிய அவனுக்கு பணம் பெருகத் தொடங்கியது. சிறு காணிகள், பரம்பரை சொத்துக்கள் உள்ள ஏழைகளிடம் அவர்கள் கஷ்டப்படும் நேரம் பார்த்து உதவி செய்வான். தனது உதவிக்கு ஈடாக காணியை குறிப்பிட்ட காலத்திற்கு தன் பெயருக்கு எழுதிக் கொள்வான். அதில் வரும் வட்டிகளை ஆதாயம் என்ற பெயரில் சுருட்டினான். காணியை அடகு வைத்தவர்கள் காலவரையறைக்குள் திருப்பி எடுக்காவிடில் சட்டப்படி அவனுக்கு உரிமையாகிவிடும். இப்படியாக சித்தீக்குக்கு நாளுக்கு நாள் காணி, பூமி, பணம் பெருகிக் கொண்டிருந்தது.

மளிகைக்கடை வியாபாரத்தைக் கைவிட்டான். வெளிநாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்யத்தொடங்கினான். பிறநாட்டு வங்கிகளில் அவன் மூலதனம் பெருகியது. இந்நிலையில் அவன் உள்ளம், பெரிய திட்டமொன்றைத் தீட்டியது. அதுதான் பைசிகல்களை இறக்கமதி செய்தவற்குப் பதிலாக உள்நாட்டில் உற்பத்தி செய்வது; பெரிய லாபம் தரக்கூடிய தொழில். சுதேச கைத்தொழில்களுக்கு அரசாங்கம் உதவியளித்துக் கொண்டிருந்த காலம். இருந்தும் கூடுதலாக முதல் தேவைப்பட்டது. இதற்காக சுபைர் மரிக்காரின் உதவியை நாடினான். சுபைர் மரிக்கார் பெரிய பணமுதலை. சித்தீக்கின் திட்டம் அவருக்கு பெரும் மகிழ்ச்சியை கொடுத்தது. இருவரும் செயலில் ஈடுபட்டனர்.

பெரிய பண முதலைகள் ஒன்று சேர்ந்தால் பணத் திமிங்கிலங்கள் ஆகிவிடுவர். அதன் தன்மைக்கேற்ப.... பணம்... அது, மழையாகப் பொழியத் தொடங்கியது. ஆயிரம் பேர்கள் அவர்களுக்குக் கீழ் வேலை செய்தனர். இரத்தம்! அதை வியர்வையாகச் சிந்தினர் தொழிலாளர். சம்பளம் - நாள் கூலி. அதுவும் ஒரு நாள் உணவை பூர்த்திசெய்ய முடியாத சம்பளம். ஒரு நாளைக்கு மூன்று ரூபா. "ஏன்?" என்று கேட்க வழியில்லை. யூனியன் அமைப்பது தடைசெய்யப்பட்டிருந்தது. நான்கு தொழிலாளர் ஒரிடத்தில் கூடினாலும் விசாரணைக்குள்ளாக்கப்பட்டனர்.

இந்த நிலைமையில்தான் முற்போக்கு நோக்கங்கொண்ட தொழிலாளர் சிலர் ஒன்றுகூடி யூனியன் அமைத்தனர். இது முதலாளிமார்களுக்கு வயிற்றுக் கலக்கத்தை கொடுத்தது. அவர்கள் உடனடிச் செயலில் ஈடுபட்டனர். யூனியனில் சேர்ந்தோரை தந்திரமாக அழைத்து பொலிஸ்காரரின் குண்டாந்தடி உதவியுடன் பலாத்காரமாக கையொப்பம் வாங்கி உடனடி வேலைநீக்கஞ் செய்தனர்.

இடையில், தொழிலாளரை வாட்டி வதைக்க முன்னணியில் இருந்த சித்தீக்கை அதிர்ஷ்டம் சம்பூர்ணமாக தழுவிக் கொண்டது. அவன் திறமையில் முழு நம்பிக்கை கொண்ட சுபைர் மரிக்கார் தன் ஏகபுத்திரி ரஹீலாவை சித்தீக்கிற்கு மணமுடித்து கொடுத்தார். அத்துடன் வியாபாரத்தின் முழு உரிமையையும் அவனுக்கு எழுதிக் கொடுத்து விட்டார். பணம் அபரிமிதமாக அதிகரிக்க, வியாதியும் கூடியது. அவர் பணத்துக்குக் காவல் காக்கத் தொடங்கினார். எத்தனை டொக்டர்மார்; எவ்வளவு வைத்தியஞ் செய்தும் சித்தீக்கின் நோய்கள் சுகப்படவில்லை. மாறாக இரத்த அமுக்கம், மூத்திர வியாதிதான் ஏற்பட்டது. வைத்தியர்கள் உணவை குறைக்கச் சொன்னார்கள். ஆனால் அவருக்குப் பசி எடுக்கவில்லை. பணக்காரர்களுக்கு எங்கே பசி எடுக்கும்? பசியென்றால் என்ன என்று திருப்பிக் கேட்டார். மாறாக.... "பயம்.... பயம்...." என சொல்லிக் கொண்டு இருந்தார். மனப் பிராந்தி! மெய்க் காப்பாளர்கள் அவரை காவல் காத்தனர். நிம்மதி அவருக்கு ஏற்படவில்லை. கடந்துபோன சம்பவங்கள் விஷ்வ ரூபமெடுத்து கனவிலே அவரை வாட்டி வதைத்தன. இந்த நிலைமையில் சில மௌலவிகள் யோசனைகள் பல கூறினர். அவர்களின் யோசனைப்படி அழகிய பள்ளியொன்றை பெரிதாக நிர்மாணித்தார். விசாலமாக நாடே திரண்டு வர கந்தூரிகளைக் கொடுத்தார். இவ்வளவும் கொடுத்தும்.... நிம்மதி? அதுதான் அவருக்குக் கிடைக்கவில்லை. கடைசியில்.... ஹஜ் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உருவானது. ஹஜ் கடமைதனை நிறைவேற்றினால் அன்று பிறந்த பிள்ளைகளைப் போல் பாவங்கள் கழியும். நிம்மதியாக வாழலாம் என ஒரு நாள் ஹதீஸ் பிரசங்கத்தின் போது பள்ளிவாசலில் வைத்து பிரபல போதகர் ஒருவர் உரை நிகழ்த்தினார். இந்த ஒரு வார்த்தையும் பெரிய நிம்மதியை கொடுப்பது போல் இருந்தது. வெகுகாலமாக அவர் எண்ணிக் கொண்டிருந்ததும் இதுதான். வருடா வருடம் இன்கம்டக்ஸ் என அரசாங்கத்துக்கு எவ்வளவு பணம் கட்டுகிறார்! அதைக் கொண்டு ஒரு வருடம் ஜாலியாக குடும்பத்தாருடன் ஹஜ் என்ற பெயரில் உலகைச் சுற்றி ஒரு புறாஜல் செய்யலாம். அத்துடன் 'அல்ஹாஜ்' என்ற கௌரவப் பட்டமும் பெயருடன் ஒட்டிக் கொள்ளும். எனவே ஹஜ் செய்ய குடும்பத்தாருடன் கிளம்பினார்.

ஹஜ்.....! இஸ்லாத்தின் ஐந்தாவது கடமை. எந்த நோக்கத்திற்காக உலக நாட்டு முஸ்லிம்கள் உலக இருதயத்தில் கூடுவார்களோ அந்த நோக்கங்களின் ஒரு நிகழ்ச்சி சித்தீக்கின் அலையுமனதிற்கு அமைதியைக் கொடுத்தது. போகும் பாதையிலே அதன் அடிப்படையை அல்லாஹ் அவனுக்கு உணர்த்தினான்.

பெரிய விமானம். விமானம் மேலெழும்பி பறக்கும் பொழுது ஹாபிஸ் ஒருவர் ஹதீஸ் பிரசங்கமொன்றை நிகழ்த்தினார். "என் சொத்து, என் செல்வம் எனக் கூறும் மு. .மீன்களே! இந்த விமானப் பயணமும் ஈமானின் உறுதியை மக்களுக்குப் போதிக்கிறது. கீழே சற்று நோக்குங்கள். பச்சைப் பசேலென்று உலகம் காட்சியளிக்கிறது. இதில் என் பங்களா, என் காணி, என் சொத்து என்று யாராலும் கூறமுடியுமா? அத்துடன் நிலங்களைப் பிரித்து கம்பியடிக்கிறீர்கள். சுவர் எழுப்புகிறீர்கள். அப்படியான காட்சியாவது உங்களுக்கு தெரிகிறதா? இதுதான் சமதர்மம் சமத்துவம். மக்கள் மத்தியில் நான் பெரியவன், நீ சிறியவன், நான் முதலாளி, நீ தொழிலாளி என்ற பேதம் இல்லை....."

இப்பிரசங்கம் சித்தீக்கின் எண்ணத்தில் புயலாக வீசியது. விமானம் அரேபியாவை அடைந்தது. ஹாபிஸ் கூறிய வார்த்தைகள் அவர் எண்ணத்தில் சுழன்றன. கண்களிலே கண்ணீர் மல்க புனித க.்பாவை நோக்கினார். கண்ணீர் ஆறாக ஓட க.்பாவை வலம் வந்தார். இறைவன் சன்னிதானம் அவரைப் புனிதப்படுத்திக் கொண்டிருந்தது. உலக மக்களுடன் சேர்ந்து அவரும் ஹஜ் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றினார். அவர் உள்ளத்தில் தெளிவும் அமைதியும் ஏற்பட்டது.,

அன்று அல்ஹாஜ் சித்தீக் அவர்களுக்கு வரவேற்புக் கூட்டம். அழகான மேடை. அதில் பல பெரிய பிரமுகர்கள் உட்பட சித்தீக்கும் வீற்றிருக்கிறார். மேடையில் பேசிய பிரமுகர்கள் யாவரும் சித்தீக்கின் புகழ் பாடினர். கடைசியில் அமோக ஆரவாரத்துக்கிடையில் சித்தீக் பேச எழுந்தார். கூட்டத்தில் அமைதி.

"அன்பார்ந்த சகோதரர்களே! அஸ்ஸலாமு அலைக்கும்.

"இந்த கௌரவம் எனக்குத் தேவைதானா? கொடிய பாவக்குழியில் சுழன்று வந்த எனக்கு துப்புரவான இதயம் படைத்த நீங்கள் தரும் வரவேற்பு தேவைதான். மனிதன் பிறக்கும் பொழுது இறப்பையும் சேர்த்துக் கொண்டேதான் பிறக்கிறான். பிறக்கும் யாவரும் இறப்பது நிச்சயம். இறந்த பின் எதைக் கட்டி சுமந்து செல்வார்கள்? இதனால் இவ்வுலகில் வாழும் காலம் இறுமாப்பில் வாழ்வதில் என்ன பயன்? இதை நான் உணர்ந்து விட்டேன். புனித ஹஜ்ஜின் சிறப்பை நான் உணர்ந்து விட்டேன். இதுவரை பணத்தைக் கட்டிக் கொண்டு எங்கே நிம்மதியென அலைந்தேன். நிம்மதியற்ற வாழ்வும் வாழ்வா? இனியும் நான் அப்படி வாழப் போவதில்லை. பணத்தை பெட்டியில் பூட்டி அதற்கு காவல் காத்துக் கொண்டு நிம்மதியின்றி வாழும் செல்வந்தர்கள் நான் இப்பொழுது செய்யும் முடிவை ஏற்றுக் கொண்டால் உலகில் சாந்தியும் சகோதரத்துவமும் சமத்துவமும் தழைக்கும்.

"நான் செய்ததை நீங்கள் தியாகம் என்று எண்ணிவிட வேண்டாம். தியாகம் செய்ய நான் சக்தி வாய்ந்தவனல்ல. எனினும் ஒரு உண்மை இன்ஸான் செய்யும் கடமையைத்தான் நான் செய்யப் போகிறேன். வியர்வை நிலத்தில் சிந்த முன், வேதனத்தைக் கொடு என்றார் உலகத் தலைவர் - உத்தம நபி - முஹம்மது (நபி) அவர்கள். இதை மறந்து நான் செயல்பட்டேன். நான் இதுவரை தருமம் கொடுத்தேன். அப்படிச் சொல்லவே எனக்கு வெட்கம். பிச்சைக்காரர் கூட்டத்தை நான் சமூகத்தில் வளர்த்து விட்டேன். ஏழைகள் மட்டுமல்ல சுரண்டும் கூட்டமும் இருக்கும் வரை உலகமே வாழாது. வாழவும் முடியாது.

"என்னுடைய தொழிலகத்தை தொழிலாளர்களிடம் ஒப்படைத்து யாவரும் பகிர்ந்து வாழ நிச்சயித்து விட்டேன்."

கூட்டத்தில் பெரிய ஆரவாரம். விண்ணை முட்டுகிறது. மேடையில் பெரியோர் எனும் பிரமுகர்கள் பிரமித்து நிற்கின்றனர். எங்கும் "சித்தீக் ஹாஜியார் வாழ்க!" என்ற கோஷம் அவர்கள் காதைப் பிளக்கிறது.

**இன்ஸான் - 21.03.1969**

# சோதனை - வேதனை - சாதனை

கொடிய இருளின் ஆலிங்கத்திலிருந்து ஆதவன் மெல்ல மெல்ல ஏறிக் கொண்டிருந்தான். எங்கு பார்த்தாலும் சோக ஒலியில் அந்தப் பெரிய பள்ளிவாசல் மண்டபம் அல்லோலகல்லோலமாகக் காட்சியளித்தது. சூறாவளி, பெருவெள்ளம் என்ற பேய்களின் சீற்றத்துக்குள்ளான எல்லாரும் அங்கு குழுமியிருந்தனர். வரலாற்றிலே காணாத இந்த அழிவின் விளிம்பிலிருந்து தப்பிய அந்த பெரிய பள்ளிவாசல் மண்டபத்திலும், வெளியிலும் கடல்போல் பெருகியிருந்த மக்களின் இரைச்சலைக் காணும் பொழுது வாழ்க்கையே வெறுமை தட்டுகிறது. அங்கே ஏழை - பணக்காரன், முதலாளி - தொழிலாளி, போடியார், முதலியார், ஹாஜியார், கீழ்சாதி - மேல்சாதி என நேற்று வரை கண்ட கூட்டங்கள் இன்று எதுவித பேதமுமின்றி அல்லாஹ்வின் சந்நிதானத்தில் ஒரேவித ஒப்பாரி ஓலமிட்டுக் கொண்டிருந்தனர். பிள்ளைகளைத் தேடும் பெற்றார், பெற்றாரைத் தேடும் பிள்ளைகள், உற்றாரைத் தேடுவோர், உடன்பிறப்புகளைத் தேடுவோர் மத்தியில் பொருள் இழந்தோர்களினதும் விசும்பல் சத்தம் காதைப் பிளந்து கொண்டிருந்தது.

எதுவுமே செய்ய முடியாத நான், 'அவன் விட்ட வழி!' என்ற வேதத்தை நெஞ்சினிலே நினைத்துக் கொண்டு மண்டபத்தை சுற்றி வருகிறேன். அங்கே! ஓர் ஓரத்திலே பேரன், பேர்த்திகளை அழைத்தவாறு தம் குடும்பத்தாருடன் - இடையிலே வேட்டியுடன் மட்டும் - குந்திக் கொண்டிருந்தார் "தானா மூனா" போடியார். கருமேகமாய் அவர் முகமதில் சோகப்படலம் கவிந்திருந்தது.

அவ்வளவு சோகத்திலும், என்னைப் பார்த்து சிரிக்கிறார்.... அவர் ஏன் சிரிக்கிறார் என்று நான் எந்தவித அர்த்தமும் கற்பித்துக் கொள்ளவில்லை. பதிலுக்கு வெறுமனே சிரிக்கிறேன். என்றாலும் அவரைக் கண்டதும் நெஞ்சிலே நெருஞ்சிமுள்ளாய் உறுத்திக் கொண்டிருந்த அந்த சம்பவம் என் நினைவில் நிழலாடியது.

நானும் அதே ஊரைச் சேர்ந்தவன்தான். என் பெற்றார் விட்டுச் சென்ற சொத்துக்களைக் கொண்டு நானும் என் மனைவியும் பிள்ளைகள் இரண்டும் சுகமே வாழ்ந்து வந்தோம். இறைவன் நாட்டம் என்னவென்று சொல்வேன்! எமது வாழ்வு எனும் சந்தோஷப் படகினில் ஓட்டை ஒன்றை செய்து விட்டான். தலைவலி எனப்படுத்த என் அருமை மனைவி, அதன் பிறகு எழும்பவே இல்லை..... இறைவனடி சேர்ந்து விட்டாள். என் செய்வேன்? சிறிது காலம் எனக்கு உலகமே இருளாகியது.

இருள் தட்டிய என் உலகம் கருமை நீங்கியபோது, வைராக்கியம் என்ற ஒளி உதயமானது. அது... என் பிள்ளைகளின் எதிர்காலம் என்ற நாட்டத்திலே சுடர் விட்டது. சொத்து, சுகம் இன்று வரும்; நாளை போகும்... எனவே... என் பிள்ளைகளை பல்கலைக்கழகம் வரையும் படிக்க வைத்தேன்.

இன்று ஒரு மகன் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் விசேஷ டொக்டர். மற்ற மகன் கொழும்பு எஞ்ஜினியரிங் கோப்பரேஷனில் முதன்மை எஞ்ஜினியர். நான் தனியே இருக்கக் கூடாது எந்த நேரமும் அவர்கள் பக்கத்திலே இருக்க வேண்டும் என்ற உயர் நோக்கத்துடன் என் பிள்ளைகள் கொழும்பிலே அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த விசேஷ அரசாங்க தனி குவாட்டஸில் என்னை அழைத்துக் கொண்டனர்.

மரத்தினிலே பழுத்த பழங்கள் தொங்கும் பொழுது அங்கே பறவைகளுக்கும் அணில்களுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டுமா? அது போல என் பிள்ளைகளின் உயர் நிலைமைதனைக் கண்டு பல பெரிய இடத்துப் புள்ளிகள் வலைவிரிக்கத் தொடங்கினர்.

சுய உழைப்பிலே நம்பிக்கை கொண்ட என் பிள்ளைகள் பெரிய இடங்களில் கொழுத்த சீதனத்துடன் வந்த கலியாணப் பேச்சுவார்த்தைகளை நிராகரித்தனர். நானும் இதைப்பற்றி சந்தோஷப்பட்டேன். அதில் என் சுயநலம் இருந்தது. என்கூடப் பிறந்த சகோதரி கொழும்பிலே இருக்கிறாள். அவளுக்குப் பிள்ளைகள் அதிகம். கணவன் அரசாங்க உத்தியோகம் என்றாலும் பெண்பிள்ளைகளும் தொழில் பார்க்கும் நிலைமை. இரண்டு பெண் பிள்ளைகளும் அரசாங்கப் பாடசாலை உபாத்தியார் உத்தியோகம்.... பார்க்க இலட்சணமாக இருந்தார்கள். என்பிள்ளைகள் மேற்படிப்பு படிக்க வரும் பொழுது தங்க இடவசதி செய்து பல உதவிகளும் கொடுத்தவர்கள்... அவர்களை மறக்க முடியுமா?

ஐம்பது ஆயிரத்துக்கு மேல் விலைமதிப்புள்ள என் வளவு - பிள்ளைகளின் படிப்பிற்காக பத்தாயிரம் ரூபாய்க்கு "தானா மூனா" போடியாரிடம் அடைவாக இருக்கிறது அதை மீட்டுவிட வேண்டும் என்ற ஆசை மட்டும் என் முகத்தில் கவலையாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.... என் வேதனையை நான் காட்டிக் கொள்ளவில்லை. என்றாலும் என் பிள்ளைகள் அதை உணர்ந்தே இருந்தார்கள் என்பதை அன்று தான் நான் உணர்ந்தேன்....

அன்று சிந்தனை வசப்பட்டிருந்த என்னை அழைத்து பதினைந்தாயிரம் ரூபாய்களைத் தந்து "வளவை மீட்டு வாருங்கோ வாப்பா" என்றனர். 'யா அல்லாஹ்! நீயே போதுமானவன்' என இறைவனைப் புகழ்ந்து கொண்டே அடுத்த நாள் போடியாரைக் காணப் புறப்பட்டுச் சென்றேன். அங்கே! எனக்கு சோதனையின் மேல் வேதனைதான் காத்திருந்தது.

'நீங்கள் எந்த நேரம் பணத்துடன் வந்தாலும் உங்கள் உடைமையை உங்களுக்கே தந்து விடுகிறேன்' என அன்று சொன்ன போடியார் இன்று..... "பாரூக்.....! நீர் பணம் கொண்டுவர மட்டும் எனக்கு பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? ஐந்து வருடங்களில் வளவை மீட்காவிட்டால் எனக்குச் சொந்தம் என நீர் தானே எழுதிக்கொடுத்தீர்.... பத்தாயிரம் ரூபாய்க்கு ஆதாயம் பார்த்தாலும் எனக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாவுக்கு மேல் நீர் தரவேண்டும்" என மரியாதை இன்றிப் பேசத்துவங்கினார்....

எனக்கு தலை சுற்றியது.... எல்லாரையும் ஏமாற்றுவது போல் என்னையும் மோசம் பண்ணிவிட்டார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். நானும் சற்று சூடாகவே பேசினேன்.... "போடியார்.... நீர் மோசக்காரன் என்பது எனக்கு தெரியும். ஆனால் படுமோசக்காரன் என்பது இன்றுதான் தெரியும். இது பகற்கொள்ளை போடியார். ஏழைகளின் கண்ணீர்.... அது பொல்லாதது...." எனக்கு வார்த்தைகள் தடுமாறின..... "ஓ..... ஓ..... என்னமேன்..... என்னை பயமுறுத்துகிறாய்..... மரியாதையாக எழுந்து போம்.... பகற் கொள்ளைக்காரனாம்; ஏதோ இல்லாத நிலைக்கு உதவி செய்தால் கடைசியில் தலையில் ஏற வாறாங்க..... ம்....

அன்று உமது பிள்ளைகளை மாப்பிள்ளையாக கேட்டேன்.... தந்தீரா...? இன்றும் குடிமுழுகவில்லை.... உன் வளவுடன் இன்னும் பத்து வளவும் நாலு தலைமுறைக்குப் போதுமான பணமும் தருகிறேன் சம்மதிப்பீரா...?" என கடைசியாக என் தன்மானத்துக்கு விலை பேசினார்...

"தூ.... உமது பணமும் நீரும்.. எமக்கு துணிவிருக்கிறது; சொத்து சுகம் நீர் தர வேண்டியதில்லை; அவை ஹலாலாக எங்களைத் தேடிவரும் நாள் தூரத்திலில்லை.... அந்த நேரம் உம்மை சந்திக்கிறேன்...." என சூளுரைத்துக் கொண்டே வெளியேறினேன்.

உடனே கொழும்பு வர வாகன வசதிகள் இல்லாததால் பெரிய பள்ளிவாசலில் தங்கலாம் என அங்கு சென்றேன். ம.்ரிப் நேரம்..... ம.்ரிப் தொழுகை முடித்து பள்ளிவாசலில் சிறிது சாய்ந்திருந்தேன்..... அந்த நேரம் நான் என் வாழ்நாளிலேயே கேளாத சப்தம்; காற்று சுழன்று.... இஷாவுக்கு நேரம் நெருங்க நெருங்க வெளியே எங்கும் செல்ல முடியாத நிலை....

"யா அல்லாஹ்...." இறையை வேண்டி தொழுது நின்றேன்....

சிறிது நேரம் அமைதி... கொஞ்சம் செல்லச் செல்ல... அடாத மழை.... தண்ணீர் பெருக்கெடுக்கும் சப்தம்; மரங்கள் முறியும் ஓசை ; வீடுகள் இடியும் சப்தம்.. எங்குமே இருள்... மக்களின் கூக்குரல்..... அதைவிட பெரிய ஓசையுடன் சுழன்று சுழன்று அடித்தது காற்று! காற்றின் வேகம்... 'யா அல்லாஹ்....' என பள்ளிவாசல் நிலத்தில் சாய்ந்து விட்டேன்.

'என்ன நடந்தது?' எனக்கே தெரியாது. எனது நினைவு மீளும் பொழுது அதிகாலை நேரம்.... காற்று அமைதி பெற்றிருந்தது... பள்ளிவாசல், மக்கள் வெள்ளத்தில் மூழ்கி இருந்தது.

என் சிந்தனை ஓட்டம் தடைப்படுகிறது.. என் வளவு, என் வீடு, என் நிலம் எனக் கூற யாராலும் முடியாத நிலை... மரம் மட்டைகள் வீடு வாசல்கள் எல்லாம் தரைமட்டமாக காட்சி தந்தன... நேற்று எவ்வளவு அழகாக இருந்த ஊர்! இன்று இந்தக் கோர நிலை! என் செய்வேன்?

பெரியோர், சிறியோர், பேதமின்றி அலறும் அவல நிலை... "பசி... பசி..." என்று அலையும் கூட்டம். இயற்கையின் கோரப் பசிக்கு தப்பிய கால் நடைகள் மனிதனின் கோரப் பசிக்கு இரையாகின.....ஆனால், எத்தனை பேருக்கு....? மையத்துகள் குழிவெட்டி மூடப்படுகின்றன. அதுவும் அரை குறையாக..... நடப்பது பார்க்கப் பரிதாபமாக இருந்தது. நேரம் செல்லச் செல்ல... பசி என்ற உணர்வைத் தவிர வேறு எதுவும் எனக்கேற்படவில்லை.... கையிலே பணமிருக்கிறது.. உணவு இல்லை.... பணத்தை சாப்பிட முடியுமா.......?

குர்.... இர்... இர்... என்ற சப்தம்.... ஆகாயத்திலே ஹெலிகொப்டர்கள் இரண்டு தாழ்ந்து பறக்கின்றன... "பாண் போடுகிறாங்க... பாண் போடுகிறாங்க..." என்ற சப்தம். எல்லாரும் ஹெலிகொப்டர்கள் செல்லும் திசை நோக்கி அதைவிட வேகமாக ஓடுகிறார்கள். "தானா மூனா" போடியாரும் கச்சையைக் கட்டிக்கொண்டு ஓடுகிறார்.... நானும் அவர் பின்னால் ஓடுகிறேன். மடியிலே பணத்தைக் கட்டிக் கொண்டு ஒரு துண்டுப் பாணுக்காக..... ஓடுகிறேன்; ஓடுகிறார்.... இது இறைவன் சோதனையா...? வேதனையா....? அல்லது சாதனையா?

ஜும்ஆ - 1970.

# துன்ப ராகங்கள்

நவாஸுக்கு கடிதம் எழுதிய ஆரிபாவின் நெஞ்சு கனத்தது. உரித்தான பெரும் பொருளை இழக்கப் போகிறேனே என்ற உணர்ச்சி அவளைப் பிடித்தது. நேராக தனது அறைக்கு ஓடினாள்; அலுமாரியைத் திறந்தாள். அங்கே நவாஸின் புகைப்படம் சிரித்துக் கொண்டிருந்தது. அதை எடுத்து நெஞ்சினிலே அணைத்தபடி கட்டிலிலே சாய்கிறாள். எண்ணச் சுமை யாவும் கண்ணீராக வெளியாகியது. விரும்பிய மட்டும் அழுதாள்.

'யா அல்லாஹ்.... இந்த வேதனையில் புழுவாக துடித்து மாளவா என்னை இன்னும் உயிரோடு வைத்திருக்கிறாய்? நான் என்ன செய்வேன்?' அவள் நெஞ்சு கனமாகியது. சுவரை வெறித்துப் பார்க்கிறாள். அங்கே அவளுடைய திருமணப் புகைப்படம் காற்றினில் ஆடிக்கொண்டிருந்தது. அந்தப் புகைப்படத்தினூடே கடந்த கால நினைவலைகள் ராகம் இசைக்கின்றன.

ஆரிபா, வசதிகள் படைத்த குடும்பத்தில் பிறக்கவில்லை. நாள் கூலி வாங்கும் பாட்டாளியின் மகள். உம்மா சபீதா, வாப்பா சம்சுதீன், நாநா பாசி. இவர்கள்தான் அவள் சொத்து. சிறுவயது முதல் வறுமையில் உழன்று வாழ்ந்தவள்.

ஆரிபா, இவ்வுலகைக் கண்ட பத்து வருடங்களில் வாப்பா சம்சுதீன் வபாத்தாகிவிட்டார். குடும்பப் பாரம் அவள் தாய் சபீதா உம்மாவின் தலையில் வீழ்ந்தது. பாசி, குடும்பப் பொறுப்பை அறியாது ஊர் சுற்றினான். வீண் வம்புகளை விலைக்கு வாங்கினான். சபீதா உம்மா என்ன செய்வாள்? அப்பம், இடியப்பம் முதலியவை சமைத்து விற்று ஆரிபாவைப் படிக்க வைத்தாள். அது வீண்போகவில்லை. ஆரிபாவுக்கு டீச்சர் வேலை கிடைத்தது.

ஆரிபாவுக்கு டீச்சர் வேலை கிடைத்த பின்னர்தான் நவாஸும் அவளும் காதல் என்னும் பூங்காவின் உச்ச வரம்பில் பாடித் திரிந்தனர். எதிலும் அவர்கள் கட்டுப்பாட்டை மீறிக் காதலிக்கவில்லை. தயிரைக் கடைய வரும் வெண்ணெயின் வடிவம்போல் அவர்களின் காதல் நாளுக்கு நாள் அதிகரித்து தெளிவோடு காட்சி தந்தது.

எல்லாவித உணர்ச்சிகளுக்கும் வழிகாட்டி - உலகில் சத்துள்ள பொருள் - அன்பு ஒன்றுதான். அந்த அன்பின் தரத்தில் நவாஸை நோக்கினாள் ஆரிபா. அவனிடம் காணப்பட்டது அவள் எதிர்பார்ப்பதை விட மேலாக இருந்தது. அவன் நற்பண்புகள் அவன் தகுதிக்கு பெருமைக்கு எண்ணித் திளைக்கும் இன்ப நினைவுகளாய் அவள் இதயத்தைச் சூழந்து கொண்டன.

இந்த அன்புத் தொடர்பை பாசி விரும்பவில்லை. பாசியும் நவாஸும் சிறுவயதில் ஒன்றாகப் படித்தவர்கள். பாசி, வீட்டுக்கும், ஊருக்கும் அடக்கமில்லாமல் இருக்கும் நேரத்தில் நவாஸ் படித்து ஊருக்கு நல்லவனாக

கௌரவமான தொழில் செய்வது அவனுக்கு வெறுப்பையும் துவேஷத்தையும் கொடுத்தது.

நவாஸ் - ஆரிபாவின் தொடர்பை துண்டிக்க இன்னொரு காரணமும் பாசிக்கு இருந்தது. ஊரில் உள்ள பெண்கள் அவனுடன் சிரித்தால் போதும் அன்று அவனுக்கும் பசி எடுக்காது. அவனை அவர்கள் காதலிப்பதாக அடுத்தவர்களிடம் சவால் விடுவான். இப்படியானவன் ஒருவளை நிரந்தரமாகக் காதலித்தான். அவள்தான் அசீனா.

அசீனா, ரேஸ்புக்கி முதலாளி ரோஸானின் தங்கை. ரோஸான் அப்பகுதியில் பணத்தில் செல்வாக்குள்ளவன். இவன் தன் தங்கையை பாசி காதலிப்பதை விரும்பினான். ஆரிபாவின் அழகில் அவனுக்கு புது உத்வேகம். பால் வண்ணப் பருவமும், பரவசப்படுத்தும் இடையும், வேல் வண்ண விழியும் அவனை இஞ்சி தின்ற குரங்காக்கியது. அடைந்தால் ஆரிபாவையே தன் இல்லக்கிழத்தியாக அடைய வேண்டும் என திடசங்கற்பம் பூண்டான்.

ரோஸான், பாசியை தன் கருவியாகப் பயன்படுத்தத் தவறவில்லை. வயிறு காய்ந்தவன் செய்யும் ரேஸ் தொழிலை( ? ) பழக்கினான். நாளுக்கு நாள் டெரலின், நைலோன் சட்டைகளில் பச்சைத்தாள் மினுங்க தலைகால் புரியாமல் நடந்தான் பாசி. இடையிடையே தன் எண்ணத்தை வெளிப்படுத்திய ரோஸான் வெற்றியும் பெற்றான்.

ரோஸான் போட்ட தூபம், பாசியின் மனதில் புகையைப் படரவிட்டது. நேரடியாக ஆரிபாவின் உம்மாவிடம் போய் கூறினான். சபீதா உம்மாவுக்கு தலை கால் புரியவில்லை. பணம் படைத்தவன் இடத்திலிருந்து வரும் சம்பந்தம்! பெரிய வீட்டில் குடியேற வேண்டும், ஊருக்குள்ளே காரில் பவனி வரவேண்டும் என்ற நீண்ட நாட்கனவுகள் பலிக்கப் போகின்றன. உடனே தன் சம்மதத்தையும் கொடுத்துவிட்டாள்.

ஆனால் ஆரிபாவுக்கு நெஞ்சில் துளிர்த்த புதுப் பிறவியின் தூய்மை சுடர்விட முன் அணைந்தது போல் இருந்தது. கதறினாள்; கலங்கினாள்; கண்ணீர் விட்டாள். அவள் உள்ளத்தே தகித்துக் கொண்டிருந்தது எரிமலை. தன் நிலைமைகளை விளக்கி துன்பராகங்களை இசைத்து அனுப்பினாள் நவாஸுக்கு. அந்த ராகங்கள் இசைபாடமுன் கைப்பற்றிக் கொண்டான் பாசி. ஆமாம்... தபால் பெட்டியில் ஆரிபா போட்ட கடிதத்தை பாசி தன் செல்வாக்கைப் பிரயோகித்து கைப்பற்றிக் கொண்டான். இதை அறியாத ஆரிபா, நவாஸின் பதிலை எதிர்பார்த்து ஏமாந்தாள்.

திருமணம் முடிந்தது.

சீ..... எவ்வளவு கீழ்ப் பிறவிகள்! அவள் இருளிலிருந்து ஒளியைத் தேடும் பொழுது, ஒளியிலிருந்து இருளைத் தேடுகிறார்களே. ஆரிபாவுக்கு நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. சுயசிந்தனையை இழந்தாள். புது சக்தி அவளைத் தழுவும் பொழுது அவள் வயிற்றில் புது ஜீவன் உற்பத்தியாகிக் கொண்டிருந்தது. சபீதா உம்மா கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். ஆமாம்.... பணத்துக்கு ஆசைப்பட்டு தான் பெற்றெடுத்த பச்சைக் கிளியை கருடனின் கையில் கொடுத்துவிட்டேனே என்று ஏங்கினாள். ரோஸான், பாசி, அசீனாவின் போக்குதான் சபீதா உம்மாவுக்கு தீராத ஏக்கத்தைக் கொடுத்தது. ஊரை கொள்ளையடித்த ரேஸ் பணம், குடி, சூது என அழிந்து கொண்டிருந்தது. கடைசியில் ஆரிபாவின் சம்பளத்தில் காலம் தள்ளும் நிலை எல்லாருக்கும் ஏற்பட்டது. ரோஸான் ஆஸ்துமா வியாதிக்கு இரையானான். பணத்தில் விளையாடிய ரோஸானின் தங்கை அசீனாவுக்கு வறுமையைத் தாங்க முடியவில்லை. புது மைனருடன் சிநேகம் பூண்டு

எங்கேயோ ஓடிவிட்டாள். இது பாசிக்குப் பைத்தியத்தைக் கொடுத்தது. அவன் "அசீனா... அசீனா..." என்றவாறு வாழ்க்கையின் ஓரத்துக்கே ஓடிக்கொண்டிருக்கிறான். இந்த இடிகள் சபீதா உம்மாவுக்கு மாரடைப்பைக் கொடுத்தது. அவளும் கண்களை மூடினாள்.

ஆரிபா மட்டும் இவ்வளவு பெரிய பூகம்பத்திலும் ஒரு சொட்டுக் கண்ணீரேனும் விடவில்லை. துயரமோ துன்பமோ படவில்லை. ஆனாள் இன்று அழுகிறாள்; நவாஸின் புகைப்படத்தையும், கடிதத்தையும் வைத்துக்கொண்டு அழுகிறாள்..... 'நவாஸ், என் இருதயமே, நான் களங்கடைந்தவள். பாவி.... என் இலட்சிய வீரரே, வாழ்க்கைத் தரையிலிருந்து இருவராக அல்ல; ஒருவராகப் பறப்போம் எனக் கனவு கண்டோம். இன்று நான் சிறகொடிந்த பறவை. இந்த நிலைமையிலும் இத்துரோகியை விரும்புகிறீர்களே. நிலை தெரியாமல், திசைபுரியாமல் தறிகெட்டு ஓடும் இவ்வுலகிலே தூய்மை அன்பைக் காட்டும் உங்கள் முன், நான் சின்னஞ்சிறிய ஈனப்பிறவி. விதவைக்கு வாழ்வளிக்கும் இலட்சிய, மெய்ஞ்ஞானம் நிரம்பிய மதத்தில் நாம் பிறந்தோம். ஆனால் உங்களுக்கு நான் துரோகஞ் செய்து விட்டேன். உங்களையன்றி வேறொருவன் என் உடலைத் தீண்டிவிட்டான். அந்த நாள் முதல் நான் இறந்துவிட்டேன். உங்கள் தூய்மையான கரம் என் உடலில் படவேண்டாம். நான் வஞ்சகி. என்னை விட மேலாக உங்களை தன் நெஞ்சில் வைத்துப் பூஜிக்கும் ஜெஸ்மீனை ஏற்றுக்கொள்ளுங்கள். என்னை ம...ற...ந்...து...விடு...ங்...க...ள்!

பழைய நினைவலைகள் அலை மோத, தனக்கு கிடைக்காத பெரும் பொருள் பிறருக்கு கிடைக்கப் போகிறதே என்ற புதிய நினைவுடன் பிதற்றினாள். அதே நேரம் "உம்மா... பசி... உம்மா... பசி" என அவள் குழந்தை முந்தானையைப் பிடித்து இழுக்கிறது.

ஆரிபா ஒரு நிமிஷம் திகைப்புற்று சமைந்து போனாள்! பிறகு குழந்தையைத் தூக்கி முத்தமிட்டாள். கண்களில் பூத்து விரிந்த கண்ணீர் முத்தாக திரள்கிறது. புகைப்படத்துடன் கடிதத்தை மடித்து அலுமாரியில் வைக்கிறாள். அங்கே ஊமையின் மௌனம், காவியமாக துன்பராகம் இசைக்கிறது.

**இன்ஸான் - 1969 - ஜனவரி**

# இதுதான் நாகரிகம்

மாலைப்பொழுது நெருங்கி வரும் வேளை கல்கிசைக் கடற்கரையில் இன்பக் கொள்ளை. போயா நாள். பொங்கி எழுந்து கொண்டிருந்தது. சனக்கூட்டம் எதைப் பார்ப்பது எதை ரசிப்பது அழகிற்கு அழகு செய்யும் அப்ஸராஸ்கள். கட்டை கவுன். பெல். சாரி... ஒசரி... விதவிதமான சினிமா நடிகைகளை விட அரைகுறை ஆடைகளில் காளையரை மயக்கும் பார்வையில் நடை பயின்றனர் நாரீகள். இளைஞர்களின் சினிமா பாணி சேஷ்டைகள்..... ரசனைக்கு மிஞ்சிய வர்ணனைகள். இரு அர்த்த வசனங்கள்... பாடல்கள்... வயோதிபர்களின் ஏக்கப் பார்வைகள். இவைகளை பார்த்த வண்ணம் நடந்து கொண்டிருந்தேன். இந்த பக்த கோடிகளின் மகிழ்ச்சியில் நாமும் பங்குகொள்வோம் என்பதைப் போல பேரலைகள் ஒன்றன் பின் ஒன்றாக என் கால்களை முத்தமிட்டுக் கொண்டிருந்தன. தென்றலின் ஜிலு ஜிலு அணைப்பு என்னை மெய்ம்மறக்கச் செய்தது. இந்த நேரம்........

"ஹலோ! மிஸ்டர்...."

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். எளிமையின் அழகும், இயற்கையின் வனப்பும் சங்கமமாகும் ஓர் இளம் சிட்டு என் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். பழுப்பு நிற, ஒளவையார் சாரி அணிந்து கொண்டு என்னைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருந்தாள் அவள். நானும் முறுவலுடன் "ஹலோ! மெடம்......" என்றேன்.

"நீங்கள் மட்டும் தானா வந்தீர்கள்....?" என்றாள் அவள். தூக்கிவாரிப் போட்டது எனக்கு. முன்பின் அவளை நான் கண்டதில்லை. நீண்ட நாள் அறிமுகமானவள் போல பேசுகிறாளே! வாய்க்கு வந்த எச்சிலை விழுங்கிக் கொண்டே "நீங்கள் யார்?" என்றேன்.

"உங்களை எனக்கு நன்றாகத் தெரியும். உங்கள் பெயர் மணிமாறன்தானே? நான் டைப்பிஸ்ட் மேரியின் பெஸ்ட் பிரண்ட். பல முறை உங்களுடன் அவளைப் பார்த்திருக்கிறேன். என் பெயர் சரஸா..."

"ஓ.... ஐஸி..."

"ஆமா.... மேரி வரவில்லையா?"

எனக்கு எண்ணமோ போல் இருந்தது. தொழில் விடயங்களில் நானும் மேரியும் ஒன்றாகப் பழகுவோமே தவிர சேர்ந்து எங்கும் சென்றதில்லை. அவள் அப்படியான பெண்ணுமல்ல. என்றாலும்... பெண்களுடன் சுற்றுவது நாகரிகம் அல்லவா; அதனால்.... "இன்று அவள் வரவில்லை" என்றேன்.

"ஓ... மைகோட்.... நான் முக்கியமாக ஒரு செய்தி சொல்ல வந்தேன். இப்பொழுது எங்கே சந்திக்க முடியும்?" அவள் பேச்சில் அவசரம் தொனித்தது.

"பெரும்பான்மை போயா நாட்களில் மேரி வீட்டுக்குப் போய்விடுவாள். நாளைக்கு டிப்பார்ட்மென்டில் சந்திக்கலாம்....." நிதானமாகக் கூறினேன்.

"அப்படியா... நாளைக்கு முக்கியமான வேலை இருக்கிறது. இன்று தப்பினால் ஒரு கிழமைக்கு என்னால் அவளைக் காண முடியாது. அவசிய செய்தி ஒன்று அவளிடம் கூற வேண்டும்.... நீங்கள்..." என்றவாறே என்னைப் பார்த்தாள்.

"பரவாயில்லை, நீங்கள் விரும்பினால் கூறுங்கள். நான் சொல்லிவிடுகிறேன்" என்றேன்.

"ரொம்ப தாங்ஸ்.... இந்த இடத்தில் நெரிசல் அதிகம். முழுசாக இந்த இடத்தில் பேசுவது சரியல்ல. அங்கே தெரியும் அந்த நிழலுக்குப் போவோம்" என்றவாறே என் கைகளைப் பிடித்தாள். நான் திடுக்கிட்டேன். என் உடல் பதறியது. ஒருவாறு அடக்கிக்கொண்டேன். நாகரிக காலத்தில் பெஷனாக நடக்க வேண்டும். இல்லாவிட்டால் பட்டிக்காட்டானாக நினைத்து விடுவாள் எனப் பயந்து அவள் காட்டிய திசையை நோக்கினேன்.

சிறு தென்னஞ்சோலை சற்று தூரத்தில் இருந்தது. அடுத்தவர்கள் பார்க்கமுடியாதவாறு ஒரே அடர்த்தி. இளங்கதிர்கள். சுருக்கமாகச் சொல்வதாய் இருந்தால் நவீன காதல் பூங்கா! அவ்விடம் போவதில் எல்லையில்லா இன்பம் கண்டேன். எதிரே உவப்பு நீர். பக்கத்தே இளம் உடலழகி. என் உள்ளத்தில் இன்ப வாரிதி. நானும் அவள் கைகளைப் பற்றியபடியே நடந்தேன். பார்ப்பவர்கள் இளம் தம்பதியர் என நினைப்பார்கள். அவ்வளவு நெருக்கம் எங்களிடம் இருந்தது.....

சோலையை அடைந்தோம். அங்கே கடற்கரை மணல் இதமளித்தது. அவள் உட்கார்ந்து கொண்டாள். நானும் பக்கத்தே இருந்து கொண்டேன். குறிப்பிட்டுச் சொல்ல வந்த செய்தியை அவள் சொல்லவில்லை. என்னைப் பற்றி பலமாக விசாரித்தாள். அவளைப் பற்றிய செய்திகளையும் என்னிடம் கூறினாள். அந்த சூழ்நிலையில் என் மனோநிலை அவளுடன் பேசுவதில் இன்பம் கண்டது.

மாலை மயங்கி இருள் வேகமாக சூழ்ந்து கொண்டிருந்தது. வசந்தம் பவனி வரும் மாருதம். நீல வானத்தில் பதினான்காம் பிறை மோகனப் புன்னகையுடன் கிளம்பிக் கொண்டிருந்தது. இந்நேரம் அவள் என் மடியில் சாய்ந்தாள். என் உள்ளம் மின்னலாகியது. ஒரு நொடிதான். என் மனம் சிலந்தி வலையைப் பின்னிவிட்டது. கவர்ச்சி! சபல புத்தி! அவள் வெளி உடலில் சிதறிக் கிடந்த இளமைப் பொலிவின் கவர்ச்சியால் என் உள்ளமதில் தோன்றிய வேட்கையைத் தணித்துக் கொண்டிருந்தேன். அவள் அரவணைப்பு மலரில் தூங்குவது போன்ற உணர்ச்சியைத் தந்தது. இன்ப லாகிரி. உணர்வை இழந்தேன்.

இந்நேரம்....

"அடேய் ராஸ்கல்..." இடிபோன்ற இரும்புக் கரம் ஒன்று என் முதுகைப் பதம் பார்த்தது.

மயக்கம் தெளிந்தேன். திரும்பிப் பார்த்தேன். அங்கே கிருதா மீசையுடன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவள் "அப்பா" என்றவாறே அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"சேர்... நான் வந்து.... உங்கள்.... மகளை...." நடுங்கிக் கொண்டே கூறினேன்.

"என்ன, கதையா அளக்கிறாய்? தனியாக ஒரு பெண் அகப்பட்டால் போதும். அவளிடம் வாலாட்டுவது உங்கள் தொழில்" பல்லை நற நற என்று கடித்தவாறே முஷ்டியால் ஒரு குத்து விட்டான் என் மூஞ்சியில். நான் தலைகுப்புற மணலில் வீழ்ந்தேன். அடியா அது... கராட்டே அடி... நாலைந்து பேர் அவ்விடத்தில் கூடிவிட்டனர். அவமான உணர்ச்சியுடன் கீழே சாய்ந்து கொண்டேன்.

"பாருங்க ஐயா, தனியாக ஒரு பெண்ணுக்கு வர முடியாது. காடையர்களின் தொல்லை. பாருங்க.... என்னுடன் வந்த என் மகளின் கையைப் பிடித்து இழுத்தான். இந்த அயோக்கியனை பொலிஸாரிடம் பாரம் கொடுக்க வேண்டும்" என்றவாறே மீண்டும் முஷ்டியை உயர்த்திக் கொண்டு என்னை நெருங்கி வந்தான். ஒருவன் அவனை தடுத்துப் பிடித்துக் கொண்டான். கூட்டத்தில் இருந்த இன்னொரு ஆள் என்னை நெருங்கி வந்து காதோடு காதாக "தம்பி, பெரிய கேஸ். பொலிஸ் என்று போனால் வில்லங்கத்தில் மாட்டிக் கொள்வாய். எனக்கு இவனை நன்றாகத் தெரியும். பேசாமல் ஏதாவது இருந்தால் கொடுத்துவிடு! நான் சமாதானம் பண்ணிவிடுகிறேன்" என்றான்.

எனக்கு எல்லாம் புரிந்து விட்டது. வயிற்றை வளர்க்க விபரீதம் புரியும் நவீன கொள்ளைக் கூட்டம். ஒருவனைப் பற்றி முழு விபரங்களையும் அறிந்துகொண்டு பெண்களை ஏவிக் கொள்ளையடிப்பது இவர்கள் தொழில். சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது வீடுகளையும் உடைப்பார்கள். விதவிதமாக நாளுக்கு நாள் நகரில் தோன்றும் இவர்களிடம் நானும் வகையாக மாட்டிக் கொண்டேன். என்ன செய்ய உரலுக்குள் தலையைப் போட்ட பிறகு உலக்கை இடி விழத்தானே செய்யும்? எனக்கு மயக்கம் வரும் போலிருந்தது.

சிறிது நேரத்தில் கண் விழித்துப் பார்த்தேன். என் பக்கத்தில் யாரும் இல்லை. கையிலிருந்த நானூறு ரூபா பெறுமதிவாய்ந்த பேவர் லூபா ரிஸ்லட், பார்க்கர் பேனா, சன் கிளாஸ், மணிபேர்ஸ் ஒன்றுமே இருக்கவில்லை. டயரி மட்டும் பக்கத்தில் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது. வெள்ளி நிலா ஒளியூட்டிக் கொண்டிருந்தது. தென்றலாக வீசிய காற்று சற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. கடலின் ஓ.... என்ற சப்தம் என்னைப் பார்த்து பரிதாபக் குரல் எழுப்புவது போல் இருந்தது. பேசாமல் எழுந்து நின்றேன். நாகரிக உலகமே! இதுவா உன் நாகரிகம்? என் கண்களில் முத்தாக கண்ணீர் துளிர்த்தது.

**ராதா - 1969 - பெப்ரவரி**

# பேரம்

பட்டு திரை விலகியது.

செரீனா புடைவை ஆலை முதலாளி அல்ஹாஜ் ஜெப்பார் ஜே.பி. பகல் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வெளியே வருகிறார். ஹாஜியாரின் அந்தரங்க செயலாளர் பளீல் நின்கிறான்.

"வா பளீல், வா! ஒன்னத்தான் நெனச்சன். எங்கயன் இவ்வளவு நாளும் போன? ஆளை காணவில்லையே...." சாய்வு நாற்காலியில் அமர்கிறார்.

"நாலு குதிரகள் செலக்ஷன் பண்ண நேரம் போன. பாருங்கோ ஹாஜியார், இண்டைக்கு ராணி கப்டனெலியோ? நான் சுவர் 'வின்' புடிச்ச ..." என்கிறான்.

"நீ புடிச்சா செல்ல வேண்டுமோ, இங்க தா தாளப் பார்க்க, ஸ்....ஷ்..... ஜாதி குதிர. நாலும் நூறு நூறாக நாலூறு ரூவா அடிச்சி. இன்னும் நூறு போட்டா சுவர் பதினையாயிரம் தான்." பொய்ப்பல் முப்பத்திரண்டும் வெளியே தெரிய சிரிக்கிறார்.

"இந்தாங்கோ... சல்லி... நான் சென்ன மாதிரி ஜெமாலுக்கிட்ட போட்டுட்டன். இன்னொரு செய்தி ஹாஜியார்... எனக்கு..." என தலையைச் சொரிகிறான். "ஒங்கட பொடவ மோல்ல ஒரு வேள வேணும்."

"பைத்தியமோ ஒணக்கு....? எண்டக்கும் இல்லாம... எனத்துக்கன் ஒனக்கு வேள.."? என்றவாறே கல... கல... எனச் சிரிக்கிறார்.

"எனக்கல்ல ஹாஜியார்.... ஏண்ட தங்கச்சிக்கு....."

"ஓண்ட தங்கச்சியோ...? அது தாரன்..?" ஹாஜியார் ஆச்சரியத்துடன் கேட்கிறார்.

"நான் சென்னெலியோ... மாப்புள மௌத்தான தங்கச்சி ஒண்டு இருச்சியண்டு, அதுக்குத்தான். இவ்வளவு காலமும் தாத்தா ஊட்டுல இருந்த. போன கிழமதான் இங்க வந்த.."

"அப்படியோ! நீ சென்ன வேலய நான் இல்ல எண்டு சொல்லி இருச்சியோ? கூட்டிக்கொண்டு வாவே."

"இப்ப கூட்டிக்கொண்டு வரவோ...?"

"சரி.... சரி.... போ..."

பளீல் போகிறான். ஹாஜியாரின் யோசனை பலமாக சுழல்கிறது. ஊரில் அவர் வேலைகளை சாதாரண ஒருவன் செய்தால் கல்லால் அடித்துத் துரத்துவார்கள். ஹாஜியார், ஜே.பி. நாமங்களுக்கும் அதற்கும் மேலாக பணமும் கௌரவத்தையும் அந்தஸ்தையும் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

"ஹாஜியார்.... ஹாஜியார்..."

வாசலில் பளீலும் அவன் தங்கையும் நின்று கொண்டிருந்தனர்.

"வா.... பளீல்.... வாங்கோ!" என தன் பொய்ப் பற்களெல்லாம் வெளியே தெரிய வாசலிலே வந்து வரவேற்றார். ஹாஜியாரின் கழுகுக் கண்கள் அவளையே வட்டமிட்டன. கண்களை இமைக்காது பார்த்துக்கொண்டே இருந்தார். அவர் பார்வையை தாங்க முடியாத நபவி பளீலின் பின்னால் போய் மறைந்து கொண்டாள்.

"வெட்கப்பட வேணாம் புள்ள... பளீலையும், என்னையும் வேறாக நெனச்ச வேணாம்... இப்படி இரீங்கோ...." என அசடாக சிரித்தபடியே ஹாஜியார் கூறுகிறார்.

"ஹாஜியார் இதுதான் என் தங்கச்சி" என்றான்.

"பார்த்தா தெரியவில்லையோ...? லட்சணமாக இருக்கிறா. நீ சரியான மடையன். இந்த நேரத்தில் இப்படி கூட்டிக்கொண்டு வாரோ? வெளன காட்டியும் கூட்டிக்கொண்டு வந்தா சரிதானே...." இடத்துக்கு தக்கவாறே பேசுகிறார்.

"நீங்க தானே ஹாஜியார் கூட்டிக்கொண்டு வரச் சென்ன...? அதுக்கு தான் இப்ப கூட்டிக்கொண்டு வந்த."

"நான் சொன்ன தான். எல்லாருக்கும் செல்லிய போல நான் சென்னா நீயும் கூட்டிக்கொண்டு வரவேணுமோ? சரியான ஆள். நாளைக்கு போயா நாளெலியோ... நாளண்டைக்கு கூட்டிக்கொண்டு வா..."

"அப்ப... நாங்க..... போய்திட்டு வாரோம் ஹாஜியார்."

"சரி.... சரி.... பளீல் நீ இவங்கள உட்டுட்டு, சுருக்கா, வா... ஒனக்கிட்ட ஒரு செய்தி பேச வேணும். கட்டாயம் சொனங்காம வா."

"நல்லம் ஹாஜியார்." பளீல் தன் தங்கையை அழைத்துக் கொண்டு வெளியேறுகிறான். நபவியின் சதைப்பிடிப்பான அங்கங்களில் உன்மத்தம் பிடித்த ஹாஜியார், வாயைப் பிளந்தபடியே சாய்வு நாற்காலியில் சாய்கிறார்.

அடுத்த அரை மணி நேரத்துக்கெல்லாம் பளீல் வந்துவிட்டான்.

"எனத்துக்கன் ஹாஜியார் சுருக்கா வரச்சென்ன...?"

"ஒன்றுமில்லை... பளீல்... ஒரு சின்ன விஷயம்.... இங்க வா..." அழைத்துச் சொல்கிறார். "ஒனக்கிட்ட செல்ல கூச்சம்" என ஆரம்பித்த ஹாஜியார் சிலிர்ப்புடன் முற்றுப் பெறாத தொனிச் சிரிப்பையும் சிரித்து வைத்தார்.

"சும்மா சொல்லுங்க ஹாஜியார்... எனக்கு தெரியாத ரகசியமோ..?" என்றான் பளீல்.

"இல்ல.... ஓண்ட தங்கச்சி சின்ன வயசு. எத்தனை புள்ளையள்? இந்த வயசுல தொழில் செய்ய வேணுமோ? பேசாம ஒரு கலியாணத்த முடிச்சு கொடே....."

"நானும் எத்தனையோ தரம் சென்ன. கேட்க இல்லை அவள்ட ஒரு புள்ளையையும் வளர்த்துக்கொண்டா போதுமாமம்."

"அப்படியோ..... கொஞ்சம் காலம் போனா புரியப்படும். நல்ல பசுந்தா இருச்சிய...." ஹாஜியாரின் மிடுக்கிழந்த குரல், அப்படியே தொடராமல், நின்றது. கண்கள் அசையாது பளீலை நோக்கின.

ஹாஜியார் 'நல்ல பசுந்து' என்றால் போதுமா, அதற்கொரு காரணமில்லாமலில்லை. இதை பளீல் அன்றி யாரும் புரிந்துகொள்ளவும் மாட்டார்கள்.

"ஹாஜியார்.... அது ஏண்ட தங்கச்சி....." என்றான் பளீர்.

"அதனால்தான் சென்ன. தலைபோற காரியமல்ல; பெறகு பேசாம ஒரு கலியாணத்தையும் முடிச்சு கொடுத்திடுவோம்.... செலவு எல்லாத்தையும் நான் பாத்துக்கொல்லியன்.... ஒண்ட செலவுக்கு இப்பவுக்கு இத வெச்சுக்கோ...." என்றவாறே ஐம்பது ரூபா தாள் ஐந்தைக் கொடுக்கிறார். எந்த நாளும் ஐந்து, பத்துக்கு மேல் கொடுக்காதவர் இண்டைக்கு ஐம்பது ரூபா ஐந்தைக் கொடுத்ததும் அவனுக்கு தலைகால் புரியவில்லை... பணத்துக்காக பாசத்தையும் விலை கூற துணிந்துவிட்டான்.

"சரி.... ஹாஜியார்.... நான் எப்படி....?"

"நீ இதுக்கு தூது போக வேணாம். நான் பாத்துக்கொல்லியன். நாளக்கு போயா எலியோ.... நான் ஐடியா செல்லியன்" என்றவாறே அந்தரங்கமான இடத்திலேயும் அவன் காதில் இரகசியமாகக் கூறுகிறார்.

அடுத்த நாள்.... காலை நேரம். - அப்பொழுதுதான் காலை ஆகாரத்தை முடித்துக்கொண்ட பளீல், திண்ணையில் தன் குழந்தைக்கு தலை சீவிக் கொண்டிருந்த நபவியைப் பார்த்து "தங்கச்சி நீயும் வாரோ...?" என்றான்.

"எங்கைக்கண் நாநா..?"

"இண்டைக்கு நல்லொரு பைசிகோப் - போட்டிருச்சியாம். மதினி ஒரே கரச்சல், பத்துமணி ஷோ பாக்கோம் எண்டு. நீயும் வாரோ...?"

"எனக்கு என்ன சந்தோஷம் நாநா...? நீங்க பெய்த்திட்டு வாங்கே."

பளீல் தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு - நபவியின் பிள்ளையுடன் வெளியேறுகிறான். சிறிது நேரத்தில் வாசலில் "பளீல்..... பளீல்...." என்ற சப்தம் கேட்டு குசினியில் வேலை செய்து கொண்டிருந்த நபவி "வாறன்..."என்றவாறே வாசலுக்கு வருகிறாள்.

வாசலில் தன் அழகிய பல்லு செட்டைக் காட்டியபடி, கம... கம... என செண்டின் நறுமணம் வீச "பளீல் இல்லையோ....?" என்கிறார் ஹாஜியார்.

ஹாஜியாரைக் கண்டதும் தலையில் முக்காட்டைப் போட்டு, உடம்பையும் புடைவையால் மூடிக்கொண்டு.... "இல்ல.... வெளியே போன" என்கிறாள்.

"அப்படியோ...." எனக் கூறியவாறே அழையா வீட்டுக்குள் நுழைந்த விருந்தாளி மாதிரி உள்ளே வந்து உட்கார்ந்து கொள்கிறார்.

"புள்ள.... இப்படி வெக்கப்பட வேணாம்.... நாளைக்கு எனக்கிட்ட வேலைக்கு வார நீங்க இப்படி இருக்கசடு எலியோ.... ஒங்கட வேல விஷயமாகத்தான் பேச வந்த. பளீல் இல்ல; அவன் இல்லாம இருந்தது மிச்சம் நல்லம். இத நீங்க வெச்சிக்கொங்க..... பத்து ரூபா நோட்டை

நீட்டியவாறே எழுந்து அவள் கையைப் பிடிக்கிறார். அவளுக்குத் தூக்கிவாரிப் போடுகிறது. தன் உடல் பதற வெடுக்கென கையைத் தட்டிவிடுகிறாள்.

"இதுக்கெல்லாம் பயப்பட வேணுமோ புள்ள? இங்க ஒருத்தரும் இல்ல; எனக்கும், ஒனக்கும் தெரிஞ்சதுதான். நான் ஒனக்கு சல்லி, தங்க ஒடம் எல்லாம் தாரன்" எனக் கூறியவாறே அவளை நெருங்குகிறார்.

அவளுக்கோ வெட.... வெடவென்று உடல் நடுங்கிற்று. இருதயமே விண்டு வெடித்து விடும் போல நாடி நரம்புகள் எல்லாம் பதறித்துடித்தன. தன்னை நெருங்கி வரும் ஹாஜியாரின் கன்னத்தில் "பளார்" என அறைந்து விட்டு அந்த வேகத்தில் "சீ.... நீயும் ஒரு ஹாஜியார்...." என்றவாறே வெளியே பாய்ந்து விடுகிறாள்.

காமவெறி தலைக்கேறிய ஹாஜியாருக்கு அவள் கொடுத்த அறை ஆத்திர வெறியை கிளப்புகிறது. அவமான உணர்ச்சி கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுகிறது. வெளியேறியபடியே..... "சீ.... பிச்சைக்கார நாய்களின் திமிரைப் பாக்காட்டி, ஏண்ட உப்ப திண்டிட்டு எனக்கே வெளாடப் பார்க்கிறாங்க. அவன் வரட்டும் நான் கேட்டுக் கொல்லியன்" எனக் கூறுகிறார்.

'அவன் வரட்டும் நான் கேட்டுக் கொல்லியன்' என கடைசியாக ஹாஜியார் கூறிவிட்டுச் சென்ற வார்த்தை அவள் எண்ணச் சுழலில் சுழல்கிறது. பணத்துக்காக பண்பை இழக்கக் கூடியவன் பளீல் என்பதை கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனால் இன்று பணத்துக்காக பாசத்தையும் விலை கூறத் துணிந்துவிட்டானே.... யா.... அல்லாஹ் என்றவாறு கட்டிலில் போய் விழுகிறாள் நபவி. விரும்பிய மட்டும் அழுதாள். கண்ணீர் அவள் ஆத்திரத்தைக் கழுவவில்லை. எதற்கும் ஒரு முடிவோடு எழுந்து நிற்கிறாள்.

பிற்பகல் - காலைக்காட்சி பார்த்து விட்டு வீடு திரும்பிய பளீலுக்கு ஆச்சரியமாக இருந்தது. குற்றமுள்ள மனம் அல்லவா? அவன் பேச்சில் அவசரம் தொனித்தது.

"தங்கச்சி ஏத்தியன் ஒரு மாதிரி இருச்சிய...?" என்றான்.

"ஒன்றுமில்லை நானா...."

"ஒன்றுமில்லையோ.... ஆ சரி .... நான் போனப் பொறகு தாரு சரி வந்தோ?"

"இல்ல...."

"ஹாஜியார் வர இல்லையோ...?"

இந்த வார்த்தை அவளுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போலிருந்தது. ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு.... "ஓ.... நானா" என்கிறாள்.

"ஏத்தியன் சென்ன....?"

"இதுதான் சென்ன" - பழைய செருப்பால் அவன் கன்னத்தில் விளாசுகிறாள். பளீலும் அவன் மனைவியும் விக்கித்து நிற்கின்றனர்.

"சீ.... நீயும் ஒரு நானா...." எனத் தன் பிள்ளையை கையால் பிடித்த படி வெளியேறுகிறாள் நபவி.

அவள் நடந்து கொண்டே இருந்தாள்.... துணிவைக் கைவிடாமல்!

**இன்ஸான் - 1968.**

# கொடை

கிழக்கு வெளுத்தது. செங்கதிர்களால் ஒளிவீசிக்கொண்டு கதிரவன் வரவு தந்தான். அகிலம் ஜெகஜோதியாகப் பிரகாசிக்கத் தொடங்கியது. உலகம் விழித்துக் கொண்ட நேரத்தில் உறங்கிக் கொண்டிருந்தது நிஸ்வி ஹாஜியாரின் பங்களா. புனித ரமழான் மாதம் ஸஹர் சாப்பாட்டை முடித்துக் கொண்டு தூங்கின பங்களாவாசிகள் இன்னும் எழுந்திருக்கவில்லை.

பங்களா வாசிகள் தூங்கின நேரத்தில் விழித்துக்கொண்டு கேட்டடியில் காவல் காத்துக்கொண்டிருந்து ஒரு கூட்டம்.

அன்று நோன்பு இருபத்தேழு. புனிதத் திருநாள். நிஸ்வி ஹாஜியார் ஏழை எளியவர்களுக்கு தானதருமம் கொடுக்கப் போகிறார். இதனால்தான் ஸஹர் நேரந்தொட்டு ஹாஜியாரின் கேட்டடி வாசலில் காத்துக்கொண்டிருந்தனர் இஸ்லாமிய இரப்பர் கூட்டங்கள் - மிஸ்கீன்கள் - பிச்சைக்காரர்கள்.

நாளுக்கு நாள் பட்டினியால் வாடிய சதைப் பிடிப்பில்லாத உடல்களும், அழுக்குப் படிந்த புடைவை, சட்டை, சாரங்களும் அங்கு காட்சி தந்தன. குழந்தைகளை இடுப்பில் தூக்கிக் கொண்டிருந்த தாய்மார்கள். ஷேவ் செய்யாத முகங்களைக் கொண்ட முதியவர்கள், கிழிந்த தொப்பிகளை தலையில் போட்டுக்கொண்ட சோம்பல் இளைஞர்கள். முகம் கழுவாத பிள்ளைகள்.... இத்யாதி அழகுக்காட்சிகள் அக்கூட்டத்தில் காணக் கிடைத்தன.

ஜேம்ஸ்பொண்ட் முதலிய சண்டைப் படங்கள் வந்தால் படமாளிகைகளில் விலை குறைந்த ஆசனங்களுக்காக ஒருவர்மேல் ஒருவர் ஏறி எப்படி முக்கு கொடுப்பார்களோ அதே நிலையில் ஹாஜியாரின் பங்களா கேட்டடி வாசல் காட்சி தந்தது. சலவாத்துச் சொல்ல வேண்டிய நேரத்தில் தூஷண வார்த்தைகள் காதைத் துளைத்துக் கொண்டிருந்தன.

இந்த இரைச்சலுக்கு மத்தியில் ஹாஜியாரின் பங்களா வாசல் திறக்கப்பட்டது. வெளியே கப்சிப்பென அமைதி நிலவியது. ஹாஜியாரின் அந்தரங்க வேலையாள் நௌஷாத் வெளியே வருகிறான்; கூட்டத்தை ஒரு முறை நோட்டம் விடுகிறான். பின் தொண்டையை கனைத்துக் கொண்டே "ஹாஜியார் இப்பதான் குளிச்சப் பெய்த்திருச்சிய; நீங்க எல்லாரும் கொரடாம போலின்ல வாங்கோ!"

நௌஷாத் சொன்னதுதான் தாமதம். பொருளாதாரத் துறையில் தனக்கென தனியிடம் வைத்த வியாபாரச் சமுதாயம், அறிவியலில் முன்னணியில் நிற்கவேண்டிய சமுதாயம், அறிவற்ற சிந்தனையற்ற உயிருள்ள மிருகங்களைப்போல் வரிசையின் முன்னே நிற்க, ஆண், பெண் பேதமின்றி போட்டி போட்டுக்கொண்டனர். குழந்தைகளின் அழுகுரலும் அடா, புடா அநாகரீக வார்த்தைகளும் காதைப் பிளந்தன. இத்திருக்காட்சியே நௌஷாத்துக்கு கோபத்தை மூட்டிவிட்டது.

கொதிக்கும் எண்ணெயில் போட்ட பப்படம் போல் பலத்த குரலில் "அடே நாசமாகப் போக... ஆம்புள பொம்புள இப்படி பெரண்டு கொள்ளிய; ஆம்பிள அந்த கேட்டாலையும் பொம்புள இந்த கேட்டாலையும் வாங்கோ" என பொரிந்து தள்ளினான்.

ஆண்கள் எல்லாரும் அமைதியாக வரிசையில் போய் நின்றனர். பெண்களின் இரைச்சல் அடங்கினபாடு இல்லை. அவர்கள் கேட்டடிச் சண்டை பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்பொழுதுதான் ஹாஜியார் வந்து சாய்வு நாற்காலியில் அமர்கிறார். ஐந்தே முக்கால் அடி உயரம். விட்டமின் வர்க்கங்களே உண்டு தடித்துப் பெருத்த கட்டுமஸ்தான பெஸர் உடம்பு. ஐந்து பேருக்கு இருக்க வேண்டிய சதையை அவர் ஒருவரே சுமந்து கொண்டு வந்து அமர்ந்த காட்சி அங்கே தனியழகைக் கொடுத்தது.

ஹாஜியாரின் அடுத்த பக்கத்தில் அவரின் திருவருள் செல்வர், எதிர்கால ஹாஜியார் நிஸ்வி பௌஸ் அமர்ந்து கொள்கின்றான். அவர்கள் இருவரின் பக்கத்தே ஹாஜியாரின் செல்லச் சீமாட்டி ஹாஜ"ம்மா இரண்டு பெரிய தட்டுகளைக் கொண்டு வந்து வைக்கிறார். அவைகளில் இருபத்தைந்து, ஐம்பது ஒரு ரூபா நாணயங்களும் இரண்டு ரூபா தாள்களும் நிரம்பியிருந்தன. இவைகளைக் கண்டு கியூ வரிசையில் ஊர் கீழே விழுந்தாலும் கேட்க கூடிய விதமாக நிசப்தம் நிலவியது.

ஹாஜியாரும், அவர் திருவருட் செல்வரும் கொடை கொடுக்க துவங்கிவிட்டனர். வயதானவர்களுக்கு இரண்டு ரூபாவும், சிறுவர்களுக்கு ஐம்பது சதமும், குழந்தைகளுக்கு இருபத்தைந்து சதமுமாக தமது இன்கம்டக்ஸ் கணக்கை முறைப்படி கொடுத்துக் கொண்டிருந்தனர்.

மூன்று மணி நேரம் முழுமூச்சுடன் ஹாஜியாரும் அவரைச் சார்ந்தோரும் தமது வேலைகளை திறம்பட செய்து முடித்தனர். இஸ்லாமிய சமுதாயத்தில் பிச்சைக்காரக் கூட்டத்தை வளர்க்கிறோம். இந்த எண்ணம் அவர்களுக்கு தோன்றவில்லை. பதிலாக ஊர் புகழ பெரிய கொடை கொடுத்துவிட்டோம் என்ற மமதையும், பெருமையும் அவர்களின் நெஞ்சை உயர்த்துகிறது.

இந்நேரம் "ஹாஜியார்" என அமைதியான குரல் வாசலிலே கேட்கிறது. ஆயாசத்துடன் பருத்த தொந்தியை தூக்கிக் கொண்டு சாய்வு நாற்காலியில் இருந்து எழுந்த ஹாஜியார் திரும்பிப் பார்க்கின்றார். பார்த்தால்.... முஸாபர் போல ஒருவரும், வாலிப வயதை தாண்டிக் கொண்டிருக்கும் பெண்ணும் சிறு பிள்ளையொன்றைக் கையில் பிடித்தபடி கேள்விக் குறிபோல் வளைந்து நிற்கின்றனர்.

இவர்களைக் கண்ட ஹாஜியார் வெறுப்புடன் "இது எனத்தியன்... இப்பதானே எல்லாத்தையும் வாரிக்கொடுத்த. நேரத்தோட வர ஏலாதோ?" என்கிறார்.

"இல்ல ஹாஜியார், நேரத்தோட தான் வந்த அவங்க எல்லாம் போகக் காட்டியும் தான் நிண்ட" என்கிறார் முஸாபிர்.

"அப்படியோ அப்படி எனத்தியன் ஒங்களுக்கு மட்டும் விஷேசம்?" என ஞானத்துடன் கேட்கின்றார்.

இவ்வார்த்தை முஸாபிருக்கு ஒரு மாதிரியிருந்தது. எனினும் அடக்கத்துடன் "கொமறு காரியமாக ஒங்களிடம் உதவி தேடி வந்தோம்.

நாங்க கஷ்டப்பட்டாலும் எங்கட மகள் சரி நல்லா இருச்ச வேணும் எலியோ? அதுக்காகத்தான் நல்ல ஒரு எடத்தில கலியாணம் பேசின. மாப்பிள ஊட்டுல சீதனமும் வேணும் என்டிய. நல்ல எசவு. ஆனா எங்கட மகளுக்கு பொடவ எடுத்துக் கொடுக்க சரி வசதியில்ல. இந்த நெலமையில எங்களுக்கு கடன் தரவும் நாதியில்ல. இப்படி இருக்கச் செல்லத்தான் அடுத்தவூட்டு ஹாமிது நாநா ஒங்கலப்பத்தி செல்லி இந்த காயிதத்த தந்த" எனக் கூறியவாறே தன் சட்டைப் பையில் இருந்த கடிதத்தை ஹாஜியார் வசம் கொடுக்கிறார்.

கடிதத்தை வாசித்த ஹாஜியார், "ஆமிதுக்கு வேற வேல இல்லை எலியோ. இது பாருங்கோ. இப்படி எத்தனையோ பேர் வந்து ஒப்பாரி வச்சிய; புள்ளகல கலியாணம் முடிச்சி கொடுக்க வழியில்லாட்டி பெற அசடு. சரி சரி. ஆமிது ஒரு காயிதம் அனுப்பியிருச்சிய. பாவம் அவண்ட மொகத்துக்காக இந்தாங்கோ." பத்து ரூபா நோட் ஒன்றை நீட்டுகின்றார்.

முஸாபிருக்கு தன்மானம் தலைதூக்குகிறது. ஏழைகளின் சொல் அம்பலம் ஏறாது என்பது அவருக்கு தெரியும். கண்ணீராக வெளிப் படுத்தினார். இரண்டு மூன்று முறை ஹாஜியாரையும் பத்து ரூபா நோட்டையும் பார்த்தார். நீண்ட பெருமூச்சுக்கிடையே பத்து ரூபா நோட்டைப் பெற்றுக் கொள்ளாமல் தன் பிள்ளையைக் கையில் பிடித்தபடி மனைவியுடன் வெளியேறுகிறார்.

ஹாஜியாருக்கு பெரிய அவமானம். அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் "பிச்ச வேங்க வந்தவண்ட திமிர். இவன் ஏண்ட மாமாவோ, மச்சானோ, அள்ளிக் கொடுக்க...?" என அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே அழகிய பென்ஸ் கார் ஒன்றும், பெரிய எம்.ஜி. காரொன்றும் வந்து வாசலில் நிற்கவும் சரியாக இருந்தது.

ஹாஜியாரின் கோபமெல்லாம் எங்கே பறந்தது என்று சொல்ல முடியவில்லை. வாயெல்லாம் பல்லாக சிங்களத்தினால் ஆயுபோவான் கூறி வரவேற்கிறார். தீராத மனச்சுமையுடன் வெளியேறிக்கொண்டிருந்த முஸாபிர் "யா..... அல்லாஹ்!" என கையை ஏந்துகிறார். 'இவர்களுக்கு நல்லெண்ணத்தைக் கொடு!' என அவர் மனம் வேண்டுகிறது. கண்களில் ஆறாக கண்ணீர் ஓடுகிறது.

அடுத்த நாள்.

***'கொடை வள்ளலின் கொடை'*** என்ற தலைப்பில் வந்த செய்தி இது:

இவ்வருடம் ஒரு இலட்சம் ரூபா செலவுடன் நிர்மாணிக்கப்பட இருக்கும் வெசாக் பந்தலுக்கு பிரபல வணிகரும், கொடை வள்ளலுமான நிஸ்வி ஹாஜியார் அவர்கள் பத்தாயிரம் நன்கொடையாக வழங்கியுள்ளார். இவரின் சுயநலமில்லாத இச்சேவையை பௌத்த, முஸ்லிம் மக்கள் எல்லாரும் புகழ்கின்றனர்.

இச்செய்தி தினசரிகளில் - பெரிய எழுத்தில் - முதலாம் பக்கத்தில் வெளிவந்திருந்தது.

**இன்ஸான் - 1968.டிசம்பர்.22.**

# முறையீடு

ஊரே அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தது. எங்கும் அதே பேச்சு! இரண்டு பேர் கூடினாலும் திரும்பத் திரும்ப அதையே பேசிக் கொண்டிருந்தனர். குறிப்பாக அவ்வூரில் அது பரப்பரப்பான செய்தியாக இருந்தது.

"கரீம் காக்கா.... இதற்கு நல்லதொரு முடிவு காண வேணும்.... எங்கள் ஊரில் என்றுமே நடக்காததல்லவா நடந்திருக்கிறது...." என்றவாறே செயின் நாநா அடுத்த வீட்டுக் கரீம் காக்காவிடம் அன்றைய உள்ளூர் செய்தியைக் கூறுகிறார்.

"உண்மைதான்..... செயின் நாநா, எவ்வளவு பெரிய கேவலம் என்று பாருங்க...." என அலுத்துக் கொள்கிறார் அவர்.

"இந்நேரம்.... நீங்க இரண்டு பேரும் எதைப்பற்றி இப்படி காரசாரமாகப் பேசிக் கொண்டிருக்கிறீங்க...?" என்று கேட்டபடி அத்தர் பாஷா அவ்விடம் வருகிறார்.

"வாங்க.... வாங்க.... உங்களுக்குத் தெரியாதா செய்தி? அந்த ஹாமித் நாநாவின் மகள் சரீனாவுக்கு மூனுமாசமாம்."

ஆ... அப்படியா செய்தி! ஊரில் நடக்காத செய்தி.... சே.... சே.... குமரிப் பிள்ள புள்ள உண்டாகியிருக்கிறாள்.... சீரழிவு.... சரி.... யாரு ஆள்...?"

"அந்த மொம்ம லெப்பையின் மகன் சனூன்.... அவன் தான் பொடியன்...."

"அது மட்டுமல்ல; நேற்று ராத்திரி விஷயம் வெட்ட வெளிச்சமாகி விட்டது. உடனடியாக லெப்பையும், ஹாஜியாரும் வந்து காவினையும் எழுதிட்டாங்க" என இடைமறித்த கரீம் காக்கா பேசினார்.

"இது அதைவிடப் பெரிய பஸாது. இந்த லெப்பையும், ஹாஜியாரும் சல்லி எங்கே என்று வாயைத் திறந்து பார்த்துக் கொண்டு இருப்பாங்க; கிடைத்த இடத்தில் கள்ளக் காவின் எழுதுவாங்க... இவங்களுக்கு நல்லதொரு பாடம் படிச்சிக் காட்டனும்...." என்கிறார் அத்தர் பாஷா.

"அதைப்பற்றித்தான் நானும் பேச வந்தன். கட்டாயம் முடிவு தேடணும். இதற்கு நல்லஆள் சுபைர் மரிக்கார். அவரைப் பார்த்துப் பேசி.... பள்ளிக்கு ஒரு முறைப்பாடு போடுவோம். இந்த விஷயத்தை இப்பவே செய்திட வேணும்.... இந்தப் பஸாதுகளப் பார்த்துக் கொண்டு இருக்கக் கூடாது."

"ஓ.... இப்பவே செய்திட்டாப் போச்சு.... வாங்க, சுபைர் மரிக்கார் வீட்டுக்குப் போவோம்."

"எனக்கு வீட்டிலே கொஞ்சம் அவசர வேலை. இன்றிரவே முடித்திட வேண்டும். நீங்க இரண்டு பேரும் போங்க.... நான் வாரன்" என செயின் நாநா வழி விட்டுப் போய்விடுகிறார்.

"அப்படியா.... சரி.... இப்பவே போவோம்." கரீம் காக்காவும், அத்தர் பாஷாவும், சுபைர் மரிக்கார் இல்லம் நோக்கி ஏகுகின்றனர்.

"வாங்க.... வாங்க.... நான் கேள்விப்பட்ட செய்தி உண்மைதானா...?" என்று கேட்டவாறே சுபைர் மரிக்கார் அவர்களை வரவேற்கிறார்.

"அதைப் பற்றிப் பேசவே நாங்கள் வந்தோம்...."

"பாருங்க மரிக்கார்.... இப்படியான பஸாதுகளைப் பார்த்துக்கொண்டு நாங்க ஏன் இருக்க வேணும்? இப்பவே பள்ளியில் முறைப்பாடு போட வேணும். அதற்காக வந்தோம்."

"நான்.... அறியாப் பூச்சி. எனக்கு எழுதத் தெரியாது. நீங்களே ஒரு முடிவிற்கு வாங்க."

"அப்படித்தான் மரிக்கார்.... நீங்களே ஒரு முடிவிற்கு வாங்க...."

"அப்படியென்றா..... இப்படி எழுதுவோம்..."

"எப்படி....?"

"கனம் கதீப் கலீபா ரெஸ்டி அவர்களுக்கு, ஹாமித் நாநாவின் மகளாலும், மொம்மலெப்பையின் மகனாலும் எங்கள் ஊரில் நடக்கக் கூடாத பஸாது நடந்துவிட்டது. இவர்களைப் பற்றி நடவடிக்கை எடுத்து பள்ளியிலிருந்து விலக்கி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் ரிஜிஸ்டர் ஹாஜியாரையும், பள்ளி லெப்பையையும் கள்ளக் காவின் எழுதியுள்ள படியால் பள்ளியிலிருந்து நீக்கி வைக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்."

"ஆஹா.... பேஷ்.... அத்துடன் இவர்களை ஊரிலிருந்து வேறாக வைக்கும்படி எழுத வேண்டும்."

மூவரும் சேர்ந்து குற்றப் பத்திரிக்கையைத் தயாரிக்கின்றனர்.

அடுத்த நாள்.... விடிந்ததும் விடியாமலும் பள்ளிவாசல் டிரஸ்டியின் வீட்டின் முன் மூவரும் நிற்கின்றனர்.

டிரஸ்டி புன்சிரிப்புடன் ஸலாம் கூறி அவர்களை வரவேற்கிறார். டிரஸ்டி ம. மூத் அவ்வூரில் தனித்தன்மையான தலைவர். மார்க்கக் கல்வி படித்த மௌலவி மட்டுமல்ல; ஒரு பட்டதாரியும் கூட. பலமுறை தீனின் வழியில் மக்கா யாத்திரை சென்றவர். எல்லாருக்கும் உண்மை வழி கூறி நேர்மை வழி நடப்பதனால் அவ்வூர் மக்கள் அவரை டிரஸ்டியாக மட்டுமன்றி.... கலீபாவாகவும் நியமித்துக் கொண்டனர். மார்க்கத் தீர்ப்புக் கூறுவதில் அவருக்கு நிகர் அவரேதான். எனவே தன்னிடம் முறைப்பாட்டுக்கு வந்துள்ள பிரச்சினையை அவர் கூர்ந்து கவனித்தார்.

"சுபைர் மரிக்கார், கரீம் காக்கா, அத்தர் பாஷா, நீங்கள் மூவரும் கொண்டு வந்துள்ள இந்த முறைப்பாடு நல்லதுதான். உங்கள் முறையீட்டைக் கொண்டு எனக்கு மட்டும் தக்க பதில் தரமுடியாது. பரிபாலனக் கமிட்டியிடம் சமர்ப்பித்து, இன்னும் உலமாக்களைக் கூட்டி

ஆலோசித்து பகிரங்கத் தீர்ப்பு அளிக்கிறேன். அதற்கு முன் தனிப்பட்ட முறையில் உங்களிடம் கேள்விகள் கேட்க வேண்டும்."

"கேளுங்கள் ஹாஜியார்.... கேளுங்கள்...."

"கேட்கத்தான் போகிறேன்.... ஆனால் நீங்கள் ஒருவரும் மன வருத்தமோ, கோபமோ படக்கூடாது. ஏனெனில் சமூகப் பிரச்சினைகளை ஆராயச் சொல்லும் நீங்களும் சமூகத்தின் அங்கம்தானே? உங்களிடமும் சிறு குறைபாடுகள் இருக்கலாம் அல்லவா....?"

"வாஸ்தவம்தான்.... நிச்சயமாக நாங்கள் கோபப்பட மாட்டோம். நீங்கள் எதைக் கேட்டாலும் பதில் தருவோம்." என்றனர் ஒரேயடியாக மூவரும்....

"மரிக்கார், மைமூனா உங்களுடைய யார்?"

டிரஸ்டியின் இக்கேள்வி சுபைர் மரிக்காரை திகைப்பில் ஆழ்த்துகிறது. அமைதியாக "என் சகோதரி....." என்கிறார்.

"அப்படியா.... அவளுக்கு நீங்கள் சிறப்பாக, சீரும் சிறப்புடன் திருமணம் செய்து வைத்தீர்கள். இரண்டு மூன்று குழந்தைக்கு தாயாகிய பிறகு அவள் இன்னொருவருடன் சிநேகிதமாகி கட்டிய கணவனைப் புறக்கணித்து விட்டு ஓடிப்போனாளல்லவா? இப்பொழுது திரும்ப இந்த ஊருக்கே வந்து வாழ்கிறாள். ஓடிப்போன இரண்டாம் கணவனும் தலாக் கூறிவிட்டான். சரிதானே...?"

"உம்...."

"தலாக் கூறிய அவனும் வேறொரு பெண்ணை நிக்காஹ் செய்துகொண்டான். ஆனால் அவன் ஏன் உங்கள் தங்கை வீட்டுக்கு இப்பொழுதும் வரவேண்டும்?"

சுபைர் மரிக்கார் மௌனம் சாதிக்கிறார்.

"கரீம் காக்கா.... சுபைர் மரிக்காரின் தங்கச்சியுடன் ஓடிப்போன நிலாம் உங்கள் யாரு...?"

"என்.... நாநா...."

"அப்படியானால் இதுவும் பெரிய பஸாதல்லவா? இவைகளுக்கும் சேர்த்து நடவடிக்கை எடுத்திருக்கலாமே....!"

அவரும் மௌனம் சாதிக்கிறார்.

"அத்தர் பாஷா, உங்களைப் பற்றியும் இப்படி நான் கூறுகிறேன் என மனமழிய வேண்டாம். நீங்கள் வட்டிக்கு பணம் கொடுப்பதாக கேள்வி....!"

"இல்லை.... ஆதாயத்தை நோக்கமாகக் கொண்டு பணம் கொடுக்கிறேன்.... இது வட்டியல்ல; ஆதாயம்...." என இழுத்தவாறே அசடாகச் சிரித்தபடி கூறுகிறார்.

"அப்படியா.... சரி.... நீங்கள் சாராய தவரணை, ரேஸ்-புக்கி வைத்து நடத்துகிறீர்களே.... இதற்கு என்ன சொல்கிறீர்கள்? நீதியின் சன்னிதானத்தில் எல்லோரும் சமம். இளைத்தவன் வலுத்தவன் என்ற பாகுபாடு கிடையாது. உங்களுக்கொரு நீதி, ஊருக்கொரு நீதியா?"

அத்தர் பாஷா திடுக்கிட்டு, செயலற்று நிற்கிறார். அவர்களுள் நீண்ட அமைதி குடிகொண்டது. மனச்சாட்சி ஆவேசத்தோடு அவர்களை சாடிக்கொண்டிருக்கிறது என்பதற்கு ஆதாரமாக மூவரினதும் அரை டஜன் கண்களும் தாழ்ந்து விட்டன. இருண்ட முகத்துடன் எழுந்து நின்ற அவர்கள் மௌனமாக வெளியேறுகின்றனர். டிரஸ்டியின் கையில் முறையீட்டுக் காகிதம் ஆடிக்கொண்டிருந்தது.

**இன்ஸான் -1968. செப்டம்பர்.**

# இரத்தக் கண்ணீர்

"உம்மா..... உம்மா..... உம்மா....."

"என்ன மகள்..... இப்படி ஓடி வார....?"

பாடசாலை விட்டு வந்த என் பேர்த்தி தன் உம்மாவை விழிக்கும் வார்த்தைகள் அன்றைய தினசரிகளை வாசித்துக் கொண்டிருந்த எனது காதில் விழுகின்றன.....

"உம்மா, எங்கள் டீச்சருக்கு பேசத் தெரியாது....."

என்ன மகள் சொல்றீங்க.....? அப்படி பேசக் கூடாது..... "

"இல்ல உம்மா..... நீங்க சொல்வீங்க தானே..... வாடி, போடி, அடியே என்று பேச வேண்டாம். அது..... கெட்ட வார்த்தை..... வாங்க, போங்க, எனப் பேசச் சொல்லி தானே சொல்வீங்க.....?"

"ஓம் சொன்ன..... இப்போ அதற்கென்ன...?"

"எங்கட டீச்சர் அப்படியில்ல உம்மா..... கோபம் வந்தா எங்கட டீச்சர்..... வாயப் பொத்துங்கடி..... அடியே இங்க வாடி..... என்று பேசுறார் உம்மா..... இது கெட்ட பேச்சு தானே...?"

"ஆமாம்..... டீச்சர்மார் அப்படி பேசினா கணக்கெடுக்க வேணாம். " என் மகள், அவள் மகளின் கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் தவிப்பது என்னால் உணர முடிந்தது.....

"மகள் ரைஸ் இங்க வாங்கோ...." செல்லமாக நான் என் பேர்த்தியை கூப்பிட்டேன்.

"வாரேன் அப்பா....." ஓடி வந்து என் மடியில் விழுகிறாள்.....

"என்ன உம்மா, நீங்க உம்மாக்கிட்ட என்ன சொன்ன....?" செல்லமாகக் கேட்டேன்.

"பாருங்க அப்பா..... எங்கட டீச்சர் இன்டர்பெல்லுக்கு திண்ண சொன்னாங்க...... நாங்க எல்லாரும் திண்ட. அப்ப என்ட கூட்டாளி சரீபா என்ட தண்ணி போத்தல எடுத்த..... அது அப்படியே மேசையில கொட்டிட்ட, இதைக் கண்ட டீச்சர் பெரம்ப எடுத்துக் கொண்டு வந்து..... அடியே! எல்லாரும் ஒழுங்கா திண்ணிய. நீ மட்டும் மேசையில தண்ணிய கொட்டிய...... ஒன்னய..... தொடை டீ..... என்றா..... நான் பயந்தன்..... சரீபா அழுதாங்க. பாவம்..... அந்த டீச்சர் பயமுறுத்தின..... டீச்சர் சரியில்ல தானே.....!"

"அப்படி சொல்ல வேணாம் மக..... டீச்சர்மார் நல்லவங்க..... கோபம் வந்தா ஒங்கட உம்மா ஒங்களுக்கு ஏசுவார் தானே" என்றேன்.....

"ஓம் அப்பா....."

"அது மாதிரிதான் டீச்சர் மாரும்.... அவங்க சொல்லிற மாதிரி நாங்க கேட்கணும்..... கோபப்பட நடக்கக் கூடாது..... அவங்க எங்களுக்கு பாடம் சொல்லி தருவாங்க..... விளையாட சொல்லி தருவாங்க..... டான்ஸ் சொல்லி தருவாங்க..... பாட்டு சொல்லி தருவாங்க..... நாங்க நல்லாகப் படிச்ச வேணும்" என்றேன்.....

"ஓம் அப்பா..... எனக்கு பசி..... உம்மா பசி....." என கூவியவாறு ஓட்டம் பிடித்தாள்...... நான் சிரித்துக் கொண்டேன்.....

'என் பேர்த்தி பாடசாலை சென்று மூன்று மாதமில்லை..... டீச்சரைப் பற்றிய அபிப்பிராயம் திசை மாறுகிறது. தண்ணீர் கொட்டிய பிள்ளையின் மனநிலை எப்படியோ..! வீட்டுச் சூழலில் வாழும் பிள்ளைகள் பாடசாலை சூழலுக்குப் புகும் பொழுது புதுச் சூழலை எதிர் கொள்வர்..... இவைகளை எப்படி எதிர் கொள்ள வேண்டும் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் தெரிய வேண்டும்..... இது ஆசிரிய பயிற்சியின் ஓர் அங்கம்..... எல்லா பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் இது தெரியும்..... ஆனால் ஒரு சாரார் இதை கவனத்தில் கொள்வதில்லை..... சிலர், பிள்ளைகள் மனதை அறிந்து நடப்பர்..... இவர்களை பிள்ளைகளும் கவர்ந்து கொள்வார்கள்..... சிலர் இப்படியான அபிப்பிராயங்களை ஏற்க மாட்டார்கள்..... என்றாலும் ஆசிரியர்கள் பயில்கட்டை தூக்கும் பட்டதாரிகள் அல்ல; உயிரோடு விளையாடும் உயிரோட்டங்கள்....., இவர்களையும் பாடசாலையையும் வழி நடத்துவது அதிபர் பொறுப்பு..... - இப்படியாக என் மனம் ஆசிரியர், மாணவர் என்ற வட்டத்தினுள் சுற்றியது.....

ஒரு நாள் எனக்கு பாடசாலை போக வேண்டிய நிலை ஏற்பட்டது. அன்று அதிபரை சந்தித்தேன்..... அதிபர் நடுத்தர வயது இளைஞர்; பட்டதாரி; அதிபர் ஆளுமையில் விசேட தேர்வு பெற்றவர்; எல்லாவற்றையும் விட - நல்ல சுறுசுறுப்பானவர். எவர் மனதையும் நோகவைக்காதவர் என்பவற்றை எனக்கு அவருடன் கதைத்த சிறிது நேரத்தில் அறியக் கூடியதாக இருந்தது. பாடசாலை வெளி விவகாரங்களையும் கதைத்தார். நானும் கதைத்தேன். இச்சந்தர்ப்பத்தில் என் பேர்த்தியின் அபிப்பிராயத்தை சொல்ல வேண்டிய சூழ்நிலை வந்தது. சொன்னேன்; அதன் பின் ஆசிரிய, மாணவ உறவு முறைகளையும் கதைத்தோம்.....

"உங்க கருத்துகளை ஆசிரிய மன்றில் கதைப்பேன்" என்றார். அவர் பேச்சில் அவசரம் தொனித்தது..... சங்கோஜத்தையும் உணர்ந்தேன். அதிபரிடமிருந்து விடைபெற்றேன்..... அவர் மன நிலையை மனதினுள் எடை போட்டேன்..... யார் எது கூறினாலும் மனதினுள் குடும்பத் தலைவன் தன் குடும்பத்தை பிறர் விமர்சிப்பதை விரும்ப மாட்டான். குடும்ப தவறுகளை மறைக்கவே பார்ப்பான்..... இது போலத்தான் சில அதிபர்களும்..... இதற்கு எமது பாடசாலை தலைவரும் விதிவிலக்கல்ல என்பதைக் காண்கிறேன்.

பாடசாலை என்பது ஒரு சமூக வட்டம். மாணவர், ஆசிரியர் அதிபர் என்ற வட்டம்..... சமூகத்தோடு இணையும் பொழுது ஆளுமை நிறைந்த சமூகத்தை உருவாக்க முடியும்; இதைத்தான் இஸ்லாமிய விழுமியங்களும் உணர்த்துகின்றன. இப்படியான எண்ணங்கள் அதிபர் வசம் இருப்பதைக் கண்டேன். சிறப்பான எண்ணக்கருக்களுடன் மன நிறைவோடு வீடு வந்தேன்.

ஒரே ஒரு நாள்தான் என் எண்ணக்கருக்கள் என்னை வட்டமிட்டன. மறுநாள் என் கோட்டை சாம்ராஜ்யம் சரிந்தது. 'சே..... இப்படியும் மனிதர்கள். இவர்கள்தான் நான் காணத்துடிக்கும் சமூகமா.....? கனவுகளும், நிஜங்களும் சிதைவுறுமா? கேள்விக் கணைகளால் என் மனம் அலை பாய்ந்தது.

அன்று வித்தியாலயத்தில் முற்பகல் நேரத்தில் விளையாட்டு நிகழ்வுகளும் மாலை வேளையில் கலை விழாவும் நடைபெறுவதாக அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டிருந்தன. எனக்கும் அழைப்பிதழ் கிடைத்தது; சென்றேன்......

அழகான முறையில் பாடசாலை அலங்கரிக்கப்பட்டிருந்தது. சிறு சிறு பந்தல்கள் வரவேற்றன..... ஒவ்வொரு இல்லங்களாக மாணவர்கள் பிரிக்கப்பட்டிருந்தனர்..... இல்லங்களுக்கிடையேயான போட்டி அவர்களுக்கு உற்சாகத்தை கொடுத்திருந்தது. பழைய மாணவர்கள் ஓடி ஓடி செய்யும் உதவிகள்; எதிர்கால மாணவர் நலன் கருதி ஏற்படுத்தியுள்ள தொழில் நுட்ப வழி முறைகள் என் மனதைக் கவர்ந்தன..... நான் விளையாட்டுத் திடலைச் சுற்றிப் பார்த்தேன்.

"சே..... சே..... சே..... இந்த டீச்சர்மார்களுக்கும் மாஸ்டர்மார்களுக்கும் இது ஒரு வேலையாகப் போச்சு; வெளயாட்டும், கூத்தும், புறாஜஷும், எல்லாத்துக்கும் சல்லி..... சல்லி..... சல்லி; இவை தேவையோ...? புள்ளைகள் படிக்கிறாங்களோ இல்லையோ சல்லி சம்பாதிக்க கெட்டிக்காரர்கள்!"

இவ்வசனங்கள் என காதில் விழுந்தன; சத்தம் வந்த திசையில் நானும் நடந்தேன். அங்கே சிறு கூட்டம்..... பலர் கூடியிருந்தனர். எல்லாரையும் நான் அறிவேன்..... அதில் சில நபர்களை என்னால் மறக்க முடியாது. மூளை சலவைக்கு உட்படுத்தப்பட்ட சுவர்க்கத்து கனிகள் என தம்மை காண்பித்துக் கொள்பவர்கள். தாம் சொல்லுவதுதான் சரி என..... எதிர்காலத்தில் தாம் முகம் கொடுக்க வேண்டியவைகளை அறிய முடியாதவர்கள். இவர்கள் பேசிய கதைகள் தான் என்னை வாட்டியது.

"அங்கே பாருங்க அந்த ஷைத்தான் கோட்டையை! உம்மாட பேர்ல ஒரு மண்டபத்தை, ஸ்கூலுக்கு கட்டிக் கொடுத்துள்ளாராம். நாலைந்து கோடி செலவாம். தேவைதான். ஒரு பள்ளிவாசல் கட்டிக் கொடுத்தா. போற இடத்துக்காவது நன்மை கிடைக்கும்" என நல்லோர் மனதில் நஞ்சை தூவிக் கொண்டிருந்தனர்.

எனக்கு தூக்கிவாரிப் போட்டது. என் எண்ணக்கருக்கள் சிதறுவதை அப்பொழுதுதான் உணர்ந்தேன்..... 'ஒரு பாடசாலை சிறப்படைந்தால் பல சிறைக்கூடங்கள் மறையும்....' இது அறிஞர் ஒருவரின் வாக்கு..... ஆனால் இங்கே....? நான் இதை எதிர்பார்க்கவில்லை. வாய்க்கு வந்தபடி கதைக்கிறார்களே! சிந்தனையாளர்களையும், உலமாப் பெருமக்களையும் உருவாக்கக்கூடிய ஒரு மண்டபத்தை கீழ்த்தரமான விமர்சனங்களால் விமர்சிக்கிறார்களே! என்னால் இதை ஜீரணிக்க முடியவில்லை.....

இம்மண்டபத்தை அந்நிய பாடசாலை ஒன்றுக்கு கட்டிக் கொடுத்திருந்தால்; கட்டிக் கொடுத்தோரை சிலை வைத்து கும்பிட்டிருப்பார்கள்..... சமுதாய நோக்கில்லாதவர்களின்..... இந்த விஷமத்தனமான கதைகளால் ஊர் இரண்டுபடும்..... ஊர் இரண்டு பட்டால் பாடசாலை வளர்ச்சி பாதிப்படையும்.... என்னால் இதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. என் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

அது நாளைய சந்ததியை நினைத்துப் பார்த்து வடிக்கும் "இரத்தக் கண்ணீர்"

o o o o o

# பணம் பந்தியிலே...

ஐந்து நட்சத்திர ஹோட்டல்..... தலை நகரிலே மிக விசாலமான மண்டபம்..... அங்கே..... ஜெப்பார் ஹாஜியாரின் மகளின் கல்யாணம்.

ஜெப்பார் ஹாஜியார்..... எங்கள் ஊரில் பெரிய புள்ளி..... நாலைந்து ஃபெக்டரிகளுக்கு சொந்தக்காரர். ஊருக்கு வெளியே பல விளை நிலங்களுக்கு அதிபதி. கணக்கில்லாத வாகனங்கள்..... நிறைய எடுபிடி வேலையாட்கள். ஜனாதிபதியைச் சந்திக்கலாம்; அவரைச் சந்திப்பது மிகவும் கஷ்டம். இப்படியான ஒருவரின் மகளுக்கு திருமணம் என்றால் சொல்லவும் வேண்டுமா!

மாப்பிள்ளையும் சளைத்தவரல்ல; பெரிய இடத்துப் பையன். இலண்டனில் குடியுரிமை உள்ளவர்..... அங்கும், இங்கும் தொழில் அகங்களுக்கு தலைவர்..... இலண்டனில. இராணி மாளிகைக்கு பக்கத்திலே மாளிகை மாதிரி வீடு உள்ளவராம்.....

இவர்களின் கலியாணம் எப்படி இருக்கும்...?

ஜனாதிபதி, பிரதமர் உட்பட மந்திரிமார்கள், வெளிநாட்டு தூதுவர்கள், நீதியரசர்கள்..... எஸ்டேட் ஓனர்கள், ஃபெக்டரி உரிமையாளர்கள், அரசாங்க அதிபர்கள் அரசாங்க உத்தியோகத் தர்கள், ஹாஜிமார்கள்.... இப்படி முக்கியஸ்தர் கலந்து கொள்ளும் திருமண வைபவத்துக்கு எனக்கும் அழைப்பிருந்தது; சென்றேன். பொலிஸ், காவல் படையினர் நிறைய இருந்தனர். வீடியோ, ஓடியோ கமராக்கள் சுழன்று கொண்டிருந்தன.

உள்ளே காலடி எடுத்து வைத்தேன்..... வெளியே இருந்த உஷ்ணக்காற்று எங்கே சென்றது என்பதை அறிய முடியவில்லை. இதமான குளிர் காற்று வீசியது..... மங்கலான வெளிச்சம் மனதைக் கவர்ந்தது..... விசாலமான மண்டபம்..... வரவேற்புக்கு நின்றவர் என்னையும் என்னுடன் சென்றவர்களையும் வரவேற்று ஓரிடத்தை காட்டி அங்கே அமரச் செய்தார். நாங்கள் அமர்ந்தோம்.....

ஆறுபேர் அமர்ந்து உண்ணும் மேசை..... குஷன் செய்யப்பட்ட இருக்கை..... இருக்கையில் அமர்ந்த நான்..... மேசையை நோட்டமிட்டேன்..... முக்கிய உணவு சகனைத் தவிர; உப உணவுப் பொருட்கள் ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்தன..... குறைந்தது ஓர் ஆளுக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேல் மதிப்பிடக் கூடிய உணவு, குளிர்பானங்கள் வைக்கப்பட்டிருந்தன..... சுற்றுமுற்றும் பார்த்தேன்..... ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் இருந்தனர். முந்நூற்றைம்பதுக்கு மேல் கலன்கள் வைக்கக்கூடிய விதமாக மண்டபம் அமைந்திருந்தது.

ஆண்கள் பக்கத்தை நோட்டமிட்டேன்; தலைப்பாகை, ஜுப்பா..... மேலை நாட்டு கோட் - சூட்....., நவீன இளைஞர்களின் நவீன ரக ஆடைகள்;

ஆரிய சிங்ஹல உடைகள்.... இப்படி பல ரகங்களில் ஆண்கள் அமர்ந்திருந்தனர்.....

பெண்கள் பக்கத்தில் முகமூடிய ஃபர்தாக்கள், ஜன்னல் போட்ட ஹிஜாப்புகள், இறுக்கமான நவீன அபாயாக்கள்; அரைகுறை உடல் தெரியும் ஆடை, ஓசரி.... இப்படியாக பெண்கள் அமர்ந்திருந்தனர்.....

எங்கும் நிசப்தம் நிலவியது. பெண்ணின் தகப்பனாரும் மாப்பிள்ளையின் தகப்பனாரும் ஒவ்வொரு மேசையாக வந்து குசலம் விசாரித்தனர்.....

"எனக்கு மாப்பிள்ளையின் வாப்பாவை தெரியும்....." - நிசப்தத்தை கிழித்துக் கொண்டு மாரிப் மாஸ்டர் என் காதில் ஊதினார்.

"எப்படி?" என்றேன்.....

"ஏறக்குறைய இருபது வருஷத்துக்கு முன்பு ஜீ.சி.ஈ எக்ஸாமுக்கு என்னுடன் சுபவைஸராக இருந்தார்....." என்றார்.

"அப்படியென்டால் அவரொரு மாஸ்டராக இருக்க வேணும்" என்றேன்.....

"எனக்கு பெரிய ஆச்சரியமாக இருக்கிறது. பெரிய கோடீஸ்வரராக இருக்கிறாரே!" என்றார் உவைன் மாஸ்டர்.....

"இதில் புதினப்பட ஒன்றுமில்லை; ஹாஜியார் சொல்வது உண்மைதான்" என்றார் என் பக்கத்தில் இருந்தவர்.....

எனக்கு அவரை முன்பின் தெரியாவிட்டாலும் கதை கேட்கும் ஆசையில் "எப்படி அவர் இந்த நிலைமைக்கு உயர்ந்தார்...?" எனக்கேட்டேன்.

"ஒரு காலத்தில் நானும் அவரும் நல்ல நண்பர்கள். நான் படிப்பித்த அதே பாடசாலையில்தான் அவர் படிப்பித்தார்..... பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்..... அவரிடம் ஒரே ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. பாடசாலை விட்டதும் வீட்டுக்கு போக மாட்டார்.... நேரே ரேஸ் புக்கிக்கு போவார்..... இதனால் அவருக்கும் வீட்டாருக்கும் சரியான கரைச்சல்..... அவர் சம்பளம் வீட்டு செல்வுக்கே காணாது அவர் மச்சான்மார் கவனித்துக் கொள்வார்கள்..... இந்த நிலையில்தான் அவருக்கு ஒரு இலட்சம் ரூபா ரேஸில் கிடைத்தது..... மனுஷன் அதை வைத்துக்கொண்டு வெளிநாட்டு பிஸ்னஸ் செய்தார்..... கொஞ்ச நாளில் பாடசாலைக்கு லீவு போட்டு இலண்டன் போனார்..... அவருக்கு பிஸ்னஸ் கைகொடுத்தது. குடும்பத்தோடு அங்கே சென்றார்..... இன்று பெரிய கோடீஸ்வரர்..... அவரே அறியாத பணம் அவரிடம் புரளுகிறது..... சிலர் பணம் வந்தால் நட்பை மறப்பார்கள்..... ஆனால் இன்றும் என்னுடன் நட்பாய் பழகுகிறார்" என்றார்.

"சான்ஸ் இருந்தால் எல்லாம் தேடிவரும்" என்ற மாரிப் மாஸ்டர் "இன்னொரு விஷயம் உங்களுக்கு தெரியுமா.....?" என்றார்.

"சொல்லுங்க..... தெரிய வேண்டிய செய்தி என்றால் தெரிந்து கொள்கிறேன்....."

"இது ஒருவரை குறைவாக மட்டிடும் செய்தியல்ல; தனி மனிதனையும், சமுதாயத்தையும் சீர்படுத்தும் விடயம்....." என்றார்.

"புதிர்போட்டு..... ஆசையை வளர்க்க வேண்டாம்..... விஷயத்தை சொல்லுங்கள்" என்றேன்.

"அவர்..... நாசுவ குடும்பத்தைச் சேர்ந்தவர்" என்றார்.....

"நாசுவ குடும்பம் என்றால்...?" உவைன் மாஸ்டர் ஆச்சரியத்துடன் கேட்டார்.....

"பாபர்..... அதாவது முடி வெட்டுவோர்" என்றார்.....

"இஸ்லாத்தில் ஜாதிகள் இல்லையே" என்றேன்.....

"அதனால்தான் நான் சொன்னேன்..... அவரும் தொழில் ரீதியாக தங்களை இனங்காட்டி கொள்ள தயங்க மாட்டார் என்பதால்தான் நான் சொன்னேன்" என்றார்.....

சபையில் சலசலப்பு ஏற்பட்டது. ஜனாதிபதியும் பிரதமரும் வந்து கொண்டிருந்தனர்..... சம்பந்தி இருவரும் அவர்களை வரவேற்று மாப்பிள்ளை இருக்குமிடம் அழைத்துச் சென்றனர்..... இக்காட்சிகள் மண்டபத்தில் நான்கு பக்கமும் பொருத்தப்பட்டிருந்த திரைகளில் விழுந்தன..... மணமகள் வீற்றிருக்கும் சிங்காசன மேடையும் திரையில் காண்பிக்கப்பட்டது.

மௌலவி இராக தாளத்துடன் நிகாஹ் மஜ்லிஸை நடாத்தினார். மஜ்லிஸ் முடிய..... தாலி கட்டும் காட்சியும் காண்பிக்கப்பட்டது.

ஆண் பெண் பேதமின்றி அவரவர் அழகுகள் திரையில் வண்ண வண்ணமாக காட்சி தந்தன. இவ்வேளை வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல, வெய்ட்டர்மார்கள் ஒவ்வொரு மேசையிலும் சுடச்சுட புரியாணி சகன்களையும் கோழிக்குறுமாவையும் வைத்தனர்.

எங்கள் எல்லாரினதும் கவனமும் சாப்பாட்டில் இலயித்தது. வான்கோழி புரியாணி; அதற்கு மேலே முட்டைகள், பழங்கள்; வைக்கப்பட்டிருந்தன.

விருந்து சாப்பாடு, மருந்து சாப்பிட்டு செரிக்க வைக்க வேண்டிய அளவுக்கு இருந்தது. சாப்பாடு முடிந்தது. எல்லாரும் எழுந்து வெளியே செல்லலாயினர். நானும் வெளியேறினேன். ஒவ்வொரு மேசையிலும் மிகுதியான உணவு வகைகள் நிறைய இருந்தன. ஏழை, பசியாளிகள் இல்லாத சாப்பாடு; புளிச்சேப்பகாரர்கள் இருந்து சாப்பிட்ட இடம் இப்படித்தான் இருக்கும்.

"ஏழைகள் அழைக்கப்படும் விருந்தே இறைவனின் அருள் நிறைந்த விருந்தாகும். ஏழைகள் அழைக்கப்படாது விரட்டப்படும் விருந்து இறைவனின் வெறுப்புக்குரிய விருந்தாகும்" - நபிகள் நாதரின் மொழியின் உட்பொருளை அறிய முடியாதவர்கள் என்று எண்ணியபடியே ஆட்டோவில் ஏறினேன்.....

கண்களுக்கழகிய பெரிய எயார்கண்டிஷன் வாகனங்கள் நிறைந்திருக்கும் இடத்துக்கு நாங்கள் மூவரும் கூலி ஆட்டோவில் வந்தோம். அதுவும் ஒரு வித ஆடம்பரந்தான்.

"எப்படி சாப்பாடு?" உவைன் மாஸ்டர் பற்களை கிண்டிய படியே கேட்டார்.

"·.·பாமஸியில் மக்னீஸியா நான்கு ஐந்து டெப்லட்டை வாங்கி குடிக்க வேண்டும்" என்றார் மாரிப் மாஸ்டர்.

"கலியாணம் என்றால் தீனுக்காக செய்யப்படவேண்டிய காரியம்; இங்கே வீணுக்காக செலவழித்துள்ளார்களே....." என்றேன்.....

"இங்கு மட்டுமா? இன்று, இருப்பவர் - இல்லாதவர் என்றில்லை. எல்லாரும் இப்படித்தான். போதனைகள் மலிந்து விட்டன. செயல்களும் மலிந்து விட்டதே; அல்லாஹ்தான் காப்பற்ற வேண்டும்" என்றார் நீண்ட பெருமூச்சுடன் மாரிப் மாஸ்டர்.

"ஏன்.... குர்ஆனில் நூற்றிமூன்றாம் அத்தியாயமான அல்-அஸ்ர் சூறாவில் அல்லாஹுத்தஆலா காலத்தின் மீது சத்தியம் செய்து நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான் எனச் சொல்லி இருப்பதை மறந்து விட்டீர்களா?" என்றேன்.

மறக்கவில்லை..... அதோடு.... நான் இதையும் மறக்கவில்லை; அன்டைக்கு அவர், அவராலே ஒதிக்கிய பாபர் குடும்பமொருவரையே இன்டைக்கு மாப்பிள்ளை ஆக்குகிறாரே....." என்றார் ஆதங்கத்துடன் மாரிப் மாஸ்டர்.....

"காலத்தின் கோலங்கள்....." - இடையில் குறுக்கிட்ட ஆட்டோ டிரைவர் கூறினான்.

"இந்தக் காலத்தை போலல்ல..... அந்தக் காலத்தில்..... நான் ஸ்கூல் போறகாலம்.... எனக்கு அப்பொழுது ஒரு பதினைந்து வயது இருக்கும்..... ரபீயுல் அவ்வல் - அதாவது நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த மாதம் - வந்தால், வீடு வீடாக போட்டிக்கு சுபுஹான மௌலூத் ஓதி கந்தூரி கொடுப்பார்கள்..... ஜெப்பார் ஹாஜியார் வீட்டு கந்தூரி விசேஷமானது..... நானும் அவர் கொடுக்கும் கந்தூரிக்கு விருப்பமுடன் செல்வேன்..... ஒரு முறை நான் இருந்த சகனுக்கு நாசுவ சபீர் நாநா வந்து இருந்தார்..... இதைக் கண்ட ஜெப்பார் ஹாஜியார்..... "டக்" கென்று அங்கே வந்தார்..... நீங்க எழும்புங்கோ என்று அவரை எழுப்பி ஒரு மூலையில் உட்கார வைத்தார்..... எனக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகுதான் விளங்கியது..... நாசுவ ஆட்கள் தீண்டத் தகாதவர்களாம்..... அவர்களுடன் சேர்ந்து சாப்பிடக் கூடாதாம்.... என்ன நீதியோ...?"

பெருமூச்சொன்றை விட்ட மாரிப் மாஸ்டர்..... "ஆனா ஒன்று.... எங்கள் ஆறுபேருக்கு ஒரு கலம் வைக்கப்பட்டது. சபீர் நாநாவுக்கு தனியே ஒரு கலம் வைக்கப்பட்டது; அவர் எல்லாவற்றையும் பார்சல் பண்ணி வீட்டுக்குக் கொண்டு போனார்" என்றார்.

"உண்மைதான்..... இஸ்லாம் எதை ஒதுக்கும்படி சொல்கிறதோ..... அதைப் பாவம் என்று அறியாது செய்கிறார்கள்..... ஓர் இறை, ஒரு மறை..... ஒரே இனம் என்ற கொள்கையுடைய சமதர்ம சன்மார்க்கம் இஸ்லாம்..... இப்படியும் மனிதர்கள் இருப்பதனால்தான் இஸ்லாத்தில் இல்லாததைக் கூறி தப்பர்த்தம் கதைக்கிறார்கள் இஸ்லாமிய விரோதிகள்....." என்றேன்.

"இஸ்லாத்தின் விரோதிகள் வெளியில் அல்ல; முதலில் உள்ளே இருப்பவர்களை திருத்த வேணும்" என்றார் மாரிப் மாஸ்டர்.....

"அப்போ..... இன்று நடந்தது..... பணக்கார கலியாணம் அல்ல; புரட்சிக் கல்யாணம்" என்றார் நக்கலாக உவைன் மாஸ்டர்.

"அதிகம் சந்தோஷப்பட வேண்டாம்; இங்கே பணந்தான் பேசுகிறது..... புரட்சியாம் புரட்சி..... ஒரு தமிழ் பாட்டு இருப்பதை நீங்க கேட்டில்லையோ..... கேளுங்க..... காசாலே ஆகாத காரியம் இல்ல; காசு இல்லேன்னா கோயில் குளம் பூஜையும் இல்ல....." என்றார் மாரிப் மாஸ்டர்.....

அவர் பேச்சில் வேகம் இருப்பதை அறிந்த நான் "அப்படி என்றால் - பணம் பந்தியிலே" என்றேன் ராகத்துடன்..... டிரைவர் உட்பட எல்லாரும் சிரித்தனர்.....

o o o o o

## சக படைப்பாளிகள் கலைஞர்கள் பார்வையில்....
## எம்.பி.எம். நிஸ்வான்!



ஆற்றல் நிறைந்தவர்கள் எப்போதும் சோம்பல் கொள்வதில்லை. முன்னாள் ஆசிரியரும் முன்னாள் காதி நீதிவானும் முஸ்லிம் சமுதாய மறுமலர்ச்சி இயக்கத்தின் இந்நாள் அமைப்பாளரும் சமாதான நீதிவானுமாகிய எம்.பி.எம். நிஸ்வான் அவர்களின் சீரிய சிந்தனைகளை இச்சிறுகதைகள் படம்போட்டுக் காட்டுகின்றன. அவருக்குள் ஆழ்ந்துகிடக்கும் தமிழ் ஆர்வமும் சமுதாயப் பார்வையும் இந்நூலில் பிரதிபலிக்கின்றன. ஆசிரிய வாழ்வில் மாணவருக்காக பல நாடகங்களை எழுதி மேடையேற்றியவர். நான்கு தசாப்தங்களாக நாளேடுகளில் தடம் பதித்தவை 'மூன்றாம் தலாக்'காக நூலுருவானமை மகிழ்வளிக்கிறது. அவருக்கு என் வாழ்த்துக்கள்!

*– ஏ.ஆர்.எம். ஜிப்ரி – பிரபல ஒலிபரப்பாளர்.*

சீசாவுக்குள்ளிருக்கும் பூதம், வெளியே வரும்போது எத்தகைய மலைப்பு ஏற்படுமோ அத்தகைய ஒரு மலைப்புத்தான் - நிஸ்வான் அவர்களின் கதைகளைத் தொகுத்து வாசிக்கும்போது ஏற்படுகிறது. 'இந்த மனிதருக்குள் இத்துணை ஆற்றல்களா!' என்று வியக்கத் தோன்றுகிறது. இலகுவாக நகரும் சரளமான மொழிநடை.... இடமறிந்து கையாளப்பட்டுள்ள உத்திகள் (குறிப்பாக நனவோடையுத்தி - Stream of Consciousness).... இடைக்கிடையே தலை காட்டும் சிருங்காரம்.... மண் மணம் கமழும் உரையாடல்கள்.... என்று இன்ன பிற கலந்து, மனதில் தங்கும் பாத்திரங்களையும், மனதில் பதியும் சிறுகதைகளையும் படைத்தளித்திருக்கிறார் சகோதரர் எம்.பி.எம். நிஸ்வான்.

*– 'கதைவாணன்' மொஹிடீன் ரஜா – பிரபல எழுத்தாளர், பதிப்பாளர்.*

பாணந்துறை எம்.பி.எம். நிஸ்வான் ஆசிரியர் 1965 முதல் சிறுகதைகள் எழுதி வருகிறார். ஏலவே இவர் சில சிறிய நூல்களைத் தந்திருந்தாலும் சமூக நடைமுறைப் பிரச்சினைகளைக் கொண்டு யதார்த்தமாகப் படைத்த சிறுகதைகளின் தொகுப்பு இது. இலை மறை காயாக இருந்து படைப்பாக்கம் செய்யும் இவருடைய ஆற்றல்கள் இந்நூல் மூலம் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

*– எம்.கே.எம். அஸ்வர் – செயலாளர், முஸ்லிம் சமுதாய மறுமலர்ச்சி இயக்கம்.*

'சிறுகதை' என்ற பெயரில் சிறு - கதைகள் வெளிவந்து கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் சிறுகதைக்குரிய வரைவிலக்கணங்களுடன் எம்.பி.எம். நிஸ்வான் ஆசிரியர் காத்திரமான சிறுகதைகளைப் படைத்தளித்து வருகிறார். சிறுகதை ஆக்கத்துக்கு இவர் தன் அனுபவங்களையே கருப்பொருளாகக் கொள்கிறார். இதனால் இவரது சிறுகதைகளில் யதார்த்தம் இழையோடுகிறது. சிறுகதை எழுதப் புகும் இளம் எழுத்தாளர் கற்றுக் கொள்ள இவரிடம் நிறைய விடயங்களுள்ளன.

*– ஏ.எல்.எம். சத்தார் – உதவி ஆசிரியர், 'நவமணி'.*

ஒரு படைப்பின் வெற்றி ஒரு படைப்பாளியின் வெற்றி. பாணந்துறை எம். பி.எம். நிஸ்வான் ஜே.பி. தன் அனுபவத்தினூடாக தன் நெஞ்சைத் தொட்ட நிகழ்வுகளை வாசகரோடு பகிர்ந்து கொள்வதால் அவர்தம் சிறுகதைகள் வாசகரை ஈர்க்கின்றன. அவர் வெற்றியின் இரகசியம் இதுதான்.

*– யாழூர் ராஸீக் - பிரபல எழுத்தாளர்.*

Cover Design by S.F.L.Mohideen Rajaa.

ISBN 978-955-1716-02-8